அருந்ததியின்
கெட்டி மேளம்
மணமக்கள் அறிமுகத்துடன் சிறப்பு பட்டிமன்றமும்
சனிக்கிழமை காலை 10.30 க்கு
ஞாயிற்றுக்கிழமை 10.30 க்கும்
CAPITAL தொலைகாட்சியில்
18, ராமகிருஸ்ணா அவினியு, வெள்ளவத்தை
20 கே.கே.எஸ் வீதி கொக்குவில்
www.arunthathee.com | 0777 164 524




Follow us:
வாரவெளியீடு
# தமிழன்
THAMILAN
தமிழன்
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 83 பிலவ வருடம், தை மாதம் 10ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை
(23.01.2022) ஹிஜ்ரி-1443, ஜமாஅத்துல் ஆகீர் - 19, 0115886187 - பக்கங்கள் 16+8+8+8
விலை ரூ.50



Since 2014
அருந்ததி
இணைய திருமண சேவை
திருமண தேடலை இலகுவாக்கும் ஒரு முயற்சி
+94777164524
www.arunthathee.com
18, ராமகிருஸ்ணா அவினியு, வெள்ளவத்தை
20 கே.கே.எஸ் வீதி கொக்குவில்


## 'வெடி'மணியம்



"தமிழ்க் கட்சிகள் - 13ஆம் திருத்தம் - இந்தியா" இந்த ஆடு புலி புல்லுக்கட்டு ஆட்டத்தில்;

தமிழ்மக்களுக்கு ஒரு நியாயமான அரசியல் தீர்வு கிடைக்குமா? என்ற பெருங்கேள்வி எங்கள் முன்னே இப்போது எழுந்து நிக்குது!

வடக்கில் 1987இல் ராஜீவ் காந்தி வானத்தில் இருந்து போட்ட "நிவாரணப்பொதி" அந்தக் காலத்தில் ஜே.ஆர். பேரினவாத அரசிற்கு புளியை வயிற்றில் கரைத்தது.

அதுவே இலங்கை - இந்திய ஒப்பந்தம் மற்றும் 13ஆம் திருத்தச்சட்டத்துக்கு வழிகோலியது.

"நிவாரணப்பொதியை" போடுங்கோ எண்டு தமிழ்மக்கள் கேட்காதபோதும்;

இந்தியா தானாகவே ஸ்ரீலங்காவின் இறைமையை மீறி வான்பரப்புக்குள் நுழைந்து ஜே.ஆரின் மூக்கை நறுக்கினார்கள்!

அதன்மூலம் ஸ்ரீலங்கா பேரினவாத அரசுக்கு "நாங்கள் நினைச்சால் தமிழ் ஆயுத இயக்கங்களுக்கு ஆதரவாக போர்க்களத்தில் குதிப்போம்" என்ற மறைமுகமான வெருட்டலை விட்டது இந்தியா!

அந்தநேரத்தில் ஸ்ரீலங்காவுக்கு மறைமுகமாகவேனும் உதவி செய்ய எந்த நாடும் முன்வரவில்லை.

காரணம், இந்து சமுத்திரத்தில் இந்தியா அன்று மிகப்பலமாக இருந்தது. இந்தியாவை மீறி ஸ்ரீலங்கா விவகாரத்தில் எந்த நாடுகளும் நேரடியாகவோ மறைமுகமாகவோ தலையிட விரும்பவில்லை.

ஆனால் இண்டைக்கு நிலைமை தலைகீழாக மாறிவிட்டது.

இந்தியா தன்னுடைய பிழையான வெளியுறவுக் கொள்கையால் ஸ்ரீலங்காவின் "பிடியை" இழந்து பல வருடங்களாகிவிட்டது.

வடக்கு, கிழக்கில் தமிழர்களின் பலம் இழக்கப்படும்போது இந்தியா தன்னுடைய பிராந்திய வல்லாதிக்கத்தையும் பலத்தையும் பாதுகாப்பையும் இழக்கும்.

இது அரிவரி படிக்கும் பெடிக்கும் தெரியும்.

ஆனால், இந்தியா அதையும் மீறி 2009இல் வடக்கு, கிழக்கில் தமிழர்களின் ஆயுத, அரசியல் பலத்தை சீரழித்து சின்னாபின்னமாக்கி அழித்தொழித்தார்கள்!

07 ஆம் பக்கம்

# மூன்றாக உடைகிறது சுதந்திரக் கட்சி!

- அரசியல் செய்தியாளர் -

தற்போதைய அரசிலிருந்து விலகுவதா, இல்லையா என்ற விடயத்தில் எழுந்துள்ள கருத்து முரண்பாட்டினால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மூன்று கூறுகளாக பிளவடையும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

இதன்படி கட்சித் தலைவருடன் ஓர் அணியும், அரசாங்கத்துடன் ஓர் அணியும் இருக்கும் அதேசமயம், பிரதான எதிர்க்கட்சியான....

02 ஆம் பக்கம்




தமிழர்களின் அரசியல் அபிலாஷைகளை 13ஆம் திருத்தத்திற்குள் முடக்கும் சதி முயற்சியை முறியடிக்க அனைத்து தமிழ் மக்களதும் பூரணமான ஆதரவைக்கோரி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியால் யாழ்ப்பாண நகர்ப் பகுதியில் துண்டுப்பிரசுரம் நேற்றைய தினம் வழங்கப்பட்டுள்ளது. - யாழ். நிருபர் -

# பெரும்பான்மை மக்களின் அபிலாஷைகள் நிறைவேற தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் செயற்படுவேன்

## ஜனாதிபதி கோட்டாபய தெரிவிப்பு



பொறுமையுடனும் நன்கு திட்டமிடப்பட்ட வகையிலும் எடுக்கப்பட்ட தீர்மானங்களின் பிரதிபலன்கள் தற்போது யதார்த்தமாகி வருகின்றன. தொலைநோக்குப் பார்வையும் நடைமுறைச் சிந்தனையும்கொண்ட தலைவரான ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மீது நம்பிக்கை வைத்து, மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்ற ஒன்றிணைவது அனைத்துத் தரப்பினரதும் பொறுப்பு என மஹா சங்கத்தினர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஜனாதிபதி அலுவலகத்தில்...

02 ஆம் பக்கம்

# சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பக அறிக்கை இலங்கையின் நிலைவரத்தினை மிகைப்படுத்தியது

## வெளிவிவகார அமைச்சு விசேட அறிக்கை

மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் இலங்கைப் பிரிவான 'உலக அறிக்கை 2022', நாட்டின் தற்போதைய மனித உரிமைகள் நிலைமையை மிகைப்படுத்தப்பட்ட மற்றும் தேவையற்ற எதிர்மறையான வகையில் சித்திரிப்பதாக வெளிநாட்டு அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் வருடாந்த அறிக்கை குறித்து இலங்கை வெளிவிவகார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளதாவது:

மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் இலங்கைப் பிரிவான 'உலக அறிக்கை 2022', நாட்டின் தற்போதைய மனித உரிமைகள் நிலைமையை மிகைப்படுத்தப்பட்ட மற்றும் தேவையற்ற...

02 ஆம் பக்கம்

# வர்த்தகருக்கு இலவச காணி வழங்க அமைச்சர் சந்திரசேன முயற்சி!

## எதிர்ப்பினால் அமைச்சரவைப் பத்திரம் வாபஸ்

கடுவெல பிரதேசத்திற்கு அருகில் அரசாங்கத்திற்கு சொந்தமான நிலையிலுள்ள பழைய உருக்கு கூட்டுத்தாபனத்தின் 185 ஏக்கர் காணியை எவ்வித கட்டணமுமின்றி (இலவச மானியம்) பிரபல வர்த்தகர் ஒருவருக்கு வழங்குமாறு காணி அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன கடந்த வாரம் அமைச்சரவையில் முன்வைத்த யோசனைக்கு பல அமைச்சர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர். இதனால் இறுதிநேரத்தில் அமைச்சரவைப் பத்திரத்தை அமைச்சர் சந்திரசேன வாபஸ் பெற்றார்.

02 ஆம் பக்கம்

மாஸ்க் அணிய விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக இந்திய ஒடிசா மாநில புரி கடற்கரையில் வரையப்பட்டுள்ள மணற்சிற்பம்.




# விலங்கியல் திணைக்களத்தின் பணிப்பாளர் பதவி விலகல்



விலங்கியல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சர்மிளா ராஜபக்ஷ தனது பதவியை தற்காலிகமாக இராஜினாமா செய்துள்ளார்.

நாச வேலைகள் மற்றும் மோசடிகள் தொடர்பில் முறையான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு தற்போதைய ஆபத்தான நிலைமையை நீக்கும் வரை பதவி விலகுவதாக....

02 ஆம் பக்கம்




5 ஆம் ஆண்டு புலமைப்பரீசையில் சிறந்து விளங்கும் சிறார்களுக்கு

ரூபா 20 மில்லியனுக்கு மேற்பட்ட பரிசில்கள் மற்றும் புலமைப்பரிசில்கள்
Sisu Udana

- நாடு பூராகவும் அதி உயர் திறமைகளை வெளிப்படுத்தும் திறமைசாலிகளுக்கு பெறுமதிமிக்க புலமைப்பரிசில்கள்.
- புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள் வெளியாகும் திகதிக்கு முன்னர் சிசு உதான கணக்கில் ரூ.5000 அல்லது அதற்கு மேலதிகமான தொகையினை மீதியாக கொண்டிருக்கும் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு விசேட பரிசில்கள்.

இன்றே உங்கள் பிள்ளைக்கான சிசு உதான வங்கிக் கணக்கினை ஆரம்பியுங்கள்.


பிரகாசமான நாளைக்காக இன்றே சேமியுங்கள்

www.peoplesbank.lk
1961 PEOPLE'S BANK CALL CENTRE
PEOPLE'S BANK
Pride of the Nation
AA- (lka) Fitch Rating, AAA- Brand Finance Rating



LK Newspapers
Viber Community






இலவசமாக எல்லையின்றி அனுபவியுங்கள்
Viber
விசே
உடன் தமாஷாகுங்கள்

SLT Mobitel வழங்கும் anytime வைபர் டேட்டா பெக்,
SLT Mobitel Prepaid - ரூ.399
மற்றும் Postpaid - ரூ.1,290 இலிருந்து
மேலதிக விபரங்களுக்கு www.mobitel.lk/freeviber இற்குள் பிரவேசியுங்கள் அல்லது SLT-Mobitel selfcare app அல்லது #170# இப்போதே அழையுங்கள்

TRC Code: TRC/M/PRO/21/07 | TRC/M/SEA/21/06
Rakuten Viber
SLTMOBITEL

# கிளிநொச்சியில் தீயில் எரிந்து தாயும் சேயும் உயிரிழப்பு



(மு.தமிழ்ச்செல்வன்)

கிளிநொச்சி தர்மபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புன்னைநீராவி நாதன் குடியிருப்புப் பகுதியில் கடந்த வியாழக்கிழமை (20) நள்ளிரவு 11 .50 மணியளவில் 37 வயதுடைய ஆனந்தராசா சீதேவியும் (07 பிள்ளைகளின் தாயார்) அவரது மகள் 17 வயதுடைய லக்ஷிகாவும் தீயில் எரிந்து கருகிய நிலையில் காணப்பட்டுள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பாக நேற்று முன்தினம் (21) தர்மபுரம் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

நேற்று முன்தினம் (21) தர்மபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புன்னைநீராவி நாதன் திட்ட கிராமத்தில் தீயில் கருகிய நிலையில் தாயினதும் மகளினதும் சடலத்தை மாவட்ட நீதவான், மாவட்ட சட்ட வைத்திய அதிகாரியுடன் சென்று பார்வையிட்டு பிரேத பரிசோதனை மேற்கொள்ளும்படியும், அதேவேளை பகுப்பாய்வுக்குட்படுத்துமாறும் உத்தரவிட்ட நிலையில் சடலம் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பாக தர்மபுரம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். குறித்த சம்பவம் தொடர்பாக எவரும் கைதுசெய்யப்படவில்லை. மேலும் இச்சம்பவம் கொலைச் சம்பவம் எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

## விலங்கியல்....

ஜனாதிபதியின் செயலாளர் மற்றும் வனஜீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஆகியோருக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில் கோரியுள்ளார். 14 நாட்களுக்குள் விசாரணை நடத்தி மீண்டும் பணியில் சேரும் சூழலை உருவாக்குவேன் என்றும் இல்லையேல் நிரந்தரமாக இராஜினாமா செய்வேன் என்றும் அக்கடிதத்தில் கூறியுள்ளார்.

## மூன்றாக உடைகிறது...

ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைய ஒரு அணி தயாராகி வருவதாக தெரியவருகிறது.

அரசுடன் இப்போதைக்கு முரண்படக்கூடாதென தெரிவிக்கும் சுதந்திரக் கட்சியின் மூத்த உறுப்பினர்கள் பலர் அரசில் தொடர்ந்தும் அங்கம் வகிக்கவுள்ளனர்.

அதேசமயம் அரசிலிருந்து வெளியேற வேண்டுமென வலியுறுத்துவோர் கட்சித் தலைவரின் வழிகாட்டலை பின்பற்றவுள்ளனர். இதர சில உறுப்பினர்கள் எதிர்க்கட்சி வரிசையில் அமரவுள்ளனர்.

இந்த வெடிப்பு விரைவில் ஏற்படுமென உயர்மட்ட அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன. அரசின் முக்கிய பிரமுகர் ஒருவரே இந்த முரண்பாடுகளின் பின்னணியில் இருப்பதாக அறியமுடிந்தது.

## சர்வதேச மனித...

எதிர்மறையான வகையில் சித்தரிப்பதாக வெளிநாட்டு அமைச்சு வருத்தத்துடன் குறிப்பிட்டுள்ளது.

மனித உரிமைகள் தொடர்பான விடயங்களில் மனித உரிமைகள் கண்காணிப்பகம் போன்ற சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் உட்பட சர்வதேச சமூகத்துடன் ஆக்கபூர்வமாக ஈடுபடுவதற்கான கொள்கையை இலங்கை பின்பற்றுகின்றது. எவ்வாறாயினும், குறிப்பாக சவாலான உலகளாவிய பொருளாதார மற்றும் சமூக சூழலின் போது பரபரப்பான மற்றும் பக்கச்சார்பான அறிக்கையிடல் உள்நாட்டு முரண்பாடுகளை தீவிரப்படுத்தி மோசமான நிலைமையைத் தோற்றுவிக்கின்றது. பொறுப்பான, சமநிலையான மற்றும் பாரபட்சமற்ற அறிக்கையிடலின் முக்கியத்துவத்தை நாங்கள் முன்னிலைப்படுத்துகின்றோம்.

உள்நாட்டில் வடிவமைக்கப்பட்ட மற்றும் நிறைவேற்றப்பட்ட நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் செயன்முறையின் மூலம் நிலையான சமாதானத்தை நிலைநாட்டுவதில் இலங்கை ஈடுபட்டுள்ளதாக கடந்த ஆண்டு செப்டெம்பர் மாதம் ஜெனீவாவில் நடைபெற்ற மனித உரிமைகள் பேரவையில் வெளிநாட்டு அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்தார். எமது சொந்த அரசியலமைப்பு மற்றும் எமது சர்வதேசக் கடமைகளுக்கு இணங்க, மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும் இலங்கை தனது நீண்டகால அர்ப்பணிப்பை மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

கடந்த 18ஆம் திகதி இலங்கை நாடாளுமன்றத்தின் 9ஆவது கூட்டத்தொடரின் தொடக்கத்தில் ஜனாதிபதியினால் அண்மையில் இந்தச் செய்தி மீண்டும் வலியுறுத்தப்பட்டது.

இலங்கை அரசாங்கம் பொருளாதார, சமூக மற்றும் மனித அபிவிருத்தி மற்றும் நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைதல் உட்பட அனைத்து துறைகளிலும் தனது ஆணையை நிறைவேற்றுவதில் அதன் மக்களுக்கு பொறுப்புக்கூற வேண்டும்.

அதே நேரத்தில், கொவிட்-19 தொற்றுநோயால் ஏற்பட்ட செயற்பாட்டு, பொருளாதார மற்றும் மனிதத் தடைகள் இருந்தபோதிலும், இலங்கை மக்களின் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்ட மற்றும் சர்வதேச ரீதியாக வலியுறுத்தப்பட்ட போருக்குப் பிந்தைய நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை வழங்குவதில் அரசாங்கம் முக்கியமான முன்னேற்றத்தை அடைந்துள்ளது. சுதந்திரமான உள்நாட்டு நிறுவனங்கள், காணாமல் போனோர் அலுவலகம், இழப்பீடுகள் அலுவலகம், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அலுவலகம் மற்றும் இலங்கையின் நிலைபேறான அபிவிருத்தி சபை ஆகியன இந்த முயற்சிக்கு முக்கிய உறுதுணையாக உள்ளன. இந்த நிறுவனங்களின் சுதந்திரமான சட்டபூர்வ ஆணைகளை நிறைவேற்றுவதற்காக நிதி மற்றும் ஏனைய ஆதரவுடன் நாங்கள் அதிகாரம் பெற்றுள்ளோம். மனித உரிமைகள் மற்றும் நல்லிணக்கம் குறித்த உள்நாட்டு செயன்முறைகளின் மூலம் ஏற்பட்ட முன்னேற்றம் தொடர்பான வழக்கமான புதுப்பிக்கப்பட்ட தகவல்கள் ஜெனீவாவில் உள்ள மனித உரிமைகள் பேரவையிலான இலங்கையின் அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

மனித உரிமைகள் கண்காணிப்பகத்திற்கு நாங்கள் அளித்த பதிலில், பயங்கரவாத தடைச் சட்டத்திலான திருத்தம், பொறுப்புக்கூறல், பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைதிகளை விடுவித்தல், ஒன்று கூடுவதற்கான சுதந்திரம், கொவிட் தொற்றுநோய் மற்றும் முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்தில் முன்மொழியப்பட்ட திருத்தங்கள் போன்ற பலதுறைகள் தொடர்பான சமீபத்திய மாதங்களில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை நாங்கள் முன்னிலைப்படுத்தியுள்ளோம்.

சர்வதேச செயற்பாட்டாளர்களைப் பொறுத்தமட்டில், எமது சர்வதேச பங்காளிகளான ஐக்கிய நாடுகள் சபை மற்றும் உள்ளூர் மற்றும் சர்வதேச தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் நல்லெண்ணம் மற்றும் ஆலோசனைகளை அரசாங்கம் பெரிதும் மதிப்பதாக நாம் குறிப்பிட்டுள்ளோம். அவர்களுடனான எமது தொடர்ச்சியான தொடர்புகளைத் தொடர்ந்துள்ள அதேவேளையில், இலங்கையுடனான அவர்களது வழக்கமான ஈடுபாட்டையும் ஊக்குவித்துள்ளோம். விஜயங்களை மேற்கொள்ளும் இருதரப்பு உயரதிகாரிகள், ஐக்கிய நாடுகள் சபையின் சிரேஷ்ட அதிகாரிகள் மற்றும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் விசேட ஆணையுடையவர்கள் உட்பட பல பரிமாற்றங்களின்போது, நாம் அனைத்து வகையான உள்நாட்டு உரையாடல்களையும் அணுகுவதற்கு வசதிகளை ஏற்படுத்தி, அவர்களது ஊக்கம், ஆலோசனை மற்றும் கரிசனைகளுக்கு திறந்த நிலையில் இடமளித்துள்ளோம்.

அபிவிருத்தி நல்லிணக்கம் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான பல விடயங்களில் நிறுவப்பட்ட தொடர்பு மற்றும் நிபுணத்துவம் ஆகியவற்றின் அடிப்படையில் எமது உள்நாட்டு சிவில் சமூகப் பங்காளிகளுடனான எமது தொடர்புகளை நாம் குறிப்பாக மதிக்கின்றோம். நிலையான அபிவிருத்தி இலக்குகள் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான விடயங்களை அடைந்து கொள்வதற்கான எமது முயற்சிகளில் அவர்களை ஈடுபடுத்தியுள்ளோம். ஒரு பரந்த முனையில், நாம் முன்னோக்கிச் செல்லும்போது எம்முடன் பங்காளியாக ஈடுபடுவதற்காக இலங்கையின் புலம்பெயர் குழுக்களுக்கும் நாம் அழைப்பு விடுத்துள்ளோம்.

மனித உரிமைகள் பேரவையில் இலங்கையின் நிலைப்பாடு தொடர்பாக, 2021 செப்டெம்பர் மாத சபை அமர்வில் நாம் குறிப்பிட்டது போல, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பொறிமுறைகள் மற்றும் சபையுடன் இலங்கை தனது நீண்டகால ஒத்துழைப்பைத் தொடரும். உள்நாட்டு செயன்முறைகள் மற்றும் நிறுவனங்களின் மூலம் பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கத்தை நிவர்த்தி செய்வதற்கான எமது உறுதிப்பாட்டை நாம் வழங்குகின்றோம்.

வெளிநாட்டு அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் குறிப்பிட்டது போல, 'எமது சவால்களை ஒப்புக்கொள்வதில் நாங்கள் திறந்த நிலையில் காணப்படும் அதேவேளை, பொறுப்பான மற்றும் ஜனநாயக அரசாங்கம் என்ற வகையில், பொறுப்புக்கூறல், நல்லிணக்கம், மனித உரிமைகள், சமாதானம் மற்றும் நிலையான அபிவிருத்தி தொடர்பான முழு அளவிலான பிரச்சினைகளிலும் உறுதியான முன்னேற்றத்தை அடைந்து கொள்வதற்கு நாங்கள் அர்ப்பணிப்புடன் இருக்கின்றோம்' தீர்மானம் 46/1 இல் உள்ள சாட்சியங்களை சேகரிக்கும் பொறிமுறையானது, சபையில் பிளவுக்கு வழிவகுத்தமையானது தேவையற்றதும், உதவியற்றதும் மற்றும் இலங்கையில் அரசியல் மயமாக்கல் மற்றும் துருவமுனைப்புக்கு வழிவகுக்கும் என இலங்கை கருதுகின்றது.

## பெரும்பான்மை...



நேற்று முன்தினம் (21) இடம்பெற்ற பௌத்த ஆலோசனை சபையின் 12ஆவது கூட்டத்திலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

கொவிட் தொற்றிலிருந்து மக்களை மீட்டெடுக்கவும் சவால்கள் மற்றும் பொருளாதார நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்து நாட்டை மீளக் கட்டியெழுப்புவதற்கும், ஜனாதிபதியின் பங்களிப்பைப் பாராட்டி மஹா சங்கத்தினர் பௌத்த ஆலோசனைச் சபையில் தமது கருத்துகளைத் தெரிவித்தனர்.

அதலபாதாளத்துக்கு சென்றுகொண்டிருந்த நாட்டையும் தேசத்தையும், பாரம்பரியத்தையும் காப்பாற்றக் கூடிய ஒரே தலைவர் என்ற வகையில் கோட்டாபய ராஜபக்ஷ மீது வைத்திருந்த நம்பிக்கை வீணாகவில்லை எனவும், கூரகலை புனித பிரதேசம், முஹுது மஹா விஹாரை உள்ளிட்ட வடக்கு, கிழக்கில் உள்ள விஹாரைகளைப் பாதுகாத்து, நாட்டுக்கு உரிமையாக்குவதற்கு கடந்த இரண்டு வருடங்களில் ஜனாதிபதி மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்து மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும் என, மஹா சங்கத்தினர் சுட்டிக்காட்டினர்.

அதேபோன்று, நாட்டு மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பிலான உண்மைத் தகவல்களை வழங்குவதும் தீர்வுகளைப் பெற்றுக் கொடுப்பதில் ஜனாதிபதிக்கு ஒத்துழைப்பு வழங்குவதும், பௌத்த ஆலோசனைச் சபையின் பொறுப்பாகும் என்றும் மஹா சங்கத்தினர் குறிப்பிட்டனர்.

சட்டங்கள் மற்றும் கலந்துரையாடல்களை நிறைவேற்றுவதற்கு மஹா சங்கத்தினரின் வழிகாட்டலை எதிர்பார்ப்பதாக ஜனாதிபதி இங்கு குறிப்பிட்டார். அழியும் தறுவாயில் இருந்த சிங்கள பௌத்த பாரம்பரியத்தை கொவிட் தடைகளுக்கு மத்தியிலும் பாதுகாத்து, பெரும்பான்மை மக்களின் அபிலாஷைகள் நிறைவேற்றப்பட்டதைப் போன்று, அந்த வரலாற்றுச் சிறப்புமிக்க தலங்களை அபிவிருத்தி செய்வதற்கு தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் செயற்படுவதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

பௌத்த ஆலோசனை சபையின் மஹா சங்கத்தினர், இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் காமினி செனரத், ஜனாதிபதியின் தலைமை ஆலோசகர் லலித் வீரதுங்க, அமைச்சுகளின் செயலாளர்கள் மற்றும் அரச அதிகாரிகள் ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர்.

## வர்த்தகருக்கு...

இந்த ஒப்பந்தத்திற்கு அமைச்சர்களான மஹிந்தானந்த அளுத்கமகே, வாசுதேவ நாணயக்கார, உதய கம்மன்பில மற்றும் விமல் வீரவங்ச ஆகியோர் கடும் எதிர்ப்பை தெரிவித்துள்ளனர். இவ்வாறு காணி வழங்கப்படுமாயின், வோட்டர்ஸ் எட்ஜ் காணி பரிமாற்றத்தை நீதிமன்றம் முன்னர் இரத்துச் செய்திருந்தநிலையில், அனுமதியும் இரத்துச் செய்யப்பட்டு, காணி மீண்டும் அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்படும் என அமைச்சர் பெசில் ராஜபக்ஷ இதன்போது தெரிவித்துள்ளார்.

இந்த வழக்கின் சட்டநிலை குறித்து அமைச்சரவை செயலாளரிடம் அமைச்சர்கள் கருத்து கேட்டனர். எந்தவொரு அரசாங்க நிலத்தையும் மத மற்றும் கலாசார நோக்கங்களுக்காக மட்டுமே இலவச மானியத்தின் கீழ் மாற்ற முடியும் என்று மூத்த நிர்வாக அதிகாரியான அமைச்சரவை செயலாளர் டொனால்ட் பெர்னாண்டோ அப்போது சுட்டிக்காட்டியுள்ளார். இலவச மானியங்கள் மூலம் அல்லாமல் அரசின் மதிப்பீட்டின் அடிப்படையில் நீண்ட கால குத்தகை அடிப்படையில் நிலங்கள் வணிக நிறுவனங்களுக்கு மாற்றப்பட வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இவ்வாறாக காணி பரிமாற்றத்திற்கு கடும் எதிர்ப்பு கிளம்பியதால், காணி பரிமாற்றம் தொடர்பான அமைச்சரவைப் பத்திரத்தை அமைச்சர் சந்திரசேன இறுதிநேரத்தில் வாபஸ் பெற நேரிட்டதாக தெரிவிக்கப்படுகிறது.


தமிழன் குறுஞ்செய்திகளை உடனுக்குடன் பெற...

பதிவு செய்வதற்கு

Dialog

Thamilan என்று Type செய்து 7172 என்ற இலக்கத்துக்கு SMS செய்க

SLTMOBITEL The Connection

REG(இடைவெளி)Thamilan என்று Type செய்து 77111 என்ற இலக்கத்துக்கு SMS செய்க

airtel

ACT(இடைவெளி)TAM1 என்று Type செய்து 7544 என்ற இலக்கத்துக்கு SMS செய்க

ACT(இடைவெளி)TAM என்று Type செய்து 7544 என்ற இலக்கத்துக்கு SMS செய்க

தமிழன்

மாதமொன்றுக்கு ரூ.30 + வரி அடங்கலாக

தமிழன் வாசகர்களே!

தமிழன் இணையத்தளத்தில் வெளியாகும் செய்திகளை

www.thamilan.lk

ஊடாக மாத்திரமின்றி

www.thamilannews.com

மூலமாகவும் உடனுக்குடன் அறிந்துகொள்ளலாம்

தமிழன் தமிழன்






மரண அறிவித்தல், நினைவஞ்சலி, மற்றும் பிறந்தநாள் விளம்பரங்களை குறைந்த கட்டணத்தில் பிரசுரிக்கலாம்

அழையுங்கள் 0761393805

# இந்திய அடிப்படை அமைப்புகள் தமது எஜமான் விரும்பியதற்கேற்ப செயற்படத் தயாராக உள்ளன!

## கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குற்றச்சாட்டு

(வவுனியா நிருபர்)

ஒற்றையாட்சிக்குள் முடக்கும் 13ஆவது திருத்தச் சட்ட விடயத்தில் இந்திய அடிப்படை அமைப்புகள் தமது எஜமான் விரும்பியதற்கு ஏற்ப செயற்பட தயாராக இருக்கிறார்கள் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் வவுனியா மாவட்ட செயற்பாட்டாளர்களுடன் நேற்றுமுன்தினம் (21) மாலை இடம்பெற்ற கலந்துரையாடலின்பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வவுனியாவில் எமது கட்சி செயற்பாட்டாளர்களும் சிவில் அமைப்புகளும், சிவில் செயற்பாட்டாளர்களும் சந்தித்து தமிழ்க் கட்சிகள் என்ற பெயரில் இயங்கிக் கொண்டிருக்கும் தமிழ் முகவர் அமைப்புகள் சேர்ந்து கலந்துரையாடி தமிழ் மக்களுடைய அரசியல் அபிலாஷைகளை ஒற்றையாட்சிக்குள் முடக்குகின்ற சதி முயற்சியை முறியடிக்க தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் சிவில் சமூகங்களும் இணைந்து முயற்சிகளை முன்னெடுத்துள்ளோம்.

இது தொடர்பில் மக்களுக்கு தெளிவுபடுத்தி, எதிர்வரும் 30ஆம் திகதி யாழில் நடைபெறும் எதிர்ப்பு போராட்டம் முதலாவது நடவடிக்கையாக அமையும். அதன் பின் ஒவ்வொரு மாவட்டத்திலும் இந்த விழிப்புணர்வு போராட்டம் நடைபெறும். அதன் பின் ஒவ்வொரு கிராமங்களிலும் வீடுவீடாகச் சென்று மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளோம்.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கூட்டத்தில் தேசியத்தை நேர்மையாக நேசிக்கும் அனைத்து தரப்புகளுடனும் சேர்ந்து இந்த முயற்சியை முன்னெடுக்க ஒன்றிணைந்து செயற்பட விரும்புகின்றோம் எனக் கேட்டிருந்தோம். அதே கோரிக்கையை நாம் வவுனியாவிலும் கோருகின்றோம்.

சர்வதேச ரீதியில் இலங்கையில் இருக்கக் கூடிய அனைத்து மக்கள் கூட்டங்களும் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒரு அரசியலமைப்பு நிறைவேறுவது அத்தியாவசியம் என்றும் அப்படி அனைத்து தரப்புகளும் ஏற்றுக்கொள்ளும் அரசியலமைப்பு ஒன்று நிறைவேற்றப்பட்டால் தான் விசேடமாக தமிழ்த் தரப்புக்கு இனப்பிரச்சினை தீர்க்கப்பட்டதாக கருதப்படும். அதுவரைக்கும் இனப்பிரச்சினை நீடிக்கின்றது என்ற செய்தியையே வழங்கும்.

கோட்டாபய ராஜபக்ஷ புதிய அரசியலமைப்பு ஒன்றை கொண்டு வர எத்தனித்துள்ளார். அவர் இந்த புதிய அரசியலமைப்பை இந்தியாவிற்கு சீனாவை காட்டி சீனாவை நாங்கள் தவிர்க்க விரும்பினால் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை ஒற்றையாட்சிக்குள் முடக்க நீங்கள் ஒத்துழைக்க வேண்டும். அதனை நீங்கள் செய்தால் நாம் சீனாவின் விடயத்தில் பரிசீலிக்கலாம் என்ற ஒரு கருத்தை சொல்ல இருக்கும் பின்னணியில் இந்தியாவின் கடுமையான அச்சுறுத்தல் காரணமாகவும், கட்டளையும் தான் அவர்களுடைய முகவர் அமைப்புகள் இன்று ஒன்று சேர்ந்து 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துமாறு இந்தியப் பிரதமரிடம் இந்தியா விரும்பி கேட்டதை தங்களுடைய கோரிக்கையாக முன்வைத்துள்ளார்கள்.

எங்களைப் பொறுத்தவரை ஒற்றையாட்சிக்குள் எந்தவொரு இடத்திலும் தமிழருக்கு தீர்வு வரப்போவதில்லை. மாறாக ஒற்றையாட்சி அரசியலமைப்பை முன்னைய ஆட்சிக் காலத்தில் ஏக்கிய ராச்சிய என ஏற்றுக் கொண்டது. ஒற்றையாட்சி என்ற சிங்கள வசனத்தை ஒருமித்த நாடு என தமிழ் மக்களுக்கு பூச்சாண்டி காட்டி ஏக்கிய ராச்சிய அரசியலமைப்பை தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ள வைக்கும் சதி ஒன்றை செய்தது. அதனை நாம் முறியடித்தோம்.

13ஆவது திருத்தச் சட்டம் அல்லது இன்னொரு வடிவமாக இருக்கலாம், ஒற்றையாட்சியை நிராகரிப்பது தான் எம்மிடம் இருக்கும் ஒரே ஒரே வழி. இலங்கையில் நிறைவேறியிருக்கின்ற மூன்று அரசியலமைப்புகளையும் நாம் நிராகரித்திருப்பதனால் தான் போர் முடிந்து 13 வருடங்களுக்கு பிறகும் இந்த தீவில் ஒரு இனப்பிரச்சினை இருக்கின்றது என பேசக் கூடியதாக இருக்கின்றது.

அந்த பேச்சுக்கே இடமில்லாமல் செய்யும் அளவுக்கு இந்த இந்திய அடிப்படை அமைப்புகள் தமது எஜமான் விரும்பியதற்கேற்ப செயற்பட தயாராக இருக்கிறார்கள்.



நான்காவது அரசியலமைப்பு வெறுமனே நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் மட்டும் நிறைவேறுவது ஆபத்தானது. மக்களது சர்வஜன வாக்கெடுப்புக்கு விடாது வெறுமனே நாடாளுமன்றத்தில் இருக்கக் கூடிய மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேறக் கூடிய ஆபத்தும் இருக்கிறது.

நாடாளுமன்றத்தில் இன்றைக்கு இருக்கின்ற வட கிழக்கு பகுதியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 18 நாடாளுமன்ற உறுப்பினர்களில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியாகிய நாம் இருவரை தவிர மற்ற எல்லோரும் ஒற்றையாட்சியை ஏற்க தயாராகி விட்டார்கள். அதை முறியடிப்பதற்கும் மக்கள் விழிப்புணர்வு அடைந்து இந்த மோசமான துரோகத்திற்கு எதிராக அணி திரள வேண்டும்.

இதற்கு எதிராக வன்னியில் மிகப்பெரிய அளவில் போராட்டம் நடத்த தயாராகி வருகின்றோம். தமிழ்த் தேசத்தின் நலன் கருதி இந்த தமிழ்த் தேசத்தை நேசிக்கும் ஒவ்வொரு தரப்பும் எம்மோடு கைகோர்த்து இந்த விடயத்தில் ஒன்றுபட வேண்டும் என உரிமையோடு கேட்டுக் கொள்கின்றேன் எனத் தெரிவித்தார்.

# நொச்சியாகம விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

(ரஸீன் ரஸ்மின்)

புத்தளம் - திருகோணமலை பிரதான வீதியின் நொச்சியாகம நகரில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற வீதி விபத்தில் 45 வயதுடைய நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சம்பவம் இடம்பெற்றபோது, கலாஓயாவை நோக்கி பயணம் செய்த தனியார் பஸ் ஒன்று எதிர்த்திசையில் பயணித்த மோட்டார் சைக்கிளுடன் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் படுகாயமடைந்த மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரை அங்கிருந்தவர்கள் உடனடியாக நொச்சியாகம வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதித்துள்ளனர்.

எனினும், குறித்த மோட்டார் சைக்கிளின் பின்னால் இருந்து பயணம் செய்த நபர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

அத்துடன், மோட்டார் சைக்கிளை செலுத்திச் சென்ற நபர் மேலதிக சிகிச்சைக்காக அநுராதபுரம் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார் எனவும் பொலிஸார் கூறினர்.

# கரைதுறைப்பற்று பிரதேச சபைக்கு 15 பேர் அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக நியமனம்

(முல்லைத்தீவு நிருபர்)

முல்லைத்தீவு, கரைதுறைப்பற்று பிரதேச சபைக்கு புதிதாக 15 பேர், அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக நேற்று முன்தினம் (21) நியமனம் பெற்றுள்ளனர். கரைதுறைப்பற்று பிரதேச சபைக்குட்பட்ட 13 வட்டாரங்களில் ஒவ்வொரு வட்டாரத்திற்கும் பொறுப்பாக தலா ஒவ்வொரு அபிவிருத்தி உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டுள்ளார். அதேவேளை, இரு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கரைதுறைப்பற்று



பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் பணியமர்த்தப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# முல்லையில் 7ஆயிரம் ஹெக்டேயர் நிலத்தை அபகரிக்க முயற்சி!

## சார்ள்ஸ் எம்.பி. சபையில் சுட்டிக்காட்டு

முல்லைத்தீவு மாவட்டத்தில் மக்களின் விவசாய மற்றும் பூர்வீக நிலங்களாகவுள்ள 7091.64 ஹெக்டேயர் நிலத்தை சுவீகரிக்கும் வர்த்தமானி அறிவித்தலை விடுப்பதற்கு வனவளத் திணைக்களம் முயற்சிக்கிறது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட எம்.பியான சார்ள்ஸ் நிர்மலநாதன் குற்றம் சாட்டினார்.

அத்துடன், இந்த நடவடிக்கையை உடனடியாக நிறுத்துமாறு வன ஜீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்பு அமைச்சர் சீ.பீ. ரத்நாயக்கவிடம் கோரிக்கை விடுத்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற, ஜனாதிபதியின் கொள்கை விளக்கவுரை மீதான மூன்றாம் நாள் சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றிய போதே இவ்வாறு கோரிக்கை விடுத்த அவர் மேலும் கூறுகையில்,

வனவளத் திணைக்களம் முல்லைத்தீவு மாவட்டத்தில் நிலங்களை அபகரிக்கின்ற முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது. குறிப்பாக வடக்கு, கிழக்கில் இருக்கின்ற நிலங்களைக் குறி வைத்து அரசும் வன இலாகாவும் மோசமாக செயற்படுகின்றன.

இதன் ஒரு நடவடிக்கையாக வனவளத் திணைக்களத்தால் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவில் 2749. 53 ஹெக்டேயரும் கரைத்துறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் 2275. 61 ஹெக்டேயரும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவில் 1764.81 ஹெக்டேயரும் மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவில் 530.37 ஹெக்டேயரும் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் 286.74 ஹெக்டேயரும் வெலிஓயா பிரதேச செயலாளர் பிரிவில் 14.95 ஹெக்டேயரும் என மொத்தமாக 7091.64 ஹெக்டேயர் மக்களின் விவசாய நிலங்களை, அவர்களின் பூர்வீக நிலங்களை சுவீகரிக்க வர்த்தமானி அறிவித்தல் வெளியிட முயற்சி எடுக்கப்படுகின்றது.

எனவே, இந்த முயற்சியை உடனடியாக நிறுத்த வேண்டுமென வனஜீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்பு அமைச்சர் சீ.பீ. ரத்நாயக்கவிடம் கோரிக்கை விடுக்கின்றேன் என்றார்.

# இளவாலையில் வழிப்பறிக்கொள்ளையில் ஈடுபட்ட மூவர் யாழ். குற்றத்தடுப்புப் பொலிஸாரால் கைது



(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம், சுன்னாகம் மற்றும் இளவாலையில் வழிப்பறிக்கொள்ளையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் மூவர் யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்புப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களிடமிருந்து 7 பவுண் திருட்டு நகைகள் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். வீதிகளில் செல்லும் பெண்களிடம் நகைகள் அபகரிக்கப்படுவது தொடர்பில் அண்மையில் சுன்னாகம் மற்றும் இளவாலை பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகள் செய்யப்பட்டன.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் மூத்த பொலிஸ் அத்தியட்சகருக்கு கீழான மாவட்ட குற்றத்தடுப்புப் பொலிஸ் பிரிவு விசாரணைகளை முன்னெடுத்தது. பிரிவின் பொறுப்பதிகாரி தலைமை பொலிஸ் பரிசோதகர் நிஹால் பிரான்சிஸ் தலைமையில் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் புத்தூரைச் சேர்ந்த மூவர் கைதுசெய்யப்பட்டனர்.

அவர்களிடமிருந்து 7 பவுண் தங்க நகைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேகநபர்களிடமிருந்து நகைகளை கொள்வனவுசெய்த சுன்னாகம் மற்றும் யாழ்ப்பாணம் நகர நகைக்கடை உரிமையாளர்கள் இருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் கூறினர்.

# கஞ்சா போதைப்பொருளுடன் தம்பதியர் சுழிபுரத்தில் கைது

(யாழ். நிருபர்)

கஞ்சா போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் சுழிபுரத்தைச் சேர்ந்த தம்பதியர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

காங்கேசன்துறை பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகரின் கீழான மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவும் கடற்படையும் இணைந்து நேற்று முன்தினம் நடத்திய தேடுதல் நடவடிக்கையில் இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

மூன்று உரப்பைகளில் பொதியிடப்பட்ட நிலையில் சுமார் 85 கிலோகிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சுழிபுரம் பறாளை பகுதியிலுள்ள வீட்டு வளாகத்திலிருந்து கஞ்சா போதைப்பொருள் கைப்பற்றப்பட்ட நிலையில் 36 வயதுடைய கணவரும் அவருடைய மனைவியும் கைதுசெய்யப்பட்டனர் என்றும் பொலிஸார் கூறினர். சந்தேக நபர்கள் இருவரும் காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தில் முற்படுத்தப்பட்டுள்ளனர்.





தரம் - 5 மாணவர்களுக்கான 2021ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை கொவிட்-19 தொற்று காரணமாக பிற்போடப்பட்டிருந்த நிலையில், நேற்றுக் காலை 9.30 மணிக்கு யாழில் ஆரம்பமாகியது.

# புலமைப்பரிசில் பரீட்சை நேற்று நடந்தேறியது



(க.கிஷாந்தன்)

நாடு பூராகவும் 2021ஆம் ஆண்டு தரம் ஐந்து மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சையானது நேற்றுக் காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகியது. சுமார் 3 இலட்சத்து 40 ஆயிரத்து 508 மாணவர்கள் பரீட்சைக்கு தோற்றினர்.

கொரோனா தொற்றுக்குள்ளான மாணவர்களுக்காக 108 பரீட்சை மத்திய நிலையங்கள் அமைக்கப்பட்டு, மொத்தமாக 2,943 மத்திய நிலையங்களில் பரீட்சை நடைபெற்றது.

இந்தப் பரீட்சையில் தமிழ் மொழி மூலம் 85 ஆயிரத்து 446 பேரும், சிங்கள மொழி மூலம் 2 இலட்சத்து 55 ஆயிரத்து 63 பேரும் தோற்றினர்.

புலமைப் பரிசில் பரீட்சைக்கான முதலாவது வினாத்தாளுக்கான பரீட்சை காலை 9.30 இலிருந்து 10.15 வரைக்குமான 45 நிமிடங்களை கொண்டிருந்தது. இரண்டாம் வினாத்தாள் முற்பகல் 10.45 மணிமுதல் நண்பகல் 12 மணி வரைக்குமான 1 மணி நேரம் 15 நிமிடங்களை கொண்டிருந்தது. அந்தவகையில் மலையகத்திலும் மாணவர்கள் மிக ஆர்வத்துடன் பரீட்சை மண்டபத்திற்கு செல்லக்கூடியதை எம்மால் அவதானிக்க முடிந்திருந்தது.

# மரிய சேவியர் அடிகள்: ஒரு பன்முகப்பார்வை மெய்நிகர் வழியில் ஆய்வரங்கத் தொடர் இன்று

திருமறைக் கலாமன்றத்தின் ஸ்தாபக இயக்குநர் அமரர் அருட்கலாநிதி நீ.மரிய சேவியர் அடிகளாரின் பன்முகப்படுத்தப்பட்ட பணிகளை ஆவணப்படுத்தும் முகமாக 'கலைத்தூது நீ.மரிய சேவியர் அடிகள் ஒரு பன்முகப் பார்வை' எனும் தலைப்பில் மெய்நிகர் வழியில் சூம் செயலியின் ஊடாக திருமறைக் கலாமன்றம் மாதந்தோறும் நடத்தி வருகின்ற ஆய்வரங்கத் தொடரின் எட்டாவது நிகழ்வு இன்று (23) ஞாயிற்றுக்கிழமை மாலை 7.00 மணிக்கு (இலங்கை நேரம்)இடம்பெறவுள்ளது.

அண்ணாமலை பல்கலைக்கழக கனடா வளாகத்தின் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் பாலசுந்தரம் இளையதம்பி தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில், 'ஈழத்து மரபுவழி நாடகங்களின் மேம்பாட்டிலும் பேணுகையிலும் மரியசேவியர் அடிகளாரின் வகிபங்கு' என்னும் தலைப்பில் யாழ்.திருக்குடும்ப கன்னியர் மடம் தேசிய பாடசாலையின் ஆசிரியரும், திருமறைக் கலாமன்ற நிர்வாக சபை உறுப்பினர்களில் ஒருவருமான இரத்தினசிங்கம் ஜெயகாந்தன் ஆய்வினை வழங்கவுள்ளார்.

ஆர்வமுள்ள அனைவரும் சூம் செயலி இலக்கம் 7893644809, கடவுச் சொல் சி.பி.ஏ என்பதற்கூடாக இந்நிகழ்வில் இணைந்துகொள்ள முடியும்.

# டெஸ்மன் டூட்டுவும் சர்வதேச அரசியலும் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் உரை

தென் ஆபிரிக்க இன ஒடுக்குமுறைக்கு எதிராகச் செயற்பட்ட பேராயர் டெஸ்மன் டூட்டுவும் சர்வதேச அரசியலும் என்ற கருப்பொருளில் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் உரை ஒன்று இடம்பெறவுள்ளது.

சங்கத்தின் நிர்வாகக் குழு உறுப்பினர், பத்திரிகையாளர் அ.நிக்ஸன் மேற்படி தலைப்பில் உரையாற்றவுள்ளார். சங்கத்தின் பேரவை உறுப்பினர் பேராசிரியர் தை. தனராஜ் நிகழ்வுக்குத் தலைமை தாங்குவார்.

எதிர்வரும் 26ஆம் திகதி புதன்கிழமை மாலை ஆறு மணிக்கு சங்கத்தின் சங்கரப்பிள்ளை மண்டபத்தில் உரை நிகழ்த்தப்படும். வெள்ளவத்தை உருத்திரா மாவத்தை ஊடான சங்கம் மாவத்தையில் உள்ள கொழும்புத் தமிழ்ச் சங்கம் மாதாந்தம் நடத்தும் அறிவோர் ஒன்று கூடல் நிகழ்விலேயே மேற்படி தலைப்பில் உரை இடம்பெறவுள்ளது.

சமகால புவிசார் அரசியல் மற்றும் பேராயர் டெஸ்மன் டூட்டுவின் ஈழத்தமிழ் மக்கள் மீதான அக்கறை குறித்த விடயங்கள் உரையின் பிரதான கருப்பொருளாகும்.

உரையின் பின்னர் கேள்வி பதில் இடம்பெறும். மாணவர்கள், ஆர்வலர்கள், அரசியல் பிரதிநிதிகள் உட்பட அனைவரையும் கலந்துகொள்ளுமாறு சங்கத்தின் கல்விக் குழு அழைப்பு விடுத்துள்ளது.

தமிழன்
THAMILAN WEEKLY
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 000/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilanweekly@gmail.com/ thamilaneditor@gmail.com

# இஸ்லாமியர்களுக்கு எதிரான அநீதி!

பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள இஸ்லாம் பாடநூல்களை மீளப் பெறுமாறு கல்வி வெளியீட்டுத் திணைக்களம் அறிவித்துள்ளமை எமது கவனத்தை ஈர்த்துள்ளது.

மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள், வலயக்கல்விப் பணிப்பாளர்கள் ஊடாக இதற்கான கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது - எனக் கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம் அயிலப்பெரும தெரிவித்திருக்கிறார்.

'ஒரு நாடு – ஒரு சட்டம்' தொடர்பான ஜனாதிபதி செயலணியிடமிருந்து கிடைத்த பரிந்துரைகளுக்கமைய இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது எனவும் கல்வி வெளியீட்டுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பாடசாலை மாணவர்களுக்கான இஸ்லாம் பாடப் புத்தகங்களை பரிசீலித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு தமக்கு அறிவிக்கப்பட்டது எனவும் கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம் குறிப்பிட்டார்.

அதற்கமைய, திணைக்களத்தினூடாக குழு ஒன்று நியமிக்கப்பட்டு, இஸ்லாம் பாடநூல்கள் பரிசீலிக்கப்பட்டன எனவும், இதன்போது விநியோகிக்கப்பட்டுள்ள பாடநூல்களை மீளப்பெறுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

06, 07, 08, 10, 11ஆம் தர மாணவர்களுக்கான இஸ்லாமிய பாடநூல்களையே திரும்பப் பெறுமாறும், இதுவரை பாடநூல்கள் விநியோகிக்காத மாணவர்களுக்கு புத்தகங்களை வழங்கவேண்டாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்லாம் பாடப்புத்தகங்களில் சில திருத்தங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன எனவும், அதற்கான அனுமதியை கல்வி அமைச்சின் செயலாளரிடம் பெற்று துரிதகதியில் திருத்தப்பணிகள் மேற்கொள்ளப்படும் எனவும் கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம் தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் ஆராய்ந்த ஜனாதிபதி ஆணைக்குழுவினூடாக பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்படும் இஸ்லாம் பாடப்புத்தகங்களில், சில வகுப்புகளுக்கான புத்தகங்கள் தொடர்பில் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டிருந்ததுடன், அவற்றில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனப் பரிந்துரைக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இஸ்லாம் பாடநூல்கள் மட்டுமல்ல, எந்த மதங்களினதும் பாடநூல்களில் தவறான கற்பிதங்கள் இருக்குமாயின் அதனை சரிசெய்வது குறித்து ஆட்சேபனை இல்லை. ஆனால், அதற்கு முன்னர் இந்தத் தீர்மானங்கள் எந்த அடிப்படையில் எடுக்கப்பட்டன? எந்தக் குழு இதற்கான சிபாரிசுகளை செய்தது? என்னென்ன விடயங்களை மாற்றப்போகிறர்கள் என்ற எந்தத் தகவலும் பகிரங்க வெளியில் தெரியவில்லை. குறைந்தபட்சம் நாடாளுமன்றத்திலுள்ள முஸ்லிம் எம்.பிக்களுக்கு கூட இந்த விடயங்கள் குறித்ததான முழு விபரங்கள் இல்லை.

'செல்லும் செல்லாதது எல்லாம் செட்டியார் தலை மீது' என்ற முதுமொழி நம்மத்தியில் உள்ளது.

பிழைகள் எல்லாவற்றையும் யாரோ ஒருவர் மீது சுமத்திவிடும் பண்பு பற்றிய பேச்சு அது. அதுபோலவே நாட்டில் எதற்கெடுத்தாலும் எல்லா பிரச்சினைகளுக்கும் முஸ்லிம்கள்தான் காரணமானவர்களென அவர்கள் மீது சொறியும் பழக்கம் அண்மைக்காலமாக இருந்துவருகிறது. இஸ்லாமிய பாடநூல்கள் அடிப்படைவாதத்தை தூண்டும்வகையிலோ அல்லது இதர முரண்பாடுகளை கொண்டிருக்குமாயின் அது குறித்து இஸ்லாமிய சமூகப்பெரியார்கள், கல்விமான்களுடன் பேசி அவர்களின் ஆலோசனைகளுக்கேற்ப நடவடிக்கைகளை எடுத்திருக்கலாம்.அதைவிடுத்து கல்வி வெளியீட்டுத் திணைக்களம், ஒரே நாடு ஒரே சட்டம் ஜனாதிபதி செயலணி ஆகிய இரண்டு அரச தரப்புகள் மாத்திரம் எப்படி தீர்மானங்களை எடுக்கலாம். அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள மத உரிமைகள் ,மதச் சுதந்திரங்கள் எங்கே ?

இஸ்லாமிய பாடநூல்களை திரும்பப்பெறும் மேற்படி யோசனை அந்த சமூகத்தின் மீதான மற்றுமொரு அத்துமீறல் என்பதனை கூறிவைக்க விரும்புகிறோம். இன்று இஸ்லாமியர்கள் மீதான இந்த அத்துமீறல் இன்னும் சில நாட்களில் ஏனைய மதங்களின் மீது வரக்கூடும். நாட்டின் எல்லா பிரச்சினைகளுக்கும் கொரோனாவை காரணம் கூறும் அரசு, இதர சமூகங்களின் மீதான இப்படியான அடக்குமுறையைக் கண்டு வாளாவிருக்கவும் கூடும்.

ஆனால்ா மனித உரிமை ஆர்வலர்கள், முற்போக்கு சிந்தனாவாதிகள் இந்த விடயத்தை கண்டும் காணாமல் இருக்கக்கூடாது. இதற்கெதிராக குரல் எழுப்பவேண்டும். முஸ்லிம் கல்விச் சமூகம் இதற்கெதிராக சட்ட நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். அரசின் இப்படியான அநாவசிய தலையீடுகளை நிறுத்த ஜனநாயக ரீதியில் போராடத் துணிய வேண்டும்.

---

# சண்டே சாம்பார்

## ★ நாமலின் பேச்சால் கொதித்துப்போன மைத்ரி

## ★ பெசிலை ஜனாதிபதியாக்க முயற்சிக்கும் இந்தியா

## ★ சந்திக்கு வந்த சஜித் - சம்பிக்க சண்டை

## ★ இரகசிய புலனாய்வு

## அறிக்கையால் அதிர்ச்சியில் அரசு



முன்னாள் ஜனாதிபதி மைத்ரி தலைமையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கூட்டங்கள் அடுத்தடுத்து கட்சி தலைமையகத்தில் நடந்தன.

அரசாங்கத்தில் தொடர்ந்து இருப்பதா இல்லையா என்பது பற்றியும் நாட்டின் நிலைமைகள் குறித்தும் அங்கு பேசப்பட்டன. அரசிலிருந்து இப்போதைக்கு வெளியேறக்கூடாதென கட்சியின் சில உறுப்பினர்கள் வலியுறுத்தினாலும் மைத்ரி அந்த கருத்தை ஏற்பதாக இல்லை.

அரசாங்கத்தில் இருக்க விருப்பம் இருந்தால் இருக்கலாம். ஆனால், உள்ளேயிருந்து தொல்லைகொடுக்காமல் வெளியே செல்பவர்கள் செல்லலாம் என்று அமைச்சர் நாமல் ராஜபக்ஷ கூறிய கருத்தினால் மைத்ரிபால கொதித்துப்போயிருக்கிறார். சின்னச் சின்ன நெத்தலி மீன்களுக்கெல்லாம் பயப்படவேண்டிய அவசியமில்லை. நாங்கள் கூட்டணியொன்றை விரைவில் அமைக்கவுள்ளோம். அப்போது சிலருக்கு தெரியவரும் எங்கள் பலம் என்று தனக்கு நெருக்கமானவர்களிடம் கூறியுள்ளார் மைத்ரி. சஜித்துடன் இணைந்து கூட்டணியொன்றை அமைத்து ஜனாதிபதி வேட்பாளராக சஜித்தை நிறுத்தவும் அதன்பின்னர் பிரதமர் வேட்பாளராக தான் போட்டியிடவும் வியூகமொன்றை வகுக்கிறார் மைத்ரி. அதற்கும் இரகசிய பேச்சுகள் நடக்கின்றன.

பரந்தளவிலான அரசியல் கூட்டணியொன்றை அமைப்பது குறித்து ஆளுங்கட்சியின் முக்கிய உறுப்பினர்களுடன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பேச்சு நடத்திவருகிறது. அதேசமயம், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா, குமார் வெல்கம எம்.பியுடன் இணைந்து மற்றுமொரு அரசியல் கூட்டணியொன்றை அமைக்கத் தயாராகி வருகிறார். அந்த கூட்டணிக்கு சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களை சேர்க்க ஆலோசனை நடத்தப்பட்டுள்ளது. சந்திரிகாவின் இந்த அரசியல் கூட்டணி ஊடாக அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளர் ஒருவர் களமிறக்கப்படலாம். முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணியை போட்டியிட வைக்க முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. ஆனால், அவர் அதற்கு சம்மதம் தெரிவிக்கவில்லை.

### தயாராகும் பெசில்

இதற்கிடையில் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராக போட்டியிட நிதியமைச்சர் பெசில் தயாராகி வருகிறார். இதற்கு இந்தியா முழு அளவில் ஆதரவை பின்னணியில் வழங்கிவருகிறது. திருகோணமலை எண்ணெய்க் குதங்களை இந்தியாவுக்கு வழங்கவேண்டுமென முழுவீச்சில் செயற்பட்டவர் பெசில்.

அதனால்தான் இலங்கைக்கு உடனடி கடனுதவிகளை வழங்கியும் பொருளாதாரத்தை நிமிர்த்தவும் உதவிகளை செய்துகொண்டிருக்கிறது இந்தியா. பெசில் ஜனாதிபதியாக வருவராயின் தமக்கு நல்லதென புதுடில்லி உறுதியாக நம்புகிறது. அதேசமயம், இங்கு எதிர்க்கட்சி பலமாக இல்லாத காரணத்தினால் எதிர்க்கட்சியில் இருந்து ஒருவர் ஜனாதிபதியாக வருவாரென்ற நம்பிக்கையை புதுடில்லி இழந்துள்ளதாக அறியமுடிகின்றது.

பெசில் ராஜபக்ஷவை இந்தியா அரவணைப்பதால்தான் சீனாவும் இப்போது அவருடன் நெருங்கிச் செயற்பட ஆரம்பித்திருக்கிறது. இறப்பர் – அரிசி ஒப்பந்தம் நடைபெற்று 70 வருட பூர்த்தியை முன்னிட்டு இலங்கைக்கு 10 இலட்சம் மெட்ரிக் தொன் அரிசியை வழங்க சீனா ஏற்பாடுகளை கடந்தவாரம் செய்திருந்தது. முன்னதாக இதற்கான பேச்சுவார்த்தையை வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தனவே கொழும்பிலுள்ள சீனத் தூதரகத்தின் ஊடாக மேற்கொண்டிருந்தார். ஆனால், சீன அரசு நேரடியாகவே இதனை நிதியமைச்சர் பெசிலுடன் பேசி வழங்கியிருந்தது. இப்போது இந்தியாவையும் சீனாவையும் அரவணைத்துச் செல்லவேண்டிய நிலைமை பெசிலுக்கு ஏற்பட்டுள்ளது.

### சம்பிக்கவின் பாய்ச்சல்

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் சம்பிக்க ரணவக்க போட்டியிடத் தயாராகி வருகிறார். இதனால் ஐக்கிய மக்கள் சக்தியின் முக்கிய பங்காளியாக இருக்கும் ரணவக்கவிற்கும் அதன் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாசவிற்கும் இடையில் இதுவரை நிலவிவந்த கருத்து முரண்பாடுகள் தற்போது தீவிரமடைந்துள்ளன.

இருவருக்கும் இடையிலான இந்த முரண்பாட்டின் காரணமாக நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்கவின் தலைமையில் இன்று (23) இடம்பெறவுள்ள சம்பிக்கவின் புதிய அரசியல் அணியான 43ஆம் படையணியின் தேசிய மாநாட்டிற்கு ஐக்கிய மக்கள் சக்தியின் எந்தவொரு உறுப்பினரும் செல்ல வேண்டாம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச அறிவித்துள்ளார்.

எனினும், ஐக்கிய மக்கள் சக்தியின் பங்காளிக்கட்சித் தலைவர்களுக்கு இந்த கூட்டத்திற்கு அழைப்புவிடுத்துள்ளதால் அவர்கள் இதில் கலந்துகொள்ளவுள்ளதாக தெரிகிறது.

நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பின்னர் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் உருவாக்கப்பட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் முக்கிய பங்காளியாக நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க இருக்கின்றார். எனினும், கடந்த சில மாதங்களாக இருவருக்கும் இடையில் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டுள்ளதோடு, இருவரின் நிலைப்பாடுகளிலும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

குறிப்பாக, அண்மையில் நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க வடக்குக்கான விஜயமொன்றை மேற்கொண்டார். அந்தப் பயணத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் இணைய சஜித் தடை விதித்திருந்தார். ஆனால், அங்கு சம்பிக்கவுக்கு கிடைத்த அமோக வரவேற்புக்குப் பின்னரே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவும் வடக்குக்கான விஜயத்தை மேற்கொண்டார்.

இதனால், சஜித் மற்றும் சம்பிக்கவிற்கு இடையிலான கருத்து முரண்பாடுகள் தீவிரமடைந்துள்ளதுடன், சம்பிக்க ரணவக்க தனிவழியில் பயணித்து, அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளராக களமிறங்குவதற்கான முயற்சிகளையும் முன்னெடுப்பதாக பல தகவல்கள் வெளிவந்த நிலையிலேயே தற்போது அவர் தலைமையில் இன்று இடம்பெறும் மாபெரும் தேசிய மாநாட்டை புறக்கணிக்குமாறு ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்களுக்கு சஜித் பிரேமதாச கட்டளை பிறப்பித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்கவின் தலைமையில் இன்று 23ஆம் திகதி நண்பகல் 2 மணிக்கு ஸ்ரீ ஜயவர்தனபுரவில் 'நம்பிக்கையோடு காத்திருப்போம். உயர்வோம் உயர்த்துவோம்' என்ற தெனிப்பொருளில் மாபெரும் தேசிய மாநாடொன்று இடம்பெறவுள்ளது. இதற்கு ஐக்கிய மக்கள் சக்திக்கும் அதன் பங்காளிக் கட்சித் தலைவருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

சஜித் – சம்பிக்கவின் முரண்பாடுகள் மேலும் தீவிரமடையுமாக இருந்தால் சம்பிக்க எம்.பி, ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து பிரிந்து தனிவழியில் பயணிக்க வாய்ப்புள்ளதாக தகவல்கள் தெரிவித்தன. எனினும், அவர் கட்சியை விட்டு வெளியேறினால் அது சஜித் பிரேமதாசவிற்கு பாரிய நெருக்கடியை ஏற்படுத்தும். ஏனெனில்ா சஜித்தை விட சிங்கள தேசியவாதிகளின் ஆதரவு சம்பிக்கவுக்கு உண்டு.

எனவே, ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் இன்று 23ஆம் திகதி இடம்பெறவுள்ள தேசிய மாநாட்டில் கலந்துகொள்ளாதபட்சத்தில் சம்பிக்க ரணவக்க, அதிரடி முடிவை எடுக்கலாம். அவர் தனது தலைமையில் பாரிய அரசியல் கூட்டணியொன்றை அமைப்பதற்கும் வாய்ப்புள்ளது.

### அதிர்ச்சித் தகவல்!

அரசாங்கத்தின் மீது மக்கள் செல்வாக்கு எப்படி இருக்கிறது என்பது குறித்து ஆராய அரச மேலிடத்து உத்தரவின்பேரில் புலனாய்வுத்துறை அணியொன்று நடத்தப்பட்டது. அதில் மக்கள் இந்த அரசின் மீதான நம்பிக்கையை இழந்துவிட்டதாகவும் அரசு மீதான மக்கள் ஆதரவு 30 வீதம் சரிந்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து அதிரடி மாற்றங்களை செய்ய தயாராகியிருக்கிறார் ஜனாதிபதி கோட்டா. இன்னும் சில தினங்களில் அரச கூட்டுத்தாபனங்கள், சபைகளின் தலைவர்களில் அதிரடி மாற்றங்களை செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஆளுநர்கள் சிலருக்கும் மாற்றங்கள் கிடைக்கலாம்.

**- சிவா இராமசாமி -**

**(இந்த பத்தி தொடர்பான வாசகர்களின் கருத்துகளை 076 1393805 என்ற WhatsApp இலக்கத்திற்கு அனுப்பலாம்.)**

LK Newspapers Viber Community

# அமெரிக்க - இந்திய அரசுகளின் நல்லிணக்கப் போதனை யாருக்கு?

அ.நிக்ஸன்



புவிசார் நலன் அடிப்படையில், பெருமளவு நிதிகளை இந்தியா இலங்கைக்கு வழங்கி வரும் சூழலில், இலங்கையின் நல்லிணக்கம் என்பது தமிழர் எதிர்ப்புநிலைதான் என்பதை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கொள்கை விளக்கவுரை எடுத்துக் கூறுகின்றது.

அமெரிக்க - இந்திய அரசுகள் நல்லிணக்கம் பற்றி தமிழர்களுக்கு போதிக்கும் அளவுக்கு சிங்கள மக்களுக்கு அது பற்றிய விழிப்புணர்வுகளைக் கொடுக்கத் தவறியதன் பின்னணியில், சிங்கள அரசியல் கட்சிகளின் தலைவர்கள் எல்லோருமே இலங்கை ஒற்றையாட்சி அரச கட்டமைப்பைப் பாதுகாக்கும் கருத்துகளையே முன்வைத்து வருகின்றனர்.

1983இல் ஜே.ஆர் ஜயவர்த்தனவின் ஆட்சிக்காலத்தில் ஆயுதப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்ட காலம் முதல் 2009ஆம் ஆண்டு மே மாதம் வரையும் அதன் பின்னரான பன்னிரெண்டு ஆண்டுகளிலும் மாறி மாறி பதவிக்கு வந்த பிரதான சிங்கள அரசியல் கட்சிகள், நல்லிணக்கம் என்ற பெயரில் அல்லது சமதானத்துக்கான போர் என்ற வாசகங்களுடன் மேற்கொண்ட செயற்பாடுகள் அனைத்துமே இலங்கை ஒற்றையாட்சிக் கட்டமைப்பைப் பாதுகாக்கும் அரசியல்தான் என்பது கண்கூடு.

போர் நடைபெற்ற முப்பது ஆண்டுகளிலும் சரி, அதன் பின்னரான பன்னிரெண்டு ஆண்டுகளிலும் சரி இலங்கைக்கு வழங்கப்பட்ட நிதியுதவிகள், நன்கொடைகள் எல்லாமே புவிசார் அரசியல் நோக்கம் கொண்டது என்பதன் பின்னணியில் சிங்களம் அல்லாத ஏனைய தேசிய இனங்கள் இலங்கைத் தீவில் தமது சுயநிர்ணய உரிமை உள்ளிட்ட அனைத்து அரசியல் அபிலாஷைகளையும் இழந்து நிற்கின்றன என்ற உண்மை அமெரிக்க - இந்திய அரசுகளுக்குப் புரியாததல்ல.

2009ஆம் ஆண்டு மே மாதத்திற்குப் பின்னரான இந்தோ - பசுபிக் பிராந்தியப் பாதுகாப்பு முன்னிலைப்படுத்தப்பட்ட ஒரு சூழலில், அதன் இலாபங்களை இலங்கை பெறுகின்றது. ஆனால், இலங்கைத்தீவில் வாழுகின்ற ஏனைய தேசிய இனங்கள் எப்படி ஒதுக்கப்படுகின்றன என்பதை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கொள்கை விளக்கவுரையின் பின்னரான சூழல் அமெரிக்க - இந்திய அரசுகளுக்கு உணர்த்தியிருக்க வேண்டும்.

இலங்கைக்கு மேலும் ஒரு பில்லியன் டொலருக்கும் அதிகமான கடன் தொகை விரைவில் வழங்கப்படுமென இந்தியா உறுதியளித்துள்ளது. தொள்ளாயிரம் (900) மில்லியன் டொலர் நிதியுதி வழங்கப்படுமென கொழும்பில் உள்ள இந்தியத் தூதுவர் கோபால் பக்லே கடந்த 13ஆம் திகதி வியாழக்கிழமை அறிவித்திருந்தார்.

இந்த நிலையில், ஒரு பில்லியனுக்கும் அதிகமான கடனுதவி கிடைக்குமென இலங்கை அரசின் நிதியமைச்சுத் தகவல்கள் கூறுகின்றன. இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர், இலங்கை நிதியமைச்சர் பெசில் ராஜபக்ஷவுடன் நடத்திய இணையவழி உரையாடலில் நிதியுதவி குறித்துப் பேசப்பட்டிருப்பதாக உள்ளகத் தகவல்கள் கூறுகின்றன.

அமைச்சர் பெசில் ராஜபக்ஷவுடன் இணைய வழி உரையாடல் ஒன்றை நடத்தி முடித்துள்ளதாக அமைச்சர் ஜெய்சங்கர் கடந்த சனிக்கிழமை சமூக வலைத்தளத்தில் பதிவிட்டுள்ளார்.

இலங்கையின் உறுதியான மற்றும் நம்பகமான பங்காளியாக இந்தியா இருக்கும் என்பதை இந்த உரையாடல் மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது என்றும் அந்தப் பதிவில் ஜெய்சங்கர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும், கடந்த வியாழக்கிழமை அறிவிக்கப்பட்ட 900 மில்லியன் டொலர் அந்நிய செலாவணிக்கான நிவாரணம் குறித்தும், கடனுதவித் திட்டங்கள் தொடர்பாகவும் இந்த உரையாடலில் பேசப்பட்டுள்ளன.

அத்தியாவசிய பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக இந்தியாவினால் ஒரு பில்லியன் டொலர் வழங்கப்படவுள்ளதுடன், எரிபொருள் கொள்வனவுக்காக மேலும் 500 மில்லியன் டொலர் வழங்கப்படும் என்றும் கூறப்படுகின்றது.

எரிசக்தி பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்கில், திருகோணமலை எண்ணெய்க் குதங்களை அபிவிருத்தி செய்யும் திட்டத்தை இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் நிதியமைச்சர் பெசில் ராஜபக்ஷவிடம் வலியுறுத்தியுள்ளார்.

அதேநேரம் இலங்கை சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களை மனிதாபிமான அடிப்படையில் விடுதலை செய்வது குறித்தும் பெசில் ராஜபக்ஷவிடம் ஜெய்சங்கர் வலியுறுத்தியுள்ளார்.

இந்த விடயங்கள் தொடர்பாக வெளியுறவு அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸுடனும் அமைச்சர் ஜெய்சங்கர் கடந்த 6ஆம் திகதி தொலைபேசியில் உரையாடியிருப்பதாக டெய்லி மிரர் ஆங்கிலச் செய்தித் தளம் கூறுகின்றது.

> **பிரித்தாளும் தந்திரோபாயங்களுக்குள் எடுபட்டு முன்னெடுக்கப்படுகின்ற அரசியல் நகர்வுகளில் இருந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியும் ஒதுங்கி சுயமரியாதையோடு சிந்திக்க வேண்டிய தருணமிது**

6ஆம் திகதி நடைபெற்ற உரையாடலின் பின்னர், அன்றைய தினமே திருகோணமலை எண்ணெய்க் குதங்கள் இந்தியாவிடம் கையளிக்கும் ஒப்பந்தம் ஒன்றை இலங்கை கைச்சாத்திட்டிருக்கிறது.

மோடிக்கு அனுப்பவுள்ள கடிதத்திலும் தமிழ்த் தேசியக் கட்சிகள் அன்றைய தினமே கைச்சாத்திட்டிருந்தனர்.

அதேவேளை, கடந்த டிசம்பர் மாதம் அமைச்சர் பெசில் ராஜபக்ஷ இந்தியாவுக்குச் சென்றிருந்தபோது, நான்காயிரத்து 900 மில்லியன் அமெரிக்க டொலர் உதவி வழங்கப்படுமென உறுதியளிக்கப்பட்டது என்றும், அதன் அடிப்படையிலேயே இந்தியா நிதியுதவி வழங்குவதாகவும் கொழும்பில் இருந்து வெளிவரும் டெய்லி மிரர் ஆங்கிலச் செய்தித் தளம் சனிக்கிழமை செய்தி வெளியிட்டிருந்தது.

13ஆவது திருத்தச் சட்டத்துக்கு அப்பாலான அர்த்தமுள்ள அதிகாரப் பரவலாக்கம் என்று வலியுறுத்தி இந்தியப் பிரதமர் மோடிக்கு தமிழ்த் தேசியக் கட்சிகள் கடிதம் (ஆவணம்) அனுப்புவதற்கான முயற்சிகளின்போதே இலங்கைக்கான நிதியுதவித் திட்டங்களும் அறிவிக்கப்பட்டிருக்கின்றன.

நிதியமைச்சராவதற்கு முன்னர் கடந்த ஜூன் மாதம் பெசில் ராஜபக்ஷ அமெரிக்காவுக்குச் சென்றிருந்தார். அங்கிருந்து தமிழரசுக் கட்சியின் பேச்சாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் உள்ளிட்ட சிலருடன் இணையவழி உரையாடல் ஒன்றை நடத்தியிருந்தார்.

அதன் பின்னர் கொழும்பில் கல்வி அமைச்சராக இருந்த பேராசிரியர் பீரிஸ் சுமந்திரனுடன் கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதுவரின் இல்லத்தில் கடந்த ஓகஸ்ட் மாதம் 9ஆம் திகதி தூதுவர் முன்னிலையிலேயே பேச்சு நடத்தியிருந்தார்.

அடுத்த சில நாட்களில் இடம்பெற்ற அமைச்சரவை மாற்றத்தில் பேராசிரியர் பீரிஸ் வெளியுறவு அமைச்சராகவும், அமெரிக்காவில் இருந்து கொழும்பு திரும்பிய பெசில் ராஜபக்ஷ நிதியமைச்சராகவும் பதவி ஏற்றிருந்தனர்.

இதன் பின்னணியிலேயே செல்வம் அடைக்கலநாதன் தலைமையிலான அணி 13 தொடர்பாக யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் கடந்த நவம்பர், டிசம்பர் மாதங்களில் கூடி ஆராய்ந்தது. சுமந்திரன் தலைமையிலான அணி அமெரிக்காவுக்குச் சென்றிருந்தது.

இந்த நகர்வுகளின் ஒருபகுதியாகவே நரேந்திரமோடிக்குக் கடிதம் அனுப்புவது குறித்து பல வாக்குவாதங்களுக்கு மத்தியில் தமிழ்த் தேசியக் கட்சிகள் இழுபறிப்பட்டு இறுதி முடிவை எடுத்து கையொப்பமிட்டு இந்தியத் தூதுவரிடம் கையளித்துள்ளன.

இந்தவொரு சூழலில் இலங்கை தற்போது எதிர்நோக்கியுள்ள பொருளாதார நிதி நெருக்கடிகளுக்கு உடனடித் தீர்வாக நிதியுதவி வழங்க இந்தியா உறுதியளித்தது என்பதை எவரும் மறுப்பதற்கில்லை.

அத்துடன், தமிழ்ப் பேசும் மக்களின் தாயகமான திருகோணமலையில் உள்ள எண்ணெய்க் குதங்களையும் இந்தியாவிடம் இலங்கை கையளித்துள்ளது.

சீனாவை மையப்படுத்திய இந்தோ - பசுபிக் பாதுகாப்பு விவகாரத்தில் அமெரிக்க - இந்திய அரசுகள் மிகவும் நுட்பமான முறையில் இலங்கையைக் கையாள, இலங்கையும் ஈழத்தமிழர் விவகாரத்தை உள்ளகப் பிரச்சினையாக மாற்றும் நோக்கிலும், தனது பொருளாதார நெருக்கடிக்கான தீர்வாகவும் பயன்படுத்துகின்றது.

புவிசார் அரசியல் போட்டியைப் பயன்படுத்திப் போரை இல்லாதொழிக்க 2009 ஆம் ஆண்டு கையாண்ட நுட்பமான அதே அணுகுமுறையை, இலங்கை 2021/22 ஆம் ஆண்டுகளிலும் கையாண்டு ஈழத்தமிழர்களின் அரசியல் விடுதலை குறித்த பேச்சுக்களையும் சர்வதேச அரங்கில் இருந்து முற்றாகவே நீக்கம் செய்யப் பயன்படுத்தப்படுகின்றது.

ஆகவே, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கொள்கை விளக்கவுரையில் ஈழத்தமிழ் மக்கள் விவகாரம் புறக்கணிக்கப்பட்டு வெறுமனே பொருளாதாரப் பிரச்சினையாக மாத்திரம் சித்தரிக்கப்பட்டுள்ள நிலைமையானது அனைத்துச் சிங்கள அரசியல் தலைவர்களின் விருப்பங்களில் இருந்து உதித்த கருத்துக்களே என்பதைச் சர்வதேசமும் புரிந்துகொண்டிருக்கும்.

இதன் பின்னணியில் செயலாற்ற வேண்டிய பொறுப்பும் கடமையும் தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கே உண்டு. ஏனெனில், அமெரிக்க - இந்திய அரசுகள் வலிந்து வருபவை அல்ல.

அரசுக்கு அரசு என்ற அணுகுமுறையே முதன்மையானது. அந்த அடிப்படையில் பாதிக்கப்படுகின்ற தேசிய இனம் ஒருமித்த குரலோடு நின்றால் மாத்திரமே புவிசார் அரசியலைக் கடந்து காரியத்தைப் பெறமுடியும்.

அதற்காகவே தமிழர்களுக்கான வெளியுறவு கொள்கை ஒன்று அவசியம் என்பதைத் தமிழ்ப் பத்தி எழுத்தாளர்கள் வற்புறுத்துகின்றனர்.

பிரித்தாளும் தந்திரோபாயங்களுக்குள் எடுபட்டு முன்னெடுக்கப்படுகின்ற அரசியல் நகர்வுகளில் இருந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியும் ஒதுங்கிச் சுயமரியாதையோடு சிந்திக்க வேண்டும் என்பதையே கொள்கை விளக்கவுரையும் இலங்கைக்கான இந்திய உதவியும் எடுத்துக் காட்டியது என்பதை உணரத் தவறும் பட்சத்தில் தமிழ்த் தேசியம் இலங்கை ஒற்றையாட்சிக்குள் கரைந்துபோகும்.

# தொழில் உலகில் துன்புறுத்தல்களை ஒழிப்பதற்கு விழிப்புணர்வு தேவை!

## அஷிலா நிரோஷினி தன்தெனிய

பிரியதர்ஷினி சிவராஜா

**தொ**ழில் உலகில் ஒடுக்குமுறைகளையும் துன்புறுத்தல்களையும் முற்றாக இல்லாதொழிப்பதற்கு சி 190 பிரகடனத்தை முழுமையாக அங்கீகரிக்க வேண்டும் என்று Standup movement Lanka அமைப்பின் நிறைவேற்று அதிகாரி அஷிலா நிரோஷினி தன்தெனிய தெரிவித்தார்.

பாதுகாப்பான வேலைச்சூழலை உறுதிசெய்யும் சி 190 பிரகடனத்தினை இலங்கையில் சட்டமாக உறுதிசெய்யும் (Ratify C 190) சிவில் அமைப்பு செயற்பாட்டாளர்களில் ஒருவரான இவர், பணிபுரியும் இடங்களில் ஊழியர்களின் கண்ணியத்தை பாதிக்கும் இவ்வாறான செயற்பாடுகளை முற்றாக இல்லாதொழிப்பதற்கு விளிம்பு நிலையிலிருந்து அனைத்து மட்டத்திலும் விழிப்புணர்வினை ஏற்படுத்த வேண்டும் என்றும் சுட்டிக்காட்டினார். அவர் அளித்த நேர்காணல் பின்வருமாறு:

**கேள்வி: தொழில் உலகில் இடம்பெறும் வன்முறைகள் மற்றும் துன்புறுத்தல்களை இல்லாதொழிப்பது மிகவும் அத்தியாவசியமானது என்று ஏன் கருதுகின்றீர்கள்?**

**பதில்:** தொழில் உலகில் இடம்பெறும் துன்புறுத்தல்கள் ஊழியர்களின் அடிப்படை உரிமைகளை மீறும் செயல்களாக அமைகின்றன. மேலும் ஊழியர்களின் பாதுகாப்பு விடயத்திலும் முக்கிய இடத்தினை வகிக்கின்றது. இதனை பல ஆய்வுகளின் ஊடாக அறியக்கூடியதாக உள்ளது. எனினும், இவ்வாறான துன்புறுத்தல்கள் பற்றி யாரும் வெளிப்படையாக பேசுவதில்லை. தொழிலை தக்கவைத்துக்கொள்ள வேண்டும் என்று ஊழியர்கள் கருதுகின்ற அதேவேளை, உற்பத்தியும் இங்கு முக்கிய பங்கினை வகிக்கின்றது. உற்பத்தியே இலக்காக உள்ள நிலையில் ஊழியர்கள் மீது பணியிடங்களில் இடம்பெறும் வன்முறைகள் குறித்தோ துன்புறுத்தல்கள் குறித்தோ தொழில் தருனர்களும், முதலாளிகளும் அக்கறை காட்டுவதில்லை. எனவே, பணியிடத்தில் உற்பத்தியும், சேவையும் சிறப்பான முறையில் இருக்கவேண்டுமாயின் துன்புறுத்தல்களும், வன்முறைகளும் இல்லாதொழிக்கப்படல் வேண்டும். பணியிடம் அனைவருக்கும் கண்ணியமானதாக இருக்கவேண்டும்.

**கேள்வி: நீங்கள் சுதந்திர வர்த்தக வலயத்தில் பணியாற்றும் ஊழியர்களின் உரிமைகள் தொடர்பில் செயற்படும் ஒரு செயற்பாட்டாளர். ஆடைத்தொழிற்சாலைகளில் பணியாற்றும் தொழிலாளர்கள் எவ்வாறான வன்முறைகளையும் துன்புறுத்தல்களையும் எதிர்கொள்கின்றனர்?**

**பதில்:** நான் தற்பொழுது ஒரு செயற்பாட்டாளராக இருந்தாலும் என் வாழ்வில் ஆரம்ப காலத்தில் நானும் சுதந்திர வர்த்தக வலய ஆடைத்தொழிற்சாலையில் பணியாற்றியிருந்தேன். அதனால் அங்கு நிலவும் சூழல் பற்றி எனக்கு நன்றாக தெரியும். ஒவ்வொரு தடவையும் பணியிடத்தில் எதிர்கொண்ட துன்புறுத்தல்கள் மற்றும் வன்முறைகள் காரணமாக மாறி மாறி நான்கு ஆடைத்தொழிற்சாலைகளில் பணியாற்றவேண்டிய நிலை எனக்கு ஏற்பட்டது. பாலியல் ரீதியிலான துன்புறுத்தல்களாக அவை அமைந்ததுடன், மேலதிக வேலை நேரத்திற்கு இடமளிக்காமை, தேவையற்ற அவதூறு பேச்சுகள் என்று பல வடிவங்களில் துன்புறுத்தல்களை எதிர்கொள்ள நேர்ந்தது. சுதந்திர வர்த்தக வலயங்களிலுள்ள ஆடைத்தொழிற்சாலைகளில் நடைபெறும் இவ்வாறான துன்புறுத்தல்களும், வன்முறைகளும் மிகவும் சாதாரணமாக நடைபெறும் விடயங்களாகிவிட்டன. சமூகமும் இவற்றை மிக இயல்பான பொதுவான விடயமாக கருதுகின்றது. எங்களது அமைப்பு அண்மையில் மேற்கொண்ட ஆய்வொன்றில் 99 சதவீதமானவர்கள் பணியிடங்களில் வன்முறைகளையும், துன்புறுத்தல்களையும் எதிர்கொண்டு வருகின்றனர். இது ஓர் உடல் உள ரீதியிலான பிரச்சினையாகவும், பாரியதொரு சமூகப் பிரச்சினையாகவும் உள்ளது.

**கேள்வி: இவ்வாறான சூழ்நிலை குறிப்பாக பண்களில் ஏற்படுத்தும் தாக்கம் பற்றி உங்கள் கருத்து என்ன?**

**பதில்:** இலங்கையின் பொருளாதாரத்தை பலப்படுத்தும் அந்நிய செலாவணி வருமானத்தில் பெண்களின் பங்களிப்பு மிக அதிகமாக உள்ளது. அதேபோன்று இதர முக்கியமான தொழிற்றுறைகளிலும் பெண்களின் பங்களிப்பு கணிசமாக உள்ளது. ஆனபோதிலும் பெண்கள் இத்துறைகளில் பெரும்பான்மையாக இருந்து தங்களது பங்களிப்பினை செலுத்தினாலும் அவர்கள் வன்முறைகளையும், துன்புறுத்தல்களையும் இத்துறைகளில் சிறுபான்மையினராக உள்ள ஆண்களினால் எதிர்கொள்கின்றனர். இதற்குக் காரணம் ஆணாதிக்க சமூகக் கட்டமைப்பாகும். பெண்கள் பெரும்பான்மையாக இந்த துறைகளில் இருந்தாலும் அதிகாரமற்ற நிலையில் இருக்கின்றனர். இதனால் பெண்கள் தங்கள் கல்வித்தகுதிக்கு ஏற்றதொரு தொழில்வாய்ப்பைப் பெற்றுக்கொள்வதில் தயக்கம் காட்டி வருகின்றனர். ஏனெனில், சமூகத்தில் சகல துறைகளிலும் வன்முறைகளும் துன்புறுத்தல்களும் நிகழ்கின்றன. பணியிடம், வீடு, கல்வி நிறுவனங்கள், பொதுப் போக்குவரத்து சாதனங்கள் என்ற வேறுபாடின்றி வாழ்வின் அனைத்து அம்சங்களையும் எடுத்துக்கொண்டால் நாளாந்தம் எதிர்கொள்ள நேரிடும் வன்முறைகளும், துன்புறுத்தல்களும் பெண்களைதான் அதிகம் பாதிக்கின்றன. இது அவர்களுக்கு பெரும் தலையிடியை ஏற்படுத்தும் விடயமாக உள்ளது. இதனால் எந்த வேலையை செய்ய ஆரம்பித்தாலும் துன்புறுத்தல்கள் நிகழுமோ வன்முறைகள் நிகழுமோ என்ற அச்சம் தரும் சிந்தனையுடனேயே பெண்களின் அனைத்து தெரிவுகளும் செயற்பாடுகளும் அமைகின்றன. வாழ்க்கையும் நகர்ந்துகொண்டிருக்கின்றது. பெண்களைப் பொறுத்தவரை இந்த நிலைமை மிகவும் துயர் மிகுந்ததாகும்.

**கேள்வி: இவ்வாறான பின்னணியில் தொழில் உலகில் வன்முறைகளை இல்லாதொழிக்கும் சர்வதேச தொழிலாளர் அமைப்பின் பிரகடனமான Violence free work place C 190 பிரகடனத்தின் முக்கியத்துவம் பற்றி உங்கள் கருத்து என்ன?**

**பதில்:** இந்தப் பிரகடனம் ஊழியர்களுக்கு மிகுந்த பாதுகாப்பினை அளிக்கின்றது. பாதிக்கப்படும் ஊழியர்களுக்கு நீதியைப் பெறுவதில் ஒரு சாதகமான தன்மையை வெளிக்காட்டுகின்றது. இந்த பிரகடனத்தினூடாக பணிபுரியும் இடத்தில் இடம்பெறும் வன்முறைகள் மட்டுமன்றி பணிபுரியும் இடத்திற்கு அப்பால் நிகழும் வன்முறைகள், துன்புறுத்தல்கள் தொடர்பில் முதலாளிகளும் அல்லது தொழில் தருனர்களும் பொறுப்பேற்க வேண்டும் என்று குறிப்பிடுகின்றது. இது ஊழியர்கள் தரப்பில் மிகவும் வரவேற்புக்குரிய விடயமாகும். அத்துடன், இந்த பிரகடனத்தின் முக்கியமான அம்சங்களை தொழில் சட்டத்தில் சேர்ப்பதனால் பல நன்மைகள் ஏற்படும். வீட்டு வன்முறைகள் தொடர்பாகவும் இந்தப் பிரகடனம் பேசுகின்றது. எனவே, இந்த அடிப்படையில் பார்க்கும்போது பணியிடச் சூழலில் இடம்பெறும் வன்முறைகள், துன்புறுத்தல்கள் காரணமாக பாதிக்கப்படும் ஊழியர்களின் உரிமைகள் இதனால் பாதுகாக்கப்படுகின்றது. இவ்வாறான வன்முறைகள் ஊழியர்களுக்கு உடல், உள, பொருளாதார, பாலியல் ஆகிய அடிப்படைகளில் பாதிப்பினை ஏற்படுத்துகின்றது என்பதனை இந்தப் பிரகடனம் முற்றுமுழுதாக அங்கீகரிக்கின்றது.

**கேள்வி: இந்தப் பிரகடனத்தினை இலங்கை அங்கீகரித்துள்ள நிலையில் சட்டமாக உறுதிப்படுத்துவதற்கு எவ்வாறான முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன?**

**பதில்:** உண்மையில் இந்தப் பிரகடனத்தினை சட்டமாக மாற்றுவதற்கான அழுத்தத்தினை அனைத்து தரப்பினராலும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றபோதிலும் ஊழியர்களுக்கு வன்முறையற்ற கண்ணியமான பணியிடச் சூழலை வழங்குவது தொடர்பில் இந்தப் பிரகடனம் அதிக பொறுப்புகளை தொழில் தருனர்கள் மீதும் நிறுவனப் பிரதானிகள் மீதும் முதலாளிகளின் மீதும் பாராதீனப்படுத்துவதனால் அவர்கள் தரப்பில் சில பின்னடிப்புகள் இடம்பெறுவதனை ஊகிக்க முடிகின்றது. அதனால்தான் இந்த பிரகடனத்தினை சட்டமாக்குவதில் தாமத நிலை ஏற்பட்டுள்ளது என்று நான் கருதுகின்றேன். அதேநேரம், பிரகடனத்திலுள்ள சில முக்கியமான அம்சங்களில் மாற்றங்களை செய்து சட்டமாக அங்கீகரிக்கும் செயற்பாடுகளையும் நாம் ஒருபோதும் அனுமதிக்கப்போவதில்லை. அவ்வாறான செயற்பாடுகள் பிரகடனத்தின் முழுமையான நலன்கள் ஊழியர்களுக்கு கிட்டாத ஒரு நிலைமையை ஏற்படுத்திவிடும்.



**கேள்வி: தொழில் உலகில் நிகழும் வன்முறைகள், துன்புறுத்தல்களை இல்லாதொழிப்பதில் சிவில் அமைப்பினரினதும், ஊழியர்களினதும் பங்களிப்பு எவ்வாறு அமைய வேண்டும் என்று கருதுகின்றீர்கள்?**

பதில்: ஆம். உண்மையில் இங்கு இவ்விடயம் தொடர்பில் விழிப்புணர்வினை ஏற்படுத்துவதே அவசியமாக உள்ளது. நான் ஏற்கனவே குறிப்பிட்டதைப்போன்று பணியிடங்களில் பாதுகாப்பற்ற சூழலை எதிர்கொண்டாலும் தொழிலை தக்கவைத்துக் கொள்வதற்காக துன்புறுத்தல்களை பொறுத்துக் கொள்ளும் மனோபாவமே பொதுவாக இருக்கின்றது. இதனால் இவ்வாறான சம்பவங்களை மௌனமாக அங்கீகரிப்பதனைக் கைவிட்டு அவ்வாறான சம்பவங்கள் நிகழும்போது அது தொடர்பான ஆதாரங்களை சேகரித்து அவ்வாறான சம்பவங்களை இல்லதொழிக்கவேண்டிய நடவடிக்கைகளை முன்னெடுப்பதனையே நாம் செய்யவேண்டியுள்ளது. பணியிடங்களில் நிகழும் வன்முறைகள், துன்புறுத்தல்கள் - அது உடல் ரீதியாகவோ உள ரீதியாகவோ அல்லது பேச்சின் மூலமாகவோ இருக்குமாயின், அதற்கான ஆதாரங்களையும் சான்றுகளையும் பெறுவதில் கவனம் செலுத்துவது அவசியம். அதன்பின் அவற்றை ஆவணப்படுத்துவதனூடாக சமூகத்திற்கு நாம் ஆதாரபூர்வமாக இவ்விடயத்தை முன்வைக்க முடியும். இதனை நாங்கள் சமூகத்தில் விளிம்பு நிலையிலிருந்து ஆரம்பிக்கவேண்டியுள்ளது.



# மலையகத்தை புறக்கணித்தார் கோட்டா

## அங்கீகரிக்கப்பட்ட சமூகம் தொடர்பாக பேசாத அரசுக்கு ஜீவன் வக்காலத்து வாங்குகின்றார் - இராதா எம்.பி.

**113ஐ அண்மித்த ஆசனங்கள் இருந்தபோது, அன்று ஆறுமுகன் தொண்டமானை மதித்த அரசாங்கம் இன்று அரசாங்கத்திற்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மை இருப்பதால் அவருடைய கட்சி உள்ளிட்ட சிறுபான்மையினக் கட்சி உறுப்பினர்களையும் மதிப்பதில்லை – என நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வி.இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.**

**'தமிழன்' வார இதழுக்கு வழங்கிய விசேட செவ்வியின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.**

**அவருடனான முழு செவ்வி வருமாறு;**

**கேள்வி : ஜனாதிபதியின் உரையில் மலையக மக்கள் தொடர்பாக எதுவும் குறிப்பிடப்படாதிருந்தது தொடர்பாக உங்களுடைய அதிருப்தியை தெரிவித்துள்ளீர்களா?**

ஆம். மலையக மக்களும் இந்த நாட்டில் அங்கீகரிக்கப்பட்ட ஒரு சமூகமாகும். சிங்கள, வடக்கு, கிழக்கு முஸ்லிம் மற்றும் தமிழ் மக்கள் நாட்டில் அங்கீகரிக்கப்பட்ட சமூகமாகும். இவ்வாறு அங்கீகரிக்கப்பட்ட சமூகம் தொடர்பாக ஜனாதிபதி தன்னுடைய உரையில் எதுவும் கூறாதிருந்தது முற்றிலும் தவறானதொரு விடயமாகும்.

இதனை, ஆளுந்தரப்பு உறுப்பினர் ஜீவன் தொண்டமான் நியாயப்படுத்தி வக்காலத்து வாங்கும் வகையில் நாடாளுமன்றத்தில் உரையாற்றினார். மலையக மக்களையும் இலங்கை மக்களாக அரசாங்கம் ஏற்றுக்கொள்ளுமாக இருந்தால் நிதி அமைச்சர் ஏன் அவர்களுக்கு மாவை வழங்கவேண்டும் என்ற விடயத்தை முன்வைக்க வேண்டும்.

மலையக மக்களை இரண்டாம் தரப் பிரஜைகளாக பார்ப்பதனாலேயே இவர்களுக்கு மாவை கொடுத்து சமாதானப்படுத்த முடியும் என்ற கீழ்த்தரமான யோசனை முன்வைக்கப்பட்டது. மாவை கொடுத்தால் மலையக மக்கள் பூரண திருப்தியடைவார்கள் என்ற எண்ணத்தில் அரசாங்கம் செயற்படுமாக இருந்தால் அது முட்டாள்தனமான நிலைப்பாடாகும்.

அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு 5 ஆயிரம் ரூபாவும் மலையக மக்களுக்கு மாவை மாத்திரம் வழங்குமளவுக்கு நாங்கள் பிச்சைக்காரர்களுமல்ல. இரண்டாம் பிரஜையுமல்ல.

> "கட்சி அரசியலில் தலைவர்கள் ஒன்று சேர்வது கேள்விக்குறி"

**கேள்வி : 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது குறித்து தமிழ்த் தரப்புகள் நடத்திய கூட்டத்தில் மலையகத் தலைவர்களின் கருத்துகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லையா? என்ன நடந்தது?**

ஆரம்பத்தில் இந்தக் கூட்டம் கூடும்போது, 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும். அதற்கான தேர்தலை நடத்தவேண்டும் என்ற எண்ணத்திலேயே பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றன. இடையில் வெவ்வேறு கட்சிகள் உள்நுழைந்து எங்களுக்கு 13ஆவது திருத்தம் மட்டும் போதுமானதல்ல, அதனுள் எங்களுக்கு சமஷ்டி மற்றும் சுய ஆட்சி வேண்டும் என்ற கோரிக்கையை இணைத்துக்கொண்டது.

ஆனால், நாங்கள் எப்போதும் சிங்கள மக்களுடன் இணைந்து செயற்படுகின்றோம். வாக்கு கேட்கின்றோம். இதனால், சமஷ்டி உள்ளிட்ட கோரிக்கையை ஏற்றுக்கொண்டால் தற்போது நாங்கள் அங்கம் வகிக்கும் கட்சிக்குள் முரண்பாடுகள் ஏற்படலாம் என்பதனாலேயே சமஷ்டி கோரிக்கைக்கு கைச்சாத்திடவில்லை. எனினும், 13ஐ முழுமையாக அமுல்படுத்த வேண்டும் என்ற கோரிக்கைக்கு அவர்களுக்கு ஆதரவாகவும் ஒன்றிணைந்தும் நாங்கள் இருக்கின்றோம்.

> "புதிய அரசியலமைப்பில் மலையகத்திற்கு சுய நிர்வாகக் கட்டமைப்பு – மொழி அமுலாக்கத்தை கோருவோம்"

**கேள்வி : தமிழ்க் கட்சிகளால் கைச்சாத்திட்டு இந்திய உயர்ஸ்தானிகரிடம் கையளிக்கப்பட்ட அறிக்கையில் சமஷ்டி ஆட்சிமுறைமை கோரப்பட்டுள்ளதா?**

ஆம். சமஷ்டி முறைமையில் எங்களுடைய நிர்வாகம் பிரிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையிலேயே அவர்கள் இருக்கின்றனர். எனினும், இந்திய அரசாங்கம் சமஷ்டி ஆட்சிக்கு ஆதரவாக இருக்காது.

**கேள்வி : தமிழ் மக்கள் குறித்து இந்திய அரசாங்கம் அக்கறையுடன் செயற்படும் என்ற நிலை இருக்கின்றதா?**

இந்தியாவின் அரசியலுக்கு இலங்கையின் தமிழ் மக்கள் கட்டாய தேவையாகியுள்ளனர். தமிழ் மக்களைக்கொண்டே அவர்கள் காய்நகர்த்துகின்றனர்.

இலங்கையில் சீனாவின் ஆதிக்கம் இந்தியாவிற்கு பெரும் தலையிடியாகியுள்ளது. இதனால் இந்தியா, இங்குள்ள தமிழ்க் கட்சிகளை அரவணைத்துப் போகவேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்பட்டுள்ளது. தமிழ்க் கட்சிகளின் ஆதரவு இருந்தால் மாத்திரமே இந்தியாவிற்கு இங்கு ஆதரவு இருக்கும். இதனாலேயே மலையகம் மற்றும் வடக்கு, கிழக்கு தமிழ் மக்களுக்கு அதிக உதவிகளை வழங்கி வருகின்றது.

**கேள்வி : இந்தியா அரசியல் காய்நகர்த்தலுக்கு தமிழ் மக்கள் தேவை என்ற நிலைப்பாட்டிலுள்ளதா? அல்லது உண்மையில் இந்தியாவிற்கு இலங்கை தமிழ் மக்கள் மீது அக்கறையுள்ளதா?**

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர், தமிழ் மக்களுக்கு உதவ வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே இந்திய அரசாங்கம் இருக்கின்றது. ஆனால், அவர்களுடைய அரசியலுக்கு இலங்கை தமிழ் மக்கள் தேவை.

**கேள்வி : தமிழ் மக்களின் பிரச்சினைகளை ஜனாதிபதியுடன் பேசுங்கள், இந்தியாவுடன் பேசுங்கள் என அமைச்சர் உதய கம்மன்பில கூறியதை எவ்வாறு பார்க்கின்றீர்கள்?**

அது அவர்களின் தனிப்பட்ட கருத்தாகும். இலங்கை அரசாங்கம் உரிய தீர்வுகளை வழங்கியிருந்தால் ஏன் இந்தியாவுடன் பேசவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. இலங்கை அரசாங்கம் வடக்கு, கிழக்கு உள்ளிட்ட தமிழ் மக்களின் பிரச்சினைகளை கவனத்தில் கொள்வதே கிடையாது. இதன் காரணமாகவே மூன்றாம் தரப்பொன்று தேவை என்று எண்ணி, இந்தியாவுடன் பேச்சுவார்த்தை நடத்துகின்றனர்.

இந்நிலையில், காழ்ப்புணர்ச்சி அரசியலை கைவிட்டு, அரசாங்கத்துடன் இணையுமாறு ஜனாதிபதி வடக்கு, கிழக்கு அரசியல்வாதிகளுக்கு அழைப்பு விடுத்துள்ளார். எனினும், அவ்வாறு இணைவதற்கு முன்னர் பிரச்சினைகளை தீர்ப்பதற்கான சமிக்ஞை இருக்கவேண்டும். குறிப்பாக, உங்களுடைய இனப்பிரச்சினைக்குத் தீர்வு வழங்குகின்றோம் என உறுதியளித்தால் அவர்கள் இணைந்து சேவையாற்றுவதற்கு முன்வருவார்கள்.

**கேள்வி : அரசுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு ஏதேனும் முயற்சிகளை எடுக்கின்றீர்களா?**

இல்லை. இவர்களுடன் பேசுவதற்கு ஒன்றுமில்லை. பேசியும் பயனில்லை. இலங்கையிலுள்ள இனப்பிரச்சினைக்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும். இது குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும்.

**கேள்வி : அரசாங்கத்தோடு இருக்கும் மலையக அரசியல்வாதிகளின் செயற்பாடுகள் திருப்தியளிக்கக் கூடியதாகவுள்ளதா?**

நிச்சயமாக இல்லை. அரசாங்கத்திற்கு வக்காலத்து வாங்குகின்றார்களே தவிர, மக்களின் பிரச்சினையை அரசாங்கத்துடன் பேசுவதற்கு அவர்களுக்கு போதிய பலமில்லை. மக்களுக்கு ஆயிரம் ரூபா சம்பளத்தைக் கூட முறையாக பெற்றுக்கொடுக்க முடியாதுள்ளனர். நாங்கள் இருந்தபோது, முன்னெடுக்கப்பட்ட வீட்டுத்திட்டங்களையே இன்று அவர்கள் திறந்து வைக்கின்றார்களே தவிர, கடந்த இரு வருடத்தில் இவர்கள் ஒரு வீட்டையேனும் கட்டவில்லை.

அரசாங்கத்தையும் இந்திய அரசாங்கத்தையும் திருப்திப்படுத்தும் வகையிலான போலியான வேலைகளே அதிகமாக முன்னெடுக்கப்படுகின்றன. ஆனால், மனச்சாட்சியுடன் செயற்பட வேண்டும்.

மேலும், அரசாங்கத்திற்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மையுள்ளதால் அரசாங்கத்துடன் இருக்கும் சிறுபான்மையினக் கட்சிகளை பொருட்படுத்துவதில்லை. 113 ஐ அண்மித்த ஆசனங்கள் இருந்தபோது, அன்று ஆறுமுகன் தொண்டமானை மதித்த அரசாங்கம் இன்று அவருடைய கட்சி உள்ளிட்ட சிறுபான்மையினக் கட்சி உறுப்பினர்களையும் மதிப்பதில்லை.

> "இலங்கையில் சீனாவின் ஆதிக்கத்தை குறைக்க இந்தியாவிற்கு தமிழ் மக்களின் ஆதரவு தேவை"

**கேள்வி : அமரர் ஆறுமுகன் தொண்டமானின் மறைவுக்குப் பின்னர் மலையகத்திற்கான தலைமைத்துவம் இல்லாதுபோயுள்ளதாக மக்கள் கூறுகின்றனரே?**

ஆறுமுகன் தொண்டமானின் மறைவுக்குப் பின்னர் அவரின் கட்சியிலேயே தலைமைத்துவ வெற்றிடம் காணப்படுகின்றதே தவிர, எங்களிடமில்லை. முழு மலையகத்திற்கும் அவ்வாறானதொரு வெற்றிடமில்லை. நாங்கள் அரசாங்கத்துடன் இருந்தபோது, ரணில் மற்றும் ஜனாதிபதியுடன் முரண்பட்டு பல்வேறு அபிவிருத்திகளை மலையகத்திற்கு கொண்டுவந்தோம். எனவே, அவருடைய இறப்புக்குப் பின்னர் மலையகத்தில் வெற்றிடம் ஏற்படவில்லை.

அரசாங்கத்திலிருக்கும் மலையகக் கட்சியினால் மலையகத்திற்கு எவ்வித அபிவிருத்தித் திட்டங்களையும் முன்னெடுக்க முடியவில்லையென்றால் அவர்களிடத்திலேயே தலைமைத்துவ வெற்றிடமுள்ளது. இன்று மலையக அரசியல் தலைவர்கள் அரசாங்கத்தில் இருக்கின்றார்களா என்ற கேள்வி மக்கள் மத்தியில் எழுந்துள்ளது. இந்த வெற்றிடத்தை சரிசெய்யாதவரை தற்போதைய அரசாங்கத்திடமிருந்து மலையகத்திற்கான அபிவிருத்தித் திட்டங்களை பெறவே முடியாது.

**கேள்வி : மலையக மக்களுக்கு இரு அரசாங்கத்திலும் ஏமாற்றங்கள் இருக்கின்றபோது, சஜித் ஆட்சிக்கு வந்தால் தீர்வு கிடைக்கும் என உறுதியளிக்க முடியுமா?**

மலையக மக்களின் பிரச்சினைகளை ஆராய்வதற்கும் அதனை தீர்ப்பதற்கும்தான் ஜனாதிபதி செயலணி ஒன்றை உருவாக்குவதாக சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார். இந்த செயலணி ஊடாக மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதோடு, காணி உறுதிப்பத்திரம், சிறுதோட்ட உரிமையாளர்கள் போன்ற விடயங்களை முன்னெடுப்பதாகவும் அவர் உறுதியளித்துள்ளார்.

**கேள்வி : பிரச்சினைகள் வரும்போதாவது மலையக அரசியல்வாதிகள் ஒற்றுமையாக போராடுவதிலும் தயக்கம் காட்டுவது ஏன்?**

மலையக அரசியல்வாதிகள் மாத்திரமல்ல, அனைத்து பகுதிகளிலும் இந்தப் பிரச்சினைகள் இருக்கின்றன. குறிப்பாக, இதற்கு அதிகாரப் போட்டியே காரணமாகியுள்ளது. நாங்கள் அரசாங்கத்தில் இருக்கும்போது இ.தொ.கா. வெளியிலும் இ.தொ.கா. அரசாங்கத்தில் இருக்கும்போது நாங்கள் வெளியிலும் இருப்போம். இங்கு கட்சி அரசியலே முதன்மையாக இருப்பதால் அரசியல் தலைவர்கள் ஒன்றுசேர்வதென்பது கேள்விக்குறியானதே.

**கேள்வி : மாகாண சபைத் தேர்தல் தொடர்பாக உங்களுடைய நிலைப்பாடு என்ன?**

எங்களை பொறுத்தவரை மாகாண சபைத் தேர்தல் கட்டாயம் நடத்தப்படவேண்டும். மாகாண சபைக்கான மக்கள் பிரதிநிதிகள் தெரிவுசெய்யப்பட்டாலேயே மக்களுக்கான அதிக வேலைத்திட்டங்களை முன்னெடுக்க முடியும். அத்தோடு, மக்களுக்கு தேவையான தீர்மானங்களைக் கூட தனியாக எடுக்க முடியும். இதனால், வடக்கு, கிழக்கு மாத்திரமல்ல, எங்களுக்கும் மாகாண சபைத் தேர்தல் கட்டாயத் தேவையாகும்.

**கேள்வி : புதிய அரசியலமைப்பு உருவாக்கத்திற்கான செயற்பாடுகள் விரைந்து முன்னெடுக்கப்படுகின்றன. இந்நிலையில், மலையக மக்களை சார்ந்த யோசனைகள் எதுவும் முன்வைக்கப்பட்டுள்ளதா?**

புதிய அரசியலமைப்பு உருவாக்குவதாக தொடர்ந்து கூறப்பட்டாலும் அதற்கான நடவடிக்கைகள் ஏனோ மந்தகதியில் இடம்பெறுகின்றன. எனினும், யோசனைகள் எனும்போது சுயமாக இயங்கக்கூடிய நிர்வாக கட்டமைப்பு, மொழி அமுலாக்கம் போன்றவை முன்வைக்கப்படும்.

நிர்வாக கட்டமைப்பில் நாங்கள் இன்றும் சிங்களவர்களுக்கு கீழேயே இயங்குகின்றோம். அதேபோன்று, நுவரெலியா போன்ற தமிழ் மக்கள் செறிந்து வாழும் பகுதிகளிலுள்ள நீதிமன்றங்களில் தமிழில் விவாதத்தில், பொலிஸ் நிலையங்களில் தமிழ் மொழியில் முறைப்பாடுகளை ஏற்றுக்கொள்ள போன்ற விடயங்களை நடைமுறைப்படுத்த வேண்டும். இவை அரசியலமைப்பில் இருந்தாலும் நடைமுறையில் இல்லை என்பதால் புதிய அரசியலமைப்பில் இவற்றை நடைமுறைப்படுத்துமாறு கோரிக்கைகளை முன்வைப்போம்.

> "சமஷ்டி – சுய ஆட்சி கோரிக்கையால் தமிழ்த் தரப்பு அறிக்கையில் கையெழுத்திடவில்லை"

நிர்வாகக் கட்டமைப்பில் தமிழ் மொழியில் அரச செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும். சட்டத்தில் இவை இருந்தாலும் நடைமுறையில் முன்னெடுக்கப்படவில்லை. எனவே, நிர்வாகக் கட்டமைப்பில் சுய நிர்வாக பங்கு இருக்கவேண்டும் என்ற கோரிக்கையையும் முன்வைப்போம்.

**கேள்வி : ஐக்கிய மக்கள் சக்திக்குள் முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகின்றதே உண்மையா?**

இருக்கலாம். எந்தக் கட்சியில் முரண்பாடுகளில்லை. தற்போது அரசாங்கத்திலுள்ள பொதுஜன பெரமுன முன்னணியிலும் முரண்பாடுகள் இருக்கின்றன. ஆனால், அதிகாரத்தில் இருப்பதால் யாரும் வெளியேறாதுள்ளனர். அதிகாரத்தில் இல்லாதபோது பிரிந்து செயற்பாடுவார்கள். ஆகவே, கட்சிக்குள் உட்பூசல் இருப்பது சகஜமானது.

**- நேர்காணல் : யோ.தர்மராஜ் -**

LK Newspapers Viber Community



# பிரம்மாண்டமாய் நடந்தேறிய அருந்ததியின் மாற்றுமோதிரம்

## The Grand Bridal Fashion Show















"எதிர்பாராததை எதிர்பாருங்கள்" என்ற தொனிப்பொருளுக்கு அருந்ததியே எடுத்துக்காட்டு. திருமணம் என்பது வாழ்க்கை நெறியில் இன்றியமையாதவை. அத்தகைய திருமணங்களுக்கு இருமனங்களை இணைத்து புது வாழ்க்கையை அமைத்துக் கொடுக்கிறது அருந்ததி இணைய திருமணசேவை. இதுவரையில் பல பிரம்மாண்ட நிகழ்வுகளை கடந்த காலம் முதலிருந்தே அருந்ததி அரங்கேற்றிவருகிறது. அவற்றுள் பிரம்மாண்டமான நிகழ்வொன்றே மாற்று மோதிரம் மணப்பெண் அலங்கார காட்சி. பிரம்மாண்டத்தின் படைப்பாக அனைவர் மனதையும் வென்ற இந்நிகழ்வு, வெற்றிகரமாக கடந்த 10ஆம் திகதி கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் பாரியார் இவ்விழாவிற்கு சிறப்பு அதிதியாக வருகை தந்து சிறப்பித்தார். மேலும், பல பிரதம அதிதிகளும் கலந்து இந்நிகழ்வை சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது. நாடு முழுவதிலுமிருந்து வருகைத்தந்த 50இற்கும் மேற்பட்ட அழகுக்கலை நிபுணர்களின் பங்கேற்புடன் வெகுவிமர்சையாக இந்நிகழ்வு நடைபெற்றது. அவர்களது ஒப்பனைகளையும், அலங்காரங்களையும் ஏற்று நவினமும், அழகையும் தாங்கி பார்வையாளர்களை கவர்ந்த அழகிகளும் இவ்விழாவிற்கு கூடுதல் மெருகூட்டினர்.

அருந்ததியின் கெட்டி மேளம் தொலைக்காட்சி நிகழ்வின் உத்தியோகபூர்வ அறிமுகப்பாடல் வெளியீட்டு விழாவும் இந்நிகழ்வில் அரங்கேறியது. அத்துடன், அருந்ததியின் 25ஆவது திருமண பருவ இதழும் சிறப்பு அதிதியினால் வெளியிடப்பட்டது. இவ்விழாவில் கலந்து சிறப்பித்த சிறப்பு அதிதிக்கு விசேட கௌரவம் வழங்கப்பட்டதோடு பூரண ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் விருதுகள் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.

அத்தோடு, இம் மாற்றுமோதிர மணப்பெண் அலங்கார காட்சியில் பங்கேற்ற அனைத்து அழகுக்கலை நிபுணர்களுக்கும் விருதுகளும் பாராட்டுகளும் வழங்கப்பட்டன.

மிகவும் பிரம்மாண்டமாக நடைபெற்ற அருந்ததியின் மாற்றுமோதிர நிகழ்வு, வெற்றிகரமாக நடைபெற்று முடிவதற்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்கிய அனுசரணையாளர்களாக Sri Vijayas ஆடையகம் மற்றும் Joy Glorious நகையகமும் சாரி ப்ளவுஸ் மற்றும் ஆரி வேலைப்பாடுகளுக்காக The Beads, அலங்கார வேலைப்பாடுகளுக்காக Sahana Flowers மற்றும் புகைப்பட ஒழுங்கமைப்புகளுக்கு 3ADS Photography யும் இந்நிகழ்விற்கு உத்தியோகபூர்வ அனுசரணையாளர்களாக கரம் கோர்த்து அவர்களின் சிறந்த ஒத்துழைப்பை வழங்கினர்.







# 'வெடி'மணியம்

அதன் "பலனை" இன்று இந்தியா அனுபவிக்கிறது.

இன்று இந்திய - இலங்கை ஒப்பந்தம் என்ற இத்துப்போன ஒரு நூலில் மட்டுமே தொங்கிக்கொண்டிருக்கிறது ஸ்ரீலங்கா மீதான "பிடி"!

அந்த இத்துப்போன "ஒப்பந்தத்தையும்" அதன்மூலம் உருவாகிய 13ஆம் திருத்தசட்டத்தையும் பிச்சு கசக்கி தூக்கி குப்பையில் எப்போதே எறிந்துவிட்டது சிங்கள பேரினவாத ஆட்சிகள்!

இந்தியாவுக்கு அது வடிவாத் தெரியும்.

மீண்டும் ஒரு "இலங்கை - இந்திய" ஒப்பந்தத்தை செய்ய ஆயத்தம் நடக்கிறது. அல்லது மறைமுகமாக முடிந்துவிட்டது.

அந்த ஒப்பந்தத்தில் "தமிழர்கள் நலன் சார்ந்து" ஒரு சொல்லுகூட இருந்திருக்காது. அல்லது இருக்கப்போவதில்லை.

புதிதாக உருவாகும் ஸ்ரீலங்காவின் "அரசியல் யாப்பில்" சிறுபான்மை மக்களின் உரிமைகளும் நலன்களும் வலிந்து பறிக்கப்பட்டு;

"ஒற்றையாட்சிக்குள்" ஸ்ரீலங்கா தன்னை நிலைப்படுத்திக்கொள்ளும்.

அதன்பிறகு தலைகீழாக நின்டாலும் ஸ்ரீலங்காவின் சுதந்திரமான கட்டுப்பாடற்ற வெளியுறவுக் கொள்கையில் எந்த வல்லரசாலும் மூக்கை நுழைக்கமுடியாது.

ஆக;

தமிழ், முஸ்லிம், மலையக மக்களின் ஒற்றுமையும் உண்மையான இதயசுத்தியுடனான அர்ப்பணிப்பான அரசியல் நகர்வுகளும் மட்டுமே ஸ்ரீலங்கா தீவில் அடுத்த இரு தசாப்தங்களுக்கும் சிறுபான்மை மக்களின் "தலைவிதியை" தீர்மானிக்கப்போகிறது.

ஸ்ரீலங்காவில் நிகழும் பூகோள அரசியல் சூதாட்டத்தில் சிறுபான்மை மக்களின் உரிமைகளும் அவர்களின் அரசியல் அபிலாஷைகளும் ஒரு பொருட்டாகவே கணிக்கப்படாது.

வெறுமனே பொருளாதார நலன் சார்ந்த "ஒப்பந்தங்களை" இந்தியாவும் அமெரிக்காவும் மேற்குலமும் ஸ்ரீலங்காவுடன் செய்துகொள்ளும்.

ஏற்கனவே இப்படியானதொரு ஏற்பாட்டில்தான் சீனாவுடன் முழுமையான "பொருளாதார ஒப்பந்தம்" ஒன்றை ஸ்ரீலங்கா செய்துகொண்டுள்ளது.

"சீன - ஸ்ரீலங்கா" கூட்டு ஒப்பந்தத்தில் ஒரு சதம் கூட சிறுபான்மை மக்களின் நலன் சார்ந்து சிந்தித்து இருக்கமாட்டார்கள்.

முழுக்க முழுக்க ராஜபக்ஷ ஆட்சியாளர்களின் இருப்பும் அவர்கள் சார்ந்த குடும்ப நலனும் மாத்திரமே "சீன - ஸ்ரீலங்கா" கூட்டு ஒப்பந்தத்தில் இடம்பெற்று இருக்கும்.

ஆக;

அதைப்போன்ற ஒரு ஒப்பந்தத்தை ஸ்ரீலங்கா ஏற்கனவே அமெரிக்க, இந்தியா தரப்புடன் செய்துகொண்டிருக்கும் என்பது மறைமுகமான உண்மை.

அப்படி இதுவரை நிகழாத பட்சத்தில் இனிவரும் காலத்தில் அப்படியான ஒப்பந்தங்கள் கைச்சாத்தாகும் என்று அடித்துக் கூறமுடியும்.

தமிழர் தரப்பு கூட்டாக வைத்த "கோரிக்கைகளை" இந்தியா தன் நலனுக்காய் மட்டும் பயன்படுத்தும்.

ஸ்ரீலங்காவுடனான பேச்சுவார்த்தையில் பேரம்பேச இந்தியாவுக்கு இருக்கும் "பிரம்மாஸ்திரம்" இந்த 13ஆம் திருத்தச்சட்டம் மாத்திரமே!

ஒரே ஒருமுறைமட்டும்தான் இதை இந்தியா பயன்படுத்த வாய்ப்பு இருக்கிறது.

அதன்பிறகு புதிய அரசியலமைப்பு அமுலுக்கு வரும்போது;

பேரினவாத ஆட்சியாளர்கள் உந்த "13 ஐ" தூக்கி குப்பையில் போட்டுவிடுவார்கள்.

அந்த நேரத்தில் இந்தியாவால் "13 ஐ வைத்து" பல்லிமுட்டாஸ் கூட வாங்க முடியாது.

எனவேதான் இந்த மாதம் "ஆட்டம்" சூடு பிடித்திருக்கிறது.

இந்தியா இப்போது "குறுக்குமறுக்க" அந்தரப்பட்டு ஓடுப்பட்டு திரிவதன் பின்னணி இதுதான்.

இந்தியா தன்னுடைய "அலுவல்" முடிஞ்சதும் தமிழர்தரப்பை ஏறெடுத்தும் பார்க்கமாட்டார்கள் என்பதே யதார்த்தம்.

வேண்டுமானால் இந்திய விமானங்கள் கண்டியிலும் காலியிலும் "நிவாரணப்பொதிகளை" கொட்டக்கூடும்.

யாழ்ப்பாணத்திலோ மட்டக்களப்பிலோ கொட்டுவதற்கு "வாய்ப்பே" இல்லை.

***

வடக்கு மாகாண புதிய ஆளுநரின் "குறளிவித்தைகளை" கண்டுகொள்ளாமல் நகருவம் எண்டு பாத்தால்;

அவர் நாளாந்தம் காட்டும் "வித்தைகளை" சிம்பிளா கடந்து செல்லமுடியாமல் உள்ளது.

ஆரியகுள திறப்புவிழாவில் "கண்டிய நடனத்துடன்" கோலாகலமாக ஆரம்பித்த அவரது "ஆட்டம்" நாளாந்தம் விதவிதமாக அரங்கேறுகிறது.

தனக்கு உச்சபட்ச அதிகாரம் இருப்பதாக நினைத்து தலைகால் தெரியாமல் ஆடும் ஆளுநரின் இடமாற்ற உத்தரவுக் கடிதங்கள் ஒரே இரவில் தட்டச்சுசெய்து ஐந்து மாகாண அமைச்சு செயலர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

ஏன்? எதுக்கு? எண்டெல்லாம் ஆரும் அவரை கேள்வி கேட்கமுடியாது. கேட்டால் "தேசவிரோத சட்டம்" பாயும் எண்டு சிவாசிலிங்கத்தை வெருட்டினமாதிரி வெருட்டுவார்.

வடக்கு ஆளுநராக வாறவர் கொஞ்சம் "மண்டைக்காயாக" இருக்கவேண்டும் என்பது எழுதப்படாத ஸ்ரீலங்கா விதி.

ஆனால் வந்தவர் "மண்டை காய்ஞ்சுபோய்" வருவார் எண்டு யாரும் எதிர்பார்க்கவில்லை.

ஆரியகுளத்துக்குள்ள "ஸ்பீக்கர்" கட்டி மும்மத பாடல்களை ஒலிக்கவிடவேண்டும். அதைக்கேட்டு மக்கள் குளக்கட்டில் "யோகா" செய்து குளத்துக்குள்ள தலைகீழாக விழுந்து சாகவேண்டும் எண்ட கணக்கில் அவரது "ஆழ்ந்த" "அறிவார்ந்த" கருத்துகளை கேட்டு புல்லரிச்சுப்போன பல ஆயிரம் பேரில் நானும் ஒருவன்.

அதைவிட "மெய்சிலிர்த்து" வியந்துபோன கேள்வியொன்டை அவர் யாழ். மாநகர சபையிடம் கேட்டிருந்தார்!

"ஆரியகுளத்து உறுதி எங்க?"

என்ன ஒரு "புத்திசாலித்தனமான" கேள்வி அது!

யாழ்ப்பாணத்தில் உள்ள ஆயிரக்கணக்கான குளங்களின் உறுதிகளைத் தேடி எடுத்து ஆளுநரின் வாசலில் வைச்சபிறகுதான் குளத்துக்குள்ள காலை வைக்கலாம் எண்டுறார் சிவலிங்கத்தார்!

அதைவிட ஆளுநர் பகுதிநேரத் தொழிலாக மாநகர சபை உறுப்பினர்களை "பின்னேர ரியூசனுக்கு" தன்னிடம் வருமாறும் கேட்டுள்ளார்.

மாநகர சபை உறுப்பினர்களுக்கு ஏதாவது "டவுட்" வந்தால் தன்னிடம் வந்து கேட்கலாம் எண்டு ஆளுநர் சொன்னது உறுப்பினர்களை "நக்கல்" அடிக்கும் செயல் எண்டு உறுப்பினர்கள் சிலர் பொங்கினாலும்;

அதை அவர்கள் பொதுவெளியில் வெளிப்படுத்த முடியாமல் உள்ளது.

மாகாண சபையின் ஆணையாளாராக பொறுப்பான பதவியில் இருக்கும் சி.வி.கே. சிவஞானத்தார் ஆளுநர் மீது கடுப்பானாலும்;

அதை அவரால் ஆளுநருக்கு "இடித்துரைக்க" முடியாமல் இருக்கிறது.

உண்மையில் வடக்கு மாகாண ஆளுநர் தான் செய்யும் நடவடிக்கைகள் குறித்து மூத்த அரசியல்வாதியாகவும் வடக்கு மாகாண சபையில் மிக நீண்டகாலமாக பொறுப்புகளில் இருந்தவருமான சி.வி.கே. அவர்களிடம் ஒருவார்த்தை கேட்பதால் குறைஞ்சுபோகமாட்டார்.

அதைவிட்டுப்போட்டு;

ஆட்சியாளர்களின் "கைப்பொம்மையாக" இருந்து வடக்கு மாகாணத்தில் தன்னுடைய "குறகிவித்தைகளை" காட்டுவது மிகத்தவறு.

ஆட்சியாளர்களின் "கைப்பொம்மைகளாக" நியமிக்கப்பட்ட ஆளுநர் மீண்டும் மீண்டும் இப்படியான மக்கள் விரோத செயல்களை செய்துகொண்டேபோனால்;

ஒருகட்டத்தில் மக்களும் தலைவர்களும் கடுப்பாகி "போர்க்கொடி" தூக்குவார்கள்!

மக்களுடைய நியாயமான கோரிக்கைகளை புறம்தள்ளி "தான்தோன்றித்தனமாக" ஆட்டம் போட்ட யாரும் கனகாலம் வடக்கில் இருந்ததில்லை.

சனத்தின் பொறுமைக்கும் ஒரு எல்லை உண்டு.

அந்த எல்லை மீறும்போது வடக்கு "ஆளுநருக்கு" எதிரான சனநாயக வழியிலான மக்கள் எதிர்ப்பு மிகக் கடுமையாக இருக்கும்.


"அதை" வடக்கு மாகாண ஆளுநரால் நிச்சயம் தாங்கமுடியாது.

இதையெல்லாம் விட்டு;

வடக்கு மக்களின் "நல்ல புத்தகத்தில்" அவரது பெயர் இடம்பெறவேண்டுமானால் வடக்கு மக்களின் மனங்களை வெல்லவேண்டும்.

வடக்கு மக்களின் மனங்களை வெல்வது "மிக மிக" இலகுவானது.

ஆளுநருக்கு அதில "டவுட்டுகள்" இருந்தால் தாராளமாக எங்களிடம் கேட்டால் அவருக்கு வழிகாட்ட நாங்கள் தயார்.

# பிசுபிசுத்துப்போன கொள்கை உரை

"ஜனாதிபதியின் பேச்சில் ஒன்றுமே இல்லை. வெறும் குப்பை." நிதியமைச்சர் பெசில் ராஜபக்ஷவை நாடாளுமன்றத்தின் லொபியினுள் சடுதியாக கண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர் இரா. சம்பந்தன் எம்.பி, இதனை உரத்த குரலில் அடித்துச் சொன்னார். எதிர்பாராமல் சொன்ன இந்த வார்த்தைகளால் தடுமாறிபோன அமைச்சர், "நன்றி....நன்றி.."

என்று மாத்திரம் சொல்லிவிட்டு நகர்ந்தார்.

9ஆவது நாடாளுமன்றத்தின் இரண்டாவது கூட்டத் தொடரை கடந்த 18ஆம் திகதி ஆரம்பித்துவைத்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, சிம்மாசன உரை (அக்ராஷன உரை) நிகழ்த்தினார். இது நாடாளுமன்ற சம்பிரதாயமாக இருந்தாலும், ஜனாதிபதியின் உரையை நாட்டுமக்கள் மிகவும் எதிர்பார்ப்புடன் காத்துக்கொண்டிருந்தனர்.

அதேநேரம், உலகமும் மிகவும் உன்னிப்பாகப் பார்த்துக் கொண்டிருந்தது.

சிம்மாசன உரையானது கடுமையான வாதப் பிரதிவாதங்களை உள்ளடக்கியிருக்கிறது. அன்றைய தினம் உரையை முழுமையாக சபையினுள் செவிமடுத்துக் கொண்டிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர் சம்பந்தன் எம்.பி. வெளியில் வந்ததும் சீறி விழுந்தார்.

இனப்பிரச்சினை தொடர்பாகவோ நாட்டின் நெருக்கடி நிலை தொடர்பிலோ கண்டுகொள்ளாமல், ஜனாதிபதியின் உரை இருந்ததாக சம்பந்தன் குற்றஞ்சாட்டினார். இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணாவிட்டால் நாடு மோசமான நிலைக்குப் போய்விடும் என்பதை அவரிடம் (ஜனாதிபதியிடம்) சொல்லுங்கள் என ஆவேசத்துடன் கூறியதாக சுமந்திரனை ஆதாரம் காட்டி செய்திகள் வெளியாகியிருந்தன.

ஜனாதிபதி தனது கொள்கை விளக்கவுரையில், தேசிய நலன்சார்ந்த எதிர்காலத் திட்டங்களை வெளிப்படுத்தினார். நாட்டின் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டதற்கான காரணங்களை மேலோட்டமாக கூறியவர், அவைகளை மேவி வருவதற்கான யோசனைகளையும் தொட்டுச் சென்றார்.

நாடு முகங்கொடுத்துள்ள சவால்களை வெல்வதற்கு, நாடாளுமன்றத்திலும் அதற்கு வெளியிலும், ஆளும் கட்சி - எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த அனைவரும் ஒன்றிணைய வேண்டும்.

அதேநேரம், குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக மக்களை தூண்டிவிட்டு வேடிக்கை பார்க்கும் அரசியல்வாதிகள், இனிமேலேனும் அதனை நிறுத்தவேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

**★ எதிர்காலத்தில் வாகன இறக்குமதிக்கு அனுமதி வழங்கப்படும்போது மின்சாரத்தில் இயங்கும் வாகனங்களுக்கு முன்னுரிமை.**

**★ எக்காரணங்கொண்டும் நிலக்கரி மின்னுற்பத்தி நிலையங்களை அமைக்க அனுமதி கிடையாது.**

**★ குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக மக்களைத் தூண்டுவதை நிறுத்துங்கள்.**

**★ சவால்களுக்கு மத்தியிலும் அடிப்படைப் பொறுப்புகளை நிறைவேற்றுவதில் அலட்சியம் காட்டவில்லை.**

**★ பொதுமக்களின் ஆரோக்கியத்துக்கு முன்னுரிமை அளித்தோம்.**

**★ பாதாள உலகக் கோஷ்டி மற்றும் போதைப்பொருள் பிரச்சினைகளை முற்றாக இல்லாதொழிப்போம்.**

**★ எந்தவொரு மனித உரிமை மீறல்களையும் அரசாங்கம் ஆதரவளிக்கவில்லை என்பதை பொறுப்புடன் தெரிவிக்கிறேன்.**

**★ அரசியல் நோக்கங்களை ஒதுக்கிவைத்துவிட்டு, மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்த, வடக்கு, கிழக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.**

**★ அரசியல் நோக்கங்களுக்காக வெளிநாட்டு முதலீடுகள் தொடர்பான தவறான அபிப்பிராயங்களை ஏற்படுத்த வேண்டாம்.**

**★ உயர்தர அரச சார்பற்ற பல்கலைக்கழகங்களை ஆரம்பிக்க நாடாளுமன்றத்தில் விவாதங்களை நடத்துங்கள்.**

**★ வரலாற்றில் எதிர்கொண்ட அனைத்துச் சவால்களும் சரியான தலைமைத்துவத்தின்கீழ் வெற்றி கொள்ளப்பட்டுள்ளன.**

இவையெல்லாம் ஜனாதிபதியின் சிம்மாசன உரையின்போது தெரிவிக்கப்பட்ட தேசிய நோக்குடனான முக்கிய விடயங்கள்தான்.

ஆனால், நாடு இன்று இருக்கும் கொதிநிலையில் இந்த விடயங்களையெல்லாம் இப்போது தூக்கிப் பிடிக்க வேண்டியவை அல்ல என்ற மனநிலைதான் மக்கள் மத்தியில் நிலவுகின்றது.

வாழ்க்கைச்செலவு உச்சம் தொட்டுவிட்டது; பணவீக்கம் தலைவிரித்தாடுகிறது; பால் மாவுக்கு இன்னும் தட்டுப்பாடு; சமையல் எரிவாயு சிலிண்டர்கள் இன்னும் வெடித்த வண்ணமே இருக்கின்றன; வீடுகளுக்குள் வைத்திருக்கும் பீதியில் மக்கள்; ஒரு தேநீருக்கு 50 ரூபா; பால் தேநீர் 80 ரூபா; ஒரு மரக்கறி ரொட்டியின் விலை 80 ரூபா; அரிசி விலை கிடுகிடுவென உயர்ந்துகொண்டே இருக்கின்றது.

உரத்துக்காக விவசாயிகள் தினமும் போராட்டம் நடத்தியவண்ணம் இருக்கிறார்கள். சேதனப் பசளையை அறிமுகப்படுத்தியதால் இரசாயன உரம் இறக்குமதி நிறுத்தப்பட்டது.

அமுல்படுத்துவதில் ஏற்பட்ட அவசரத்தால் விவசாயப் பெருமக்கள் போராடும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

## நெருக்கடியில் தவிக்கும் மக்களுக்கு ஓர் ஆறுதல் வார்த்தை இல்லை

இப்படியான நெருக்கடி நிலை நாட்டில் நிலவும்போது, நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதி, நாட்டுமக்களுக்கு கொள்கை விளக்கவுரை நிகழ்த்தும்போது, மக்களின் நேரடி பிரச்சினைகள் தொடர்பாக பேசாதது மக்கள் மத்தியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருப்பதோடு, ஒரு உணர்வையும் கிளறிவிட்டிருக்கிறது.

"எந்தவொரு பிரச்சினையோ, நெருக்கடி நிலையோ இல்லாத ஒரு நாட்டில் பேசுவதுபோல்தான் ஜனாதிபதியின் உரை இருந்தது" என எதிர்க்கட்சியினர் விமர்சிக்கின்றனர். உண்மையில், மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு தீர்வு சொல்லப்படாவிட்டாலும், நிலைமையை விளக்கி ஓர் ஆறுதல் சொல்லியிருக்கலாம். அதுவும் உரையில் இடம்பெறவில்லை என்பது மக்களின் பெரும் ஆதங்கமாக இருக்கின்றது.

ஜனாதிபதி பேசியதெல்லாம் அடுத்த மூன்று ஆண்டுகளுக்கான கொள்கை பற்றிய விளக்கமே. அதனை வேண்டாம் என்று யாரும் கூறவில்லை. ஆனால், அன்றாடம் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை ஏறெடுத்தும் ஜனாதிபதி பார்க்கவில்லை என்பது மிகவும் குறைபாடாகவே பார்க்கப்படுகின்றது.

நாடாளுமன்ற அமர்வில் கலந்துகொண்ட முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, தமிழ் முற்போக்குக் கூட்டணி தலைவர் மனோ கணேசனிடம் கேலியாக ஒரு விடயத்தை கூறியுள்ளதாக சமூக வலைத்தளங்களில் செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

"ஜனாதிபதி இனப்பிரச்சினை பற்றி கூறாமல், கடலுக்கடியில் திட்டமிடும் டிஜிட்டல் தொழில்நுட்ப கேபிள்களை பற்றி அதிகம் பேசினார். உங்கள் இனப்பிரச்சினையையும் கடலுக்கு அடியில் புதைக்கப்போகிறாரோ என மனோவிடம் ரணில் நகைச்சுவையாக பேசினார்.

ரணிலின் அரசியல், மக்களால் நிராகரிக்கப்பட்டு இருக்கிறது. கடந்தகால அரசியல் குழப்பநிலைகளுக்கு காரணமாக இருந்தவர். நல்லாட்சியின் சமநிலையை சிதைத்து, ஆட்டம் காணச் செய்தார் என்ற குற்றச்சாட்டும் அவர் மீது இருக்கிறது. இவருடைய அரசியல் அப்படி இருந்தாலும், இவர் கூறியிருக்கும் விடயம் சற்று ஆழமானது.

கடலுக்கடியில் தொழில்நுட்ப கேபிள்களை அமைப்பது அவசியமானதுதான். நாடு பொருளாதார நெருக்கடியில் இருந்துகொண்டிருக்கும்போது, ஒருநேரம் சாப்பாட்டை சமாளிக்க மக்கள் திண்டாடும் நிலையில், கடலுக்கு அடியில் கேபிள் போடுவதைப் பற்றி பேசுவதில் அர்த்தம் இல்லை.

இது எதிர்கால திட்டமாக இருந்துவிட்டு போகட்டும். ஆனால், மக்கள் ஒருநேர உணவை எப்படிச் சமாளிப்பது என்று மக்கள் திண்டாடும்போது, கடலுக்கடியில் கேபிள் இணைப்பா தேவைப்படுகிறது. எதிர்கால நலத் திட்டங்கள் எதுவாக இருந்தாலும், தற்போதைய நிலையில், மக்களை மறந்த செயல்பாடுதான் இது.

இந்த நாட்டில் புரையோடிப்போய் கிடக்கும் இனப்பிரச்சினைதான், இந்த நாட்டையும் அபிவிருத்தியையும் சின்னாபின்னமாக்கிவிட்டது என்பது ஜனாதிபதிக்கும் அரசியல் தலைவர்களுக்கும் தெரியாததல்ல. இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வை முன்வைப்பதன் மூலம் தான் நாட்டில் சுமுக நிலை ஏற்படும்.

நாட்டில் யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு, 2009ஆம் ஆண்டுமுதல் சமாதானம் நிலவுகிறது என ஜனாதிபதி கூறியிருக்கிறார். யுத்தம் ஏற்பட்டதன் அடிப்படை காரணிகளில் தீர்வு காணாமல், சமாதானம் நிலவுகின்றது என்ற ஜனாதிபதியின் கூற்று, யதார்த்தமாக தென்படவில்லை.

தேசிய பாதுகாப்பு விடயத்தில், திருப்திகொள்ளும் ஜனாதிபதி, இனப்பிரச்சினையும் தேசிய நலனோடும் அபிவிருத்தியோடும் தொடர்புபட்டது என்பதை ஏற்றுக் கொண்டதாகத் தெரியவில்லை. அதாவது, இனப்பிரச்சினை ஒன்று இந்த நாட்டில் இருக்கிறது என்பதை இந்த ஜனாதிபதியும் ஏற்க மறுக்கிறார் என்பது சிம்மாசன உரை மூலம் தெளிவாகின்றது.

சிங்களக் கடும்போக்காளர்களை திருப்திப்படுத்தும் போக்கில், கடந்தகால தலைவர்கள் நடந்துகொண்டதனால்தான், இன்று இந்த நாடு இன வேறுபாடுகளை உசுப்பேத்திய நிலையில் சீரழிவுடன் நகர்ந்துகொண்டிருக்கிறது. அதற்கு கட்டியம் கூறுவதுபோல்தான் ஜனாதிபதியின் செயல்பாடும் உணர்த்துகிறது.

தமிழர்களுக்கும் தமிழ் பேசும் முஸ்லிம்களுக்கும் பிரச்சினை இருக்கிறது. இன நசுக்குதல்களும் முரண்பாடுகளும் காலங்காலமாக தொடர்கின்றன.

இனப்பிரச்சினை இருக்கிறது என்ற உலகம் அறிந்த இந்த உண்மையை இலங்கை தலைமைகள் ஏற்க மறுப்பதுதான் இந்தப் பிரச்சினை பூதாகரமாக உருவெடுப்பதற்கு காரணமாகும். 70 வருட கால அரசியல் போராட்டம், 30 வருடகால உள்நாட்டு யுத்தம் இவையெல்லாம் பொழுதுபோக்கிற்கான நடவடிக்கைகளாக கருதமுடியாது. யதார்த்தத்தை புரிந்து, ஒரு பிரச்சினைக்குத் தீர்வு காண முயல்வது, போராடும் ஓர் இனத்துக்கான தனி அங்கீகாரம் என ஆட்சியிலிருந்த அரசாங்கங்கள் கருதியதனால்தான், நாடு இன்னும் துன்பங்களையும் பாரிய சவால்களையும் எதிர்கொள்கிறது.

நெருக்கடியில் நாடு தத்தளிக்கும்போது, வெளிநாட்டு உதவிகள் கிடைக்காமல் இருப்பதற்கு இனப்பிரச்சினையும் ஒரு காரணி என்பதை நாட்டு தலைமைகள் புரிந்துகொள்ள வேண்டும்.

நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவம்படுத்தும் வடக்கு, கிழக்கு தமிழ்த் தலைவர்களுக்கு ஜனாதிபதி ஒரு வேண்டுகோளை விடுத்திருக்கின்றார்.

"இந்த நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வடக்கு, கிழக்கு பிரதேசங்களிலுள்ள மக்களின் பிரதிநிதிகளிடம் நான் ஒரு வேண்டுகோளை விடுக்கின்றேன். பல்வேறுபட்ட அரசியல் கருத்து வேறுபாடுகளை, தற்காலிகமாக ஒருபுறம் வைத்துவிட்டு, உங்கள் பிரதேசங்களில் வாழும் மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கு, அரசு எடுக்கும் நடவடிக்கைகளுக்கு நீங்கள் உங்களது ஆதரவினை வழங்கவேண்டும்.

ஜனநாயகத்தைப் பலப்படுத்துவதற்காக சட்டத்தின் ஆதிக்கமும் வெளிப்படைத்தன்மையும் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பது எனது கடும் நம்பிக்கையாகும் -என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கேட்டுக்கொண்டார்.

## தமிழ் கட்சிகளுக்கான வேண்டுகோள் காலம் கடந்தவை

இலங்கையின் இனப்பிரச்சினை என்பது சர்வதேச மயப்படுத்தப்பட்டிருக்கிறது. தலைமைகளின் இயலாமையும் இனரீதியான புறக்கணிப்புகளும் 30 வருடகால யுத்தத்தின் பேரழிவுகளும், உயிரிழப்புகளும் இந்த நிலைக்கு விட்டுச் சென்றிருக்கின்றன. தற்காலிகமாகவேனும் கொள்கையை கைவிடுங்கள் என்று கேட்பது ஜனாதிபதியின் பண்பு என்றாலும், ஒரு யதார்த்தமாக தென்படவில்லை.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் வேண்டுகோள் ஆரோக்கியமானதுதான். ஆனால், காலம் கடந்த சிந்தனை வெளிப்பாடாகவே இதனை பார்க்க முடியும்.

தனிநாட்டுக் கோரிக்கையைகூட கைவிட்டு, அரசியல் அங்கீகாரத்திற்காக தொடர்ந்தும் போராடுபவர்கள் தமிழர்கள். குறிப்பாக, வடக்கு, கிழக்கு தமிழர்கள் இதற்கு ஒரு மாண்பு இருக்கிறது என்பதை மறுக்க முடியாது.

சுயநிர்ணய உரிமை, சுயாட்சி உரிமை, அதிகார பகிர்வுக்கான உரிமை என்பன தமிழர்களின் அடிப்படை கொள்கைகளாகும். இதுக்காகத்தான் வடக்கு, கிழக்கில் வாழும் தமிழர்கள் ஒவ்வொரு தேர்தலிலும் ஆணையை வழங்குகின்றார்கள்.

தற்காலிகமாக கொள்கையை கைவிடுமாறு கேட்பது, ஒரு சித்தாந்தத்தை கைவிடுமாறு கேட்பதற்கு ஒப்பானது. இந்த அடிப்படைகளை கைவிடுவது, மக்கள் ஆணையை கைவிடுவதற்கான அழைப்பாகத்தான் பார்க்க முடிகின்றது.

வடக்கு, கிழக்கு தமிழ் அரசியல் கட்சிகளுக்கு ஜனாதிபதியினால் கொடுக்கப்பட்ட இந்த அழைப்புக்கு சாதகமான பதில் கிடைக்கும் என்பது எதிர்பார்க்க முடியாமல்தான் இருக்கிறது.

இதேபோல், புலம்பெயர்ந்த தமிழர் அமைப்புகளுக்கும் ஜனாதிபதி முன்னர் அழைப்பு விடுத்திருந்தார். அந்த அழைப்பை, எட்டு புலம்பெயர் அமைப்புகள் முற்றாக நிராகரித்ததோடு, நிபந்தனைகளுடன் பேசுவதற்கு தயார் என அறிவித்தார்கள். அதோடு, அந்த முயற்சி கைவிடப்பட்டது. என்றாலும், புலம்பெயர் அமைப்புகளுடன் பேசுவதற்கான முயற்சிகளில் ஜனாதிபதி மீண்டும் இறங்கியிருக்கிறார்.

இலங்கைக்கு வருகை தந்த, பிரிட்டிஷ் தெற்காசிய, பொதுநலவாய, அபிவிருத்தி விவகாரங்களுக்கான அமைச்சர் தாரிக் அஹ[illegible]', ஜனாதி[illegible]தியை க[illegible]ந்த வியாழக்கிழமை கொழு[illegible]ல் சந்தித்து[illegible] பே[illegible]சினார்.

இதன்போது,

## ஆணையை மீறினால் தமிழ்க் கட்சிகளின் எதிர்காலம்?

பிரிட்டனிலுள்ள புலம்பெயர் அமைப்புகளுடன் பேசுவதற்கு வாய்ப்பை ஏற்படுத்தித் தருமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வேண்டுகோள் விடுத்திருந்தார். அவருடைய இந்த முயற்சி பாராட்டுக்குரியதுதான். ஆனால், புலம்பெயர் அமைப்புகளுடன் பேசுவதற்கு முன்னர், நாடாளுமன்றத்தில் கூடுதல் ஆசனங்களை வைத்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் அல்லது நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்க் கட்சிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தி ஆக்கபூர்வமான முடிவுகளை எட்டியபின் புலம்பெயர் அமைப்புகளுடன் பேசுவதுதான் ஓர் ஆரோக்கியமான நகர்வாக இருக்கும்.

இந்த பொதுஜன பெரமுன அரசாங்கம் ஆட்சிக்கு வந்த முற்பகுதியில், ஆக்கபூர்வமான சில அரசியல் நகர்வுகள் முன்னெடுக்கப்பட்டன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு ஜனாதிபதி அழைப்பு விடுத்திருந்தார். அதேநேரம் பேச்சுவார்த்தைக்கான திகதியும் குறிப்பிடப்பட்டிருந்தது. இது பின்னர் திடீரென காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டது.

சுமார் ஒரு வருடம் முடிவடைந்த பின்னரும், இன்னும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தமிழ்க் கூட்டமைப்பை சந்தித்துப் பேசவும் இல்லை; அதற்குரிய நேரமும் ஒதுக்கிக் கொடுக்கவில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேசுவதனால் எந்தப் பிரயோசனமும் இல்லை என்று ஜனாதிபதி யோசிக்கின்றாரா அல்லது சிங்கள கடும்போக்காளர்களுக்கு அஞ்சுகிறாரா என்பது தெரியாமல்தான் இருக்கின்றது. இந்நிலையில், மீண்டும் புலம்பெயர் அமைப்புகளுடன் பேச முற்படுவது, அரசியலில் பெரும் சலசலப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

எதிர்வரும் மார்ச் மாதம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவை கூட்டத்தொடர் ஆரம்பமாக இருக்கின்றது. அதற்கு முன்னர் புலம்பெயர் அமைப்புகளுடன் பேசுவதாக காட்டி, சர்வதேச அழுத்தங்களை சமாளிக்கலாம் என ஜனாதிபதி யோசிக்கிறார் என்று எண்ணத் தோன்றுகின்றது.

சிம்மாசன உரையாற்றிய ஜனாதிபதி, தனது ஆட்சியில் மனித உரிமை மீறலுக்கு இடமில்லை எனவும், நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது எனவும் கூறினார். அதேநேரம், பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் காலத்துக்கேற்ற மாற்றங்களை செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குமாறு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை கடந்த ஆண்டு தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது.

பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்காவிட்டால் ஜிஎஸ்பி வரிச்சலுகையை நிறுத்தப்போவதாக ஐரோப்பிய யூனியன் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது. இந்நிலையில், அழுத்தங்களை சமாளிப்பதற்காக ஜனாதிபதி இந்த முயற்சிகளில் இறங்கியிருக்கிறார் என அரசியல் ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள் .

ஜனாதிபதியின் சிம்மாசன உரையில், முற்றுமுழுதாக எதுவுமே இல்லை என்று கூறும் சிரேஷ்ட தமிழ் தலைவர் இரா.சம்பந்தனும் ஏனைய தமிழ்க் கட்சிகளும் சிம்மாசன உரையை முழுமையாக நிராகரிக்கின்றன. இனப்பிரச்சினைக்கான தீர்வை கடலுக்கு அடியிலா தேடுவது என்ற ரணில் விக்கிரமசிங்கவின் கருத்தும், சிம்மாசன உரையை முறைத்துப் பார்க்க வைத்திருக்கிறது.

**– க.குணராசா –**



LK Newspapers Viber Community

# கல்வி, சமூக சேவையில் அர்ப்பணிப்புடன்

# அயராது பாடுபடும் கலாநிதி எம்.எம்.ஹனிபா

சர்வதேச மனித உரிமைகள் அமைப்பின் இலங்கைக்கான இணைப்பதிகாரியும் மாத்தளை ரோயல் ஆங்கிலப் பாடசாலையின் பிரதம இயக்குனரும், தேசமான்ய கலாநிதி முஹமட் முஹ்சீன் ஹனிபாவின் கல்வி மற்றும் சமூகப் பணி அளப்பரியது.

கடந்த கால்நூற்றாண்டுகளுக்கு மேலாக சர்வதேச ஆங்கில மொழிக் கல்வி அறிவிலும் புறக்கிருத்தியச் செயற்பாடுகளிலும் அவரது கல்லூரி மாணவ, மாணவிகள் அடைந்துள்ள சாதனைகளையும் வருடந்தோறும் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களுக்கும் இலங்கை பல்கலைக்கழகங்களுக்கும் தனியார் கம்பனிகளில் உயர் பதவிகளுக்கும் செல்லும் மாணவர் மாணவிகளின் சிறப்புகளை வைத்து அறிந்துகொள்ள முடியும். அவை மாத்திரமல்ல, கலாசாரம், பண்பாடு, ஒழுக்க விழுமியங்கள், சமூக நல்லிணக்கம் என்பவற்றிலும் மேலோங்கச் செய்வதில் சிறப்புமிக்க ஒருவர். மாத்தளை நாலாபுறங்களிலுமிருந்து வரும் மாணவ, மாணவிகளை நெறிப்படுத்தி அறிவொளியூட்டி புகழ்மணம் பரப்பவைக்கும் பெருமையும் அவரையே சாரும். இவர் அகில இலங்கை சமாதான நீதவானும் கூட. கல்விச் சேவையிலும் சமூக சேவையிலும் அர்ப்பணிப்புடன் அயராது பாடுபட்டுவரும் அவரின் பணியைப் பாராட்டி பல்வேறு அமைப்புகள் விருதுகளை வழங்கி கௌரவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

2008இல் கண்டி நில் லைவ் பௌத்த அமைப்பு 'தேச சக்தி லங்கா புதித' என்ற பட்டம் வழங்கி கௌரவித்துள்ளது. 2012இல் மாத்தளை விபுலானந்தர் கலாமன்றம் முத்தமிழ் விழாவில் விருது வழங்கி கௌரவித்துள்ளது. 2005இல் ஸ்ரீலங்கன் மத்திய ஊக்குவிப்புக்கான விருது. 2010இல் தேசகீர்த்தி தேசமாவத்த லங்காதிலக்க தேசமான்ய விருது. 2012இல் மனித உரிமைகள் அமைப்பின் விருது. இது மறைந்த முன்னாள் பிரதமர் டி.எம்.ஜயரட்னவினால் வழங்கப்பட்டது. 2011இல் இலங்கை மனித உரிமைகள் ஆணையாளர் நிறுவனத்தின் மூலம் வழங்கப்பட்டது. 2018இல் கல்வி அமைச்சினால் நடத்தப்பட்ட தேசிய தமிழ் மொழி தின விழாவின்போது சமூக சேவைப் பணிக்கான விருது என இன்னும் பல





விருதுகளையும் பாராட்டுகளையும் பெற்றவர்.

08-12-2021 அன்றுமுதல் சர்வதேச மனித உரிமைகள் அமைப்பின் இலங்கைக்கான இணைப்பதிகாரி, மாத்தளை வர்த்தக சங்கத்தின் முன்னாள் தலைவர், அனைத்து சர்வதேச ஆங்கிலப் பாடசாலைகளின் முன்னாள் தலைவர், 2009இல் சர்வதேச பவுன்டேசன் அமைப்பின் தலைவர், 2013இல் சோகம் நிகழ்வின்போது மாத்தளை மாவட்டத்திற்கான பிரதிநிதி, மாத்தளை மக்கள் பாதுகாப்பு அமைப்பின் தலைவர், மாத்தளை மாவட்ட பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் பொதுச் செயலாளர், பேராதனை போதனா வைத்தியசாலை அபிவிருத்திக் குழுவின் முன்னாள் உறுப்பினர், பைத்துல்மால் நிதியத்தின் முன்னாள் தலைவர் என பல்வேறு சமூக அமைப்புகளிலிருந்து மக்களின் மேம்பாட்டுக்காக உழைத்துவரும் ஒரு பெருந்தகையாளர். அவர் ஞாயிறு 'தமிழன்' பத்திரிகைக்கு வழங்கிய செவ்வி.

**உங்களது ஆரம்ப கல்வி வாழ்க்கை குறித்து கூறுவீர்களா?**

1950களில் நான் மாத்தளையில் பிறந்தேன். தந்தை முஹமட் முஹ்சீன். தாயார் நோனா ரஹீம். இருவரும் மரணமடைந்துவிட்டார்கள். நான் மாத்தளை சாஹிராக் கல்லூரியில் கற்றேன். ஆரம்பம் முதல் உயர் தரம் வரையிலும் அங்குதான் கற்றேன். 1972களில் ஆங்கில உதவி ஆசிரியர் நியமனம் கிடைத்தது.

**அப்படியாயின் உங்களது கல்விகள் சேவைகள் பற்றி**

என்னுடைய முதல் நியமனம் கெக்கிராவை ஹொராப்பொல முஸ்லிம் மத்திய கல்லூரியாகும். அங்கு ஐந்து வருடம் கடமையாற்றினேன். அடுத்து கலேவெல அல்-புர்க்கான் முஸ்லிம் மகா வித்தியாலயம். அங்கும் ஐந்து வருடம் சேவைகள் செய்தேன். அதனையடுத்து நாவுல ரஜ்ஜம்மன முஸ்லிம் வித்தியாலயம். அங்கும் நான்கு வருடம் சேவையாற்றினேன். இறுதியாக 1984களில் நான் கற்ற பாடசாலையான மாத்தளை சஹிராக் கல்லூரிக்கு வந்து ஐந்து வருடம் சேவையாற்றினேன்.

1990களில் இப்பாடசாலையில் இருந்துதான் ஓய்வு பெற்றேன். முன்னாள் ஜனாதிபதி ஆர்.பிரேமதாசவினால் 1990களில் அரச உத்தியோகத்தர்கள் விருப்பமுடையவர்கள் ஓய்வு நிலைக்குச் செல்லலாம் என்ற சுற்றுநிருபத்திற்கு இணங்க 60 வயது நிறைவடைவதற்கு முன்னரே நான் ஓய்வுபெற்றேன். அதற்குப் பின்னர் கொழும்பு சர்வதேச பாடசாலையில் கல்வி கற்பித்துக் கொடுப்பதோடு, தனியார் வகுப்புகளில் படிப்பிப்பதிலும் ஈடுபட்டேன். தனியார் வகுப்புகளுக்கு கொழும்பில் பெரியளவில் கிராக்கி இருந்தது.

இக்காலகட்டத்தில் மாத்தளையில் இயங்கிக்கொண்டிருந்த சர்வதேச ஆங்கிலப் பாடசாலையில் அதிபராக பொறுப்பேற்று நடத்த வருமாறு அழைப்பு விடுத்தார்கள். அதனைப் பொறுப்பேற்று நீண்டகாலமாக அதிபராக கடமையாற்றி வந்தேன். பின்னர் அந்த சர்வதேச ஆங்கிலப் பாடசாலையின் உரிமையாளர்கள் பல காரணங்களால் அதனைத் தொடர்ந்து செய்யமுடியாத நிலைமையினால் அதனை முழுமையாக எடுத்துச் செய்வதற்கு என்னிடம் ஒப்படைத்தார்கள். அதனைப் பொறுப்பேற்று அன்றுமுதல் இன்றுவரையிலும் மிகவும் திறன்படச் செய்துவருகின்றேன். 'சர்வதேச ரோயல் ஆங்கிலப் பாடசாலை' என்ற பெயரில் அது இயங்கி வருகின்றது. சுமார் 1000 மாணவ, மாணவிகள் வரை கல்வி கற்று வந்தார்கள்.

எனினும், கொரோனா தொற்றுக் காலகட்டத்திற்குப் பிறகு எல்லா சர்வதேச பாடசாலைகளுக்கும் ஒரு பின்னடைவு இருக்கிறது. அந்தப் பின்னடைவு எங்களுக்கும் ஏற்பட்டிருக்கிறது. ஆதலால் மாணவர்கள் கொஞ்சம் குறைந்து காணப்படுகிறார்கள். இப்பாடசாலை எல்லா சமூகத்திலுள்ள பிள்ளைகளும் கல்வி பயிலும் பாடசாலையாகும். தேசிய சகவாழ்வு சமூக நல்லிணக்கம் என்பவற்றை இப்பிள்ளைகள் ஊடாக ஏற்படுத்தி எங்கள் கண்ணூடாகப்



பார்த்துக்கொண்டு இருக்கின்றோம். மாணவர்கள் நல்ல பெறுபேறுகளையும் பெற்று வருகின்றார்கள்.

சர்வதேச பாடசாலையில் படிக்கின்ற பிள்ளைகள் பல்கலைக்கழகம் மட்டுமல்ல, ஆங்கில அறிவுத் திறமை தேர்ச்சி பெற்றமையால் அவர்களுக்கு தனியார் பல்கலைக்கழகங்களில் நிறைய வாய்ப்புகள் காணப்படுகின்றன. இவர்கள் குறைந்த வயதில் பல்கலைக்கழகங்களில் படிப்பை முடித்து தனியார் கம்பனிகளில் தொழில் வாய்ப்பை இலகுவில் பெற்றுக்கொள்கின்றார்கள்.

பொதுவாக க.பொ.த. சாதாரண தரம் கற்று தேர்ச்சிபெற்ற பிள்ளைகள் பல்கலைக்கழகங்கள் சென்றால் ஆங்கிலப் புலமையை வளர்த்துக் கொள்ள 2 வருடங்களும் பின்னர் அதன் பாடநெறியை பூர்த்திசெய்வதற்கு 4 வருடங்களும் தேவைப்படும். ஆகவே பட்டதாரிகளாக வெளியாவதற்கு க.பொ.த. சாதாரண தரம் முடித்தவுடன் ஆறு அல்லது ஏழு வருடங்கள் போகும். ஆனால், ஆங்கிலக் கல்வி படித்த பிள்ளைகளுக்கு சர்வதேச பல்கலைக்கழகங்களுக்கு ஆறு மாத அடிப்படைக் கல்வியினைக் கற்றுவிட்டு அதன் முடிவோடு பட்டதாரிக் கல்வியினை ஆரம்பித்து குறைந்த இரண்டு அல்லது இரண்டரை வருடங்கள் அல்லது கூடினால் மூன்று வருடங்களில் பட்டதாரிகளாக ஆகிவிடுகின்றார்கள். அதாவது, ஆகக்கூடினால் க.பொ.த. சாதாரணம் முடித்துவிட்டு மூன்று மூன்றரை வருடங்களுக்குள் ஒரு பட்டதாரியாக வெளியாகிவிடுகின்றார்கள்.

இந்தப் பிள்ளைகள் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் பட்டங்கள் பெற்றமையினால் வெளிநாடுகளில் தொடர்ந்து மேல்படிப்புகளையோ அல்லது வேலைவாய்ப்புகளைத் தேடிக்கொள்ளவோ மிக இலகுவாக விண்ணப்பம் செய்து தமது முயற்சியில் முன்னேறி வருகின்றனர். அது அவர்களுடைய ஆங்கிலப் புலமையே முக்கியமான காரணமாக அமைகின்றது.

வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்பை மேற்கொண்டால் தனியார் கம்பனிகளில் வெளிநாடுகளிலும் கொழுத்த சம்பளத்தில் வேலைவாய்ப்பை பெற்றுக்கொள்பவர்களாக உள்ளனர். இதற்கான சந்தர்ப்பங்களை சர்வதேச ஆங்கிலப் பாடசாலைகள் ஏற்படுத்திக்கொடுத்துள்ளன.

இங்கு கல்வி கற்ற எண்ணற்ற மாணவ, மாணவிகள் வெளிநாடுகளில் உயர்ந்த இடத்தில் தொழில் புரிந்துகொண்டிருக்கிறார்கள். இலங்கைக்கு அதிகளவிலான அந்நிய செலாவணியை ஈட்டுத் தருபவர்களாக உள்ளார்கள். அமெரிக்கா, அவுஸ்திரேலியா, இங்கிலாந்து, கனடா முதலிய இன்னும் பல நாடுகளில் தொழில் புரிகின்றார்கள். அந்நாடுகளிலிருந்து அடிக்கடி என்னோடு தொடர்புகொண்டு பேசுவார்கள். இலங்கை வந்தால் என்னை வந்து பார்க்காமல் செல்லமாட்டார்கள். இந்த சர்வதேச ஆங்கிலப் பாடசாலை பாரிய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. இது எனக்கு ரொம்ப சந்தோஷம்.

தற்கால மாணவர் சமூகத்திற்குத் தேவையான நிறைவான இலட்சியங்கள் மற்றும் தரமான ஆளுமைத் திறன்களுடன் பட்டை தீட்டப்பட்ட தரமான மாணவர் சமூகத்தை உருவாக்கி அவர்களுடைய அறுவடைகளைப் பார்த்து ஆனந்தப் பரவசமடைந்து வருகின்றேன்.





**நீங்கள் எதிர்நோக்கிய சவால்கள் பற்றிக் கூறுவீர்களா?**

உண்மையில் எனக்கு வறுமைதான் பெரிய சவாலாக இருந்தது. காரணம், எங்கள் குடும்பத்தில் ஒன்பது பிள்ளைகள். தந்தையால் மட்டும் குடும்பச்சுமையைத் தாங்க முடியாதவராக இருந்தார்.

இதற்கு நானே பிரத்தியேகமான தனியார் வகுப்புகளை நடத்தி எனக்குரிய பயிற்சிக் கொப்பிகளை வாங்கிக்கொள்வேன். எனது தகப்பனின் வருமானம் குடும்ப வாழ்க்கை முறைக்கு போதாத ஒரு நிலைமை காணப்பட்டது. ஆகவே, குடும்பத்தில் மூத்தவன் என்ற வகையில் நான் தம்பிமார்கள் தங்கைமார்களின் படிப்புக்காக பயிற்சிக் கொப்பிகள், புத்தகங்கள் வாங்கிக் கொடுப்பேன். எனக்கு கொப்பிகள், புத்தகங்களை வாங்கிக்கொள்வேன். நான் படித்துக்கொண்டே என்னுடைய சகோதர சகோதரிகளுக்குத் தேவையான கல்வி நடவடிக்கைகளுக்கு உதவி செய்தேன்.

இப்படி குடும்பம் வருமானமின்றி துயரற்ற நிலைமை காணப்பட்டபோது தம் உள்ளத்திற்கும் உடலுக்கும் ஆரோக்கியமான ஏதாவது ஒரு பயன்மிகு தொழிலைத் தேடிச் செய்து அதைத் திட்டமிட்டு அதில் சிறு வருமானத்தை ஈட்டி குடுபத்தின் பாரத்திற்கு சுமைதாங்கியாக இருந்துவந்துள்ளேன். எல்லோரையும் கைகொடுத்து எழுப்பிவிடக் கூடியதாக இருந்தது.

**நீங்கள் ஆற்றிவரும் சமூக சேவை பற்றி கூறுங்களேன்?**

என்னுடைய ஆரம்பகாலம் என்பது வறுமைதான். அதனை நன்கு உணர்ந்தவன். வறுமையிலுள்ள ஒரு குடும்பம் எந்த நிலையில் ஒரு கஷ்டத்தை அனுபவிக்கும் என்பதை அறிந்திருக்கின்றேன். அவர்களுடைய பிள்ளைகளைப் படிக்கவைப்பதில் எத்தகைய பிரச்சினைகளை எதிர்நோக்குவார்கள் என்பது பற்றி எனக்கு நன்கும் தெரியும். நான் இதில் நிறைய அனுபவங்களைச் சந்தித்துள்ளேன். அந்தவகையில் ஒவ்வொரு வருடமும் மிகவும் பின்தங்கிய குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளுக்கு கற்றல் உபகரணங்கள், புத்தகப் பைகள், சப்பாத்து என தொடர்ந்து இந்தப் பணிகளைச் செய்து வருகின்றேன்.

எங்கள் பாடசாலை தனியார் சர்வதேச பாடசாலையாக இருந்தாலும் கொரோனா தொற்றுத் தாக்கத்தின் காரணமாக நல்ல நிலையில் இருந்த குடும்பங்கள் திடீரென சறுக்கி விழுந்து வறுமையிலும் கஷ்டத்திலும் துன்பத்திலும் வெளியே காட்டிக்கொள்ள முடியாமல் பலர் வாழ்ந்து வருகின்றனர். அவர்களது பிள்ளைகள் எங்களது சர்வதேச பாடசாலையில் கல்வி பயில்கின்றனர். அவர்களுடைய பிரச்சினைகளை அறிந்து அவர்களின் பிள்ளைகள் தொடர்ந்து படிப்பதற்கான சலுகைகளையும் சந்தர்ப்பங்களையும் நாங்கள் வழங்கிக்கொண்டு இருக்கின்றோம்.

நிறைய பேர் தொழிலை இழந்து நிற்கிறார்கள். விசேடமாக இவ்வளவு காலமும் பிள்ளைகளின் கல்வி மேம்பாட்டுக்காக தியாகம் செய்த பெற்றோர்கள் இந்த கொரோனாவினால் தொழிலை இழந்தும் வருமானம் இழந்தும் மிகவும் கஷ்டமான நிலைமையில் உள்ளனர். அது எங்களுக்கு ஒரு பொதுவான பாதிப்பாக இருந்தாலும் இவ்வளவுகாலமும் தங்கள் பிள்ளைகளைப் படிப்பிப்பதற்காக வகிபங்காற்றிய பெற்றோர்கள் பிள்ளைகளை படிப்பிப்பதற்கான கட்டணங்களையோ வேறு தேவைகளை நிறைவுசெய்து கொள்ள முடியாமல் இருக்கின்றார்கள். எங்களுக்கும் ஒரு பொதுவான மனிதநேயமும் ஒரு கடமைப்பாடும் இருக்கிறது. நாங்கள் அவர்களை கைவிடவில்லை. அந்தப் பிள்ளைகளுக்கு தொடர்ந்து கல்வி புகட்டி வருகின்றோம். அவர்களுக்கு பல சலுகைகள் வழங்கி தொடர்ந்து அவர்களின் கல்வி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம்.



**நீங்கள் பொதுச் சேவையில் ஆற்றிவரும் சமூகப் பணிகள் எவை?**

உண்மையிலேயே பொதுச் சேவையில் பல்வேறு பிரிவு மட்டங்களிலும் இணைந்து சேவையாற்றி வருகின்றேன். சமூகத்தில் நல்ல காரியங்கள் செய்யும்போது மேலும் பொதுவான காரியங்களில் ஈடுபடுவதற்கான அமைப்பு சாதாரணமாக எல்லோருக்கும் தானாக வரும். அதனால் பல்வேறு மட்டங்களிலும் என்னுடைய சமூகப் பணிகளை பரந்துபட்ட அடிப்படையில் செய்து வந்துள்ளேன். குறிப்பாக, மாத்தளையில் 13 வருடம் பைத்துல் மால் நிதியத்தின் தலைவராக இருந்து பாரிய சமூகப் பங்களிப்பைச் செய்துள்ளேன். 2018ஆம் ஆண்டு கல்வி அமைச்சினால் மாத்தளையில் நடத்திய தேசிய தமிழ் மொழி தின நிகழ்வில் பைத்துல்மால் நிதியத்தின் மூலம் சமூகத்திற்கு நற்பணி புரிந்தமைக்காக கல்வி இராஜாங்க அமைச்சர் வி. இராதாகிருஸ்ணனின் மூலம் பாராட்டும் கௌரவமும் கிடைக்கப்பெற்றது.

(தொடர்ச்சி 10ஆம் பக்கம்)

LK Newspapers Vibe Community

# தனுஷின் விவாகரத்து அறிவிப்பால் அதிர்ச்சியில் ரஜினி

நடிகர் தனுஷ் மற்றும் அவரது மனைவி ஐஸ்வர்யா ரஜினிகாந்த் இருவரும் கணவன் மனைவி உறவிலிருந்து பிரிவதாக கடந்த 17ஆம் திகதி டுவிட்டரில் அறிவித்திருந்தனர். இதனால் தனுஷின் ரசிகர்கள் மட்டுமல்லாது ரஜினியின் ரசிகர்களும் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

"நண்பர்களாக, காதலர்களாக, பெற்றோர்களாக நாங்கள் இருந்த 18 வருட திருமண வாழ்க்கை முடிவுக்கு வருகிறது. ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்தும், புரிந்துகொண்டும் வாழ்வின் ஒவ்வொரு தருணத்தையும் கடந்து சென்றுள்ளோம். இனி நானும், ஐஸ்வர்யாவும் தனித்தனியே வாழ்க்கையைத் தொடர உள்ளோம். எங்களை நாங்களே தனித்தனியாக புரிந்து கொள்ளும் நேரம் இது. எங்களின் இந்த முடிவிற்கு மதிப்பளித்து அனைவரும் உறுதுணையாக நிற்குமாறு கேட்டுக்கொள்கிறேன்" என்பதுதான் அந்தப் பதிவு.


அவர் பதிவிட்ட அடுத்த சில நிமிடங்களில் ஐஸ்வர்யாவும் இதேபோன்றதொரு பதிவை இட்டுள்ளார். ஐஸ்வர்யாவின் பதிவில், "இதற்கு கேப்ஷன் தேவையில்லை உங்கள் அனைவரின் அன்பும், ஆதரவுமே தேவை" எனக் குறிப்பிட்டிருந்தார். கவனமாக, தன் பெயரை ஐஸ்வர்யா ரஜினிகாந்த் என்று குறிப்பிட்டிருந்தார்.

திரையுலகில் விவாகரத்து, மறுமணம் என்பது அடிக்கடி நடைபெறும் சம்பவம். சினிமா உலகைத் தாண்டி அரசியல், ஆன்மீகம் என உச்சத்தில் இருக்கும் ரஜினியின் குடும்பத்தில் இருந்து இப்படி ஒரு அறிவிப்பு வெளியாகும் என எவரும் எதிர்பார்க்கவில்லை. விவாகரத்துப் பிரச்சினை சுமார் மூன்று வருடங்களாக நீறு பூத்த நெருப்பாக இருந்ததாகவும் இப்போது கனலாக வெளியாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. நடிகர் தனுஷ் மற்றும் நடிகர் ரஜினிகாந்தின் மகளான ஐஸ்வர்யாவுக்கும் கடந்த 2004ஆம் ஆண்டு பெற்றோர்களால் நிச்சயிக்கப்பட்ட காதல் திருமணம் நடந்தது. இவர்களுக்கு இரு மகன்கள் இருக்கிறார்கள்.

நடிகர் தனுஷ் தமிழ் சினிமாவிற்கு பெருமை தேடித்தந்த பிரபலங்களில் ஒருவர். தமிழை தாண்டி தெலுங்கு, ஹிந்தி, ஹொலிவூட் என எல்லா மொழிகளிலும் நடித்து வருகிறார்.

அவரது நடிப்பில் சமீபத்தில் ஹிந்தியில் 'அத்ரங்கி ரே' என்ற திரைப்படம் வெளியாகி பட்டை கிளப்பியது. இந்த நேரத்தில் தான் நடிகர் தனுஷ் அவரது மனைவி ஐஸ்வர்யாவை விவாகரத்து செய்ய முடிவு செய்துள்ளதாக அறிக்கை வெளியிட்டுள்ளார்.

தனுஷ் - ஐஸ்வர்யா விவகாரத்து இப்போது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. எந்தவொரு முடிவையுமே ஒரே நாளில் எடுத்து விட முடியாது. திருமணம், விவாகரத்து போன்ற விடயங்களும் அப்படித்தான். 25 ஆண்டுகாலம் வாழ்ந்து வெள்ளி விழா கொண்டாடிய தம்பதியர் கூட விவாகரத்து செய்து பிரிந்திருக்கின்றனர். அப்படித்தான் 18 ஆண்டு காலம் குடும்பம் நடத்திய தனுஷ் ஐஸ்வர்யாவும் இப்போது



தனுஷ் நடிக்கும் திரைப்படங்களில் தொடர்ந்து முத்தக் காட்சிகள் இடம்பெற்றதால் அவரது குடும்ப வாழ்க்கையில் விரிசல் ஏற்படுத்துவதாக செய்திகள் வெளியானாலும் நடிகர் தனுஷ் - ஐஸ்வர்யா இணைந்து பொது நிகழ்ச்சிகளில் தோன்றி தங்கள் உறவு சுமுகமாக இருப்பதை காட்டிக்கொண்டனர். சமீபத்தில் தான் இவர்கள் இருவரும் கோயிலுக்கு சென்று மாலையும் கழுத்துமாக நின்ற புகைப்படம் இணையத்தில் வெளியானது.

தனுஷின் சினிமா வாழ்க்கை அடுத்த கட்டத்தை நோக்கி நகர்ந்தது. தமிழ்ப் படங்கள் மட்டுமல்லாது, பொலிவூட், ஹொலிவூட்



இணையத்தில் அதிகம் விவாதிக்கப்படுகிறது. தனுஷ், ஐஸ்வர்யா என்கிற நபர்களைக் கடந்து ரஜினிகாந்த் என்கிற மனிதர் இதை எப்படி எடுத்துக்கொண்டார் என்பதே பலரின் கேள்வியாக, ஏக்கமாக இருந்தது. அவர் இதை மனதளவில் தாங்கிக்கொள்ள வேண்டும் என்பதே அவர்களின் ஆதங்கமாக இருந்தது. பொங்கலன்றுதான் ரஜினிகாந்த் தனது வீட்டிற்கு வந்த ரசிகர்களை உற்சாகமாகச் சந்தித்தார். அதற்குள் இப்படி ஆனது.

சமீபத்தில் ஹொலிவூட் படமான 'தி கிரே மேன்' ஷூட்டிங்கிற்கு தனுஷ் சென்றபோது ஐஸ்வர்யாவும் கூடப் போயிருந்தார். தேசிய விருது பெறும் விழாவின்போதுதான் ரஜினி, தனுஷ் இருவரும் ஒரே மேடையில் விருதுபெற, உச்சி மோந்து பாராட்டிப் பதிவிட்டார் ஐஸ்வர்யா. அதன்பிறகு தனுஷின் குலதெய்வக் கோயிலுக்கு குடும்பத்துடன் சென்று வழிபட்டார்கள். இப்படியிருக்க, இடையில் என்ன ஆனது என்பதுதான் பலருக்கும் தோன்றும் கேள்வி.



பிரியப்போவதாக அறிவித்துள்ளனர். இதற்கான பின்னணி என்னவாக இருக்கும் என்பதுதான் பலரதும் கேள்வியாக உள்ளது. சினிமாவில் நடிக்க வந்து சில ஆண்டுகளிலேயே பிரபலமான தனுஷ் சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் மகளை திருமணம் செய்து கொண்டு பெரிய குடும்பத்து மருமகனானார். இந்த தம்பதியினருக்கு யாத்ரா, லிங்கா என்ற இரண்டு குழந்தைகள் உள்ளனர்.

நடிகராக இருப்பதால் நடிகைகளுடன் பல முறை கிசுகிசுக்களில் சிக்கியுள்ளார் தனுஷ். பல நடிகைகளின் மண முறிவுக்கும் காரணம் தனுஷ்தான் என்று பேசப்பட்டது. சர்ச்சைகள் எழுவதும் சமாதானம் ஆவதும் வாடிக்கையானது.

என பயணப்பட்டார் தனுஷ். ஐஸ்வர்யாவும் சினிமாவில் கவனம் செலுத்தினாலும் ஆன்மீகத்தின் பக்கம் பார்வையை திருப்பினார். கடந்த ஆண்டு அப்பா ரஜினிகாந்த் உடன் இமயமலைக்கு பயணப்பட்டார். பத்ரிநாத், கேதார்நாத் சென்று வந்தது முதலே நிறைய மாற்றங்கள் ஐஸ்வர்யாவின் வாழ்க்கையில் தென்பட ஆரம்பித்தது.

ஆன்மீகத்தின் பக்கம் கவனத்தை திருப்பிய ஐஸ்வர்யா, யோகாவில் ஆர்வம் காட்டத் தொடங்கினார். பெண்களுக்காக திவா யோகா மையத்தை தொடங்கினார். யோகாவில் முழுவதுமாக அர்ப்பணிக்க விரும்புவதாகவும் அதனால் இல்லற வாழ்க்கையிலிருந்து விடுபட விரும்புவதாகவும் தனுஷிடம் கூறினாராம். தனுஷ் முதலில் ஏற்க மறுத்தாலும் தொடர் வற்புறுத்தல் காரணமாக, ஐஸ்வர்யாவின் விருப்பத்திற்கு சம்மதம் கூறியதாகவும் தெரிகிறது.

மகள், மருமகனின் திருமண வாழ்க்கையில் ஏற்பட்ட கசப்பான அனுபவங்கள் ரஜினிகாந்தை நிறையவே பாதித்துள்ளன. இருவரையும் அழைத்து பேசினாலும் பிரியவேண்டும் என்ற முடிவில் உறுதியாக இருந்துள்ளனர். இதனையடுத்தே இருவரும் பரஸ்பரம் தங்கள் முடிவை அறிவித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. சமந்தா - நாக சைதன்யா பிரிவுக்குப் பிறகு தனுஷ் - ஐஸ்வர்யா பிரிவே

இருவரின் விவாகரத்து பேச்சுவார்த்தை அளவிலேயே கடந்த பல மாதங்களாக இருந்தது. ஒவ்வொரு தடவையும் அந்தப் பேச்சு இறுதிக்கு வரும்போது ரஜினி அழைத்து சமாதானம் செய்வார். பிள்ளைகள் யாத்ராவும் லிங்காவும் அதை மேற்கொண்டு தள்ளிக்கொண்டு போகச் செய்வார்கள். குழந்தைகள் நலம் பற்றி யோசித்தவர்கள் யாத்ராவும் லிங்காவும் 14, 11 வயதை அடைந்த பிறகு மறுபடியும் இதைப்பற்றி யோசிக்க ஆரம்பித்துவிட்டார்கள். குழந்தைகளுக்கு இந்தப் பிரிவு பற்றி இருவராலும் சொல்லப்பட்டு விட்டதாம். அவர்கள் எப்போது வேண்டுமானாலும் இருவரையும் போய் சந்திக்கலாம் என்றும் அதற்கு எந்தத் தடையும் விதிக்கப்படவில்லை என்றும் சொல்கிறார்கள். குழந்தைகள் இருவரும் தொடர்ந்து ஐஸ்வர்யாவிடமே வளர்வார்கள்.

போயஸ்கார்டனில் புதுவீடு கட்டப்பட்டு வருகிறது. தனுஷ், ஐஸ்வர்யா இருவருக்குமான வீடென அறிவிக்கப்பட்டது. இருவரும் இணைந்து நடத்தும் நிறுவனங்களின் நிலை என்ன என்பது தெரியவில்லை.

அதாவது, தங்கமகன் படத்திற்கு பிறகு தனுஷ் மற்றும் சமந்தா இடையே நெருக்கம் அதிகரித்தது இவர்களின் விவாகரத்துக்கு காரணம் என சமூக வலைத்தளங்களில் பகிரப்பட்டு வருகிறது. இந்தப் படத்திற்கு பிறகு தனுஷ் வாழ்க்கையில் மனக் கசப்பு ஏற்பட்டதாக சொல்லப்படுகிறது.

சமந்தா தன்னுடைய கணவர் நாக சைதன்யாவை விவாகரத்து செய்தபோதும் இந்த விவாகரத்துக்கு பின்னணியில் தனுஷ் இருப்பதாக பேசப்பட்ட நிலையில் தற்போது தனுஷின் விவாகரத்து பின்னணியில் சமந்தா இருப்பதாக பேசப்பட்டு வருகிறது.

**தனுஷ் - ஐஸ்வர்யா விவாகரத்து இந்த நடிகை தான் காரணமா? வெளியான அதிர்ச்சி தகவல்**

அதுமட்டுமல்லாமல் போயஸ்கார்டனில் இடம் வாங்கி வீடு கட்டுமாறு ரஜினிகாந்த் வற்புறுத்தியதாகவும் இதனால் கடன் சுமையால் சிக்கித் தவித்த தனுஷிற்கு அவர் எந்தவித உதவியும் செய்யாததும் இந்த விவாகரத்துக்கு காரணம் எனச் சொல்லப்படுகிறது. இதுபோன்று பல்வேறு காரணங்கள் சமூக வலைதளங்களில் வலம் வரத் தொடங்கியுள்ளன.

ஆனால் உண்மை என்ன என்பது சம்பந்தப்பட்டவர்கள் மனம் திறந்தால் தான் தெரியும். கொஞ்ச நாட்களுக்கு பரபரப்பாகப் பேசப்படும் இச்செய்தி, பின்னர் மறக்கடிக்கப்பட்டுவிடும். அவரவர்கள் தங்களை வேலையில் ஐக்கியப்படுத்திக் கொண்டு இந்தக் கடினமான சூழலைக் கடப்பார்கள். காலம் எல்லாவற்றையும் மறக்கடிக்கும்.

**அபி**








(09 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பைத்துல்மால் நிதி என்பது ஸகாத்தின் நிதியாகும். இது செல்வந்தர்கள் ஏழைகளுக்காக வழங்கப்படும் கட்டாய நிதியாகும். செல்வந்தர்கள் தங்களுடைய சொத்துகளைக் கணக்குப் பார்த்து உள்ள தொகைக்கு சரியான முறையில் நிதியினை வழங்குதல் வேண்டும். அந்த நிதியினை யார் பெறத் தகுதிவாய்ந்தவர்கள் என ஆராய்ச்சிசெய்து அது நியாயமான முறையில் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.

இந்த நிதி உதவியைப் பெற்றுக்கொள்வதற்காக யார் யாரெல்லாம் விண்ணப்பம் செய்கின்றார்களோ அதற்கென ஒரு குழுவை நியமனம்செய்து குறித்த விண்ணப்பதாரி அந்த உதவியைப் பெற்றுக்கொள்வதற்கு தகுதியானவரா என்பதை ஆராய்ந்து அவர்களுக்கு உதவிகள் செய்து வந்துள்ளேன்.

பல்கலைக்கழகங்களுக்கு தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கு தொடர்ந்து புலமைப் பரிசில் நிதி உதவிகள் வழங்குதல், வறிய குடும்பப் பிள்ளைகளின் திருமண வைபவத்திற்கு உதவுதல், வீடற்ற வறிய குடும்பங்களுக்கு வீடமைப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல், மலசலகூடங்கள் அமைத்துக் கொடுத்தல், சிறுதொழில் வாய்ப்புகளுக்கு உதவுதல், தொழில் பயிற்சி பெறுபவர்களுக்கு அதற்கான வழிகாட்டலையும் உதவிகளையும் செய்தல், ஹோட்டல் பணிகளில் பணியாற்ற ஹோட்டல் பயிற்சிகள் வழங்கி தற்போது இளம் வாலிபர்கள் ஹோட்டல்களில் பணிபுரிந்து வருகின்றார்கள்.

நாங்கள் பணத்தைக் கண்டதில்லை. பணத்தை தொட்டதும் இல்லை. நாங்கள் வெறுமனே கையொப்பமிடுவது மட்டும்தான். எல்லாம் வங்கி முறை ஊடாகத்தான் நடைபெறும். நாங்கள் ஒரு அறிவித்தல் விடுத்தால் அதற்கான நிதியுதவிகளை ஒதுக்கிவிடுவார்கள். வட்டியில்லாத கடன் சலுகைகள் வழங்கியுள்ளோம். அப்பணத்திற்கு அடமானமாக தங்கத்தை வைத்துவிட்டு கடனைப் பெற்றுச்செல்லலாம். மூன்று மாதம் அடமானமாக தங்கத்தை வைத்துவிட்டு அதற்குரித்தான பணத்தைப் பெற்றுச்செல்ல முடியும். பின்னர் மீளப் பெறும்போது அதற்கு எந்தவிதமான வட்டியும் இல்லை. இப்படியான உதவிகள் புரியும் அமைப்பின் தலைவராக இருந்து கணிசமானளவு பணிகள் புரிந்துள்ளேன்.

மனித உரிமைகள் அமைப்பு ஊடாகபோதை ஒழிப்பு விவகாரங்களில் ஈடுபாடு காட்டி வந்துள்ளேன். மாத்தளை பொலிஸ் பிரிவில் சிவில் சமூகப் பிரிவு ஒன்று இருக்கிறது. நாங்கள் போகும் இடங்களுக்கெல்லாம் அவர்களையும் அழைத்துச் செல்வோம். பொலிஸாருடன் சேர்ந்து செய்யும்போது பலம் அதிகம்.

**உங்கள் குடும்பம் பற்றி கூறுவீர்களா?**

வாழ்க்கைத்துணை நிர்ணயிக்கப்பட்டது ஒன்று. இது பிறக்க முன்னமே எழுதப்பட்டு விட்டது. அந்த வகையில் நான் 1979களில் கலேவெலயைச் சேர்ந்த சுலைஹாவை மனைவியாக அடைந்துகொண்டேன். நான்கு பிள்ளைகள். மூன்று பெண் பிள்ளைகளும் ஒரு ஆண் மகனும் ஆவர். மகன் முஹமட் கஸ்ஸாலி ரோயல் ஆங்கில பாடசாலையின் பணிப்பாளராக இருக்கிறார். மகள் ஜுஹான், மருமகன் ரிபாத் ஒரு வர்த்தகர். அடுத்த மகள் அஸ்ரின். மருமகன் நுஸ்ரத் அவரும் ஒரு வர்த்தகர். அடுத்த மகள் பாத்திமா. மருமகன் ரிபாய் அவுஸ்திரேலியாவில் வாழ்ந்து வருகின்றனர்.

**நீங்கள் இளம் தலைமுறையினர்களுக்கு என்ன சொல்ல விரும்புகின்றீர்கள்?**

இளம் சமூகத்தினர் மேலைத்தேய கலாசாரத்திற்கு ஈர்க்கப்பட்டுள்ளார்கள். தரம் குறைந்த சினிமா, நாடகங்கள் போதைவஸ்துப் பாவனை செய்பவனையும் பெரிய ஹீரோவாக காட்டுவதால் அதைப் பார்க்கின்ற இளம் வாலிபர்களுடைய மனதில் பெரும் தாக்கம் செலுத்துகிறது. தானும் அவனைபோல ஆகவேண்டும் என்ற தப்பான அபிப்பிராயத்தை உண்டுபண்ணி விடுகின்றன. அதுதான் காரணம். கணிசமானளவு இளம் வாலிபர்கள் பிழையான வழிகளுக்குச் செல்லுகின்றனர். அவர்களை வழிநடத்துவதற்கான சிறந்த மார்க்கமாக பாடசாலைதான் இருக்கிறது.

நான் பாடசாலையோடு சம்பந்தப்பட்டதன் காரணமாக ஒவ்வொரு பாடசாலைகளிலும் ஏற்படும் பிரச்சினைகளை செவிமடுத்து இருக்கின்றேன். ஒரு பிள்ளை 14 வயதைத் தாண்டும்போது அவர்கள் கதாநாயகனாக வரவேண்டும் என்ற ஆர்வம் மிகவும் வலுவானதாக இருக்கும். இப்படியான தாக்கத்தில் இருப்பவர்கள்தான் இதற்கு அடிமையாகின்றனர். பல செயலமர்வுகள் ஊடாக இதற்கான விழிப்புணர்வூட்டுதல்களைச் செய்யவேண்டும். கணிசமான பிள்ளைகள் விளையாடச் செல்வதில்லை. முழுக்க முழுக்க கைத்தொலைபேசியில் காலத்தை கழிக்கின்றனர். ஒரு மூலையில் குந்திக்கொண்டு செயற்படுகின்றனர். இது ஒரு பாரிய ஆபத்தான விசயம். இதிலிருந்து பிள்ளைகளைக் காக்க வேண்டும். இது எல்லா சமூகத்திலுள்ள பிரச்சினையாகும். பொதுவாக எல்லா மட்டத்திலும் இதற்கான விழிப்புணர்வு முன்னெடுக்கப்பட வேண்டும் என்பது என்னுடைய கருத்தாகும்.

**நேர்காணல் இக்பால் அலி**

# இலங்கையில் இன முரண்பாடு

இலங்கையின் இனப்பிரச்சினைக்கான காரணமென்ன என்று தமிழ்த் தேசியவாதிகளிடம் நாம் கேட்போமானால், பின்வருமாறு தான் கூறுவர். சிங்களவர்கள் பிறப்பிலேயே இனவெறியர்கள். சுதந்திரத்திற்கு பின்னரான தமிழ்விரோத கலவரங்களே அதற்கு சாட்சியம். மகாவம்சம், துட்டகைமுனு காலத்திலிருந்து தமிழர்கள் ஒடுக்குமுறைக்கு ஆளாகி வருகின்றனர். அதே விடயத்தை நாம் சிங்கள தேசியவாதிகளிடம் கேட்போமாயின், தமிழ்ப் பிரதேசங்களில் சிங்களவர்கள் எவரும் வாழமுடியாத அளவிற்கு தமிழர்கள் இனவெறியர்கள். இந்திய வல்லரசின் துணையோடு சிங்கள பௌத்த சிறுபான்மை இனத்தை அடக்க நினைக்கின்றனர் என்பர். எனவே இரண்டு மொழித்தேசியவாதிகளும் "ஏகாதிபத்தியம்" என்ற சொல்லை திரிவுபடுத்தி பாவித்து வந்துள்ளனர். தமிழர்களைப் பொறுத்த வரையில் "சிங்கள ஏகாதிபத்தியமே உலகில் மிகவும் கொடுமையானது" என்கின்றனர். சிங்களவர்களைப் பொறுத்த வரையில் இந்திய ஏகாதிபத்தியம் சிங்களவர்களை நசுக்கி வருகின்றது. இவ்வாறான உளவியல் காரணிகளும் இனப்பிரச்சினைக்கு காரணமாகின.

சிங்கள அரசில் ஆட்சியில் அமர்ந்த தலைவர்களின் செயற்பாடும் இனப்பிரச்சினைத் துளிர்விடக் காரணமாகியது. இலங்கை வரலாற்றில் "இந்திய ஏகாபத்தியம் என்ற கொள்கையினை முதன்முதலாக வகுத்தவர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கா ஆவார். அவர் ஒக்ஸ்போட் பல்கலைக்கழகத்தில் கற்ற மேட்டுக்குடியைச் சார்ந்தவர் அல்லவா? அவர் தமிழ் மக்களுக்கு எதிராக வெகுஜன அரசியலை அறிமுகம் செய்தார். இந்தியாவுடனான "தொப்புள்கொடி" உறவு சிங்கள பேரினவாதத்தின் இருப்பைக் கேள்விக்குள்ளாக்கியது. வேக்காட்டு அரசியல் பேசும் சிங்களப் பேர்வழிகள் இனக்குரோத நெருப்பிற்கு எண்ணெய் வார்த்தனர். ஏனெனில் இனப்பிரச்சினைக்கான கரு பரஸ்பர புரிந்துணர்வின்மையால் தான் ஏற்பட்டது. இனப்பிரச்சினையின் ஆரம்ப கர்த்தாவாக சிங்கள ஆட்சியாளர்கள் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கா மற்றும் ஜே.ஆர்.ஜெயவர்த்தன காணப்படுகின்றனர். இனப்பிரச்சினை சுடர்விட்டு கொழுந்து விட்டெரியக் காரணம் இவ் ஆட்சியாளருடைய பொறுப்பற்ற தன்மையுமேயாகும்.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கான மற்றொரு காரணியாக அமைவது தனிச்சிங்கள சட்டம் அறிமுகம் செய்யப்பட்டமையே ஆகும். தமிழ் மக்கள் சிங்களப் பாரம்பரிய மக்களின் பாரம்பரியப் பகைவர்கள் என சிங்கள பௌத்தர்களால் கருதப்படத் தொடங்கினர். 1950ஆம் ஆண்டுகளில் மொழியை அடிப்படையாகக் கொண்ட அரசியல் ஆரம்பமானது. 1944ஆம் ஆண்டு சிங்களம் அரச கரும மொழியாக்கப்படல் வேண்டும் என்ற திருத்தத்தோடு அப்பிரேரணை நிறைவேறியிருந்தது. 1951ஆம் ஆண்டு சிங்களத்தையும் தமிழையும் உடனடியாக அரசகரும மொழியாக்க வேண்டும்" என்று பண்டாரநாயக்கா வலியுறுத்தினார். 1953-1956 களில் மொழி பற்றிய சர்ச்சைகள் அரசியலில் முதன்மை பெற்றன. பிரதமராகியிருந்த கொத்தலாவல கொக்குவிலில் தமிழிற்கும் சமவுரிமை வழங்கப்படும் என்று தனது நிலைப்பாட்டை வெளியிட ஆட்சியைக் கைப்பற்றும் நோக்கத்திலிருந்த பண்டாரநாயக்கா தன்னுடைய கருத்தினை மாற்றி 24 மணி நேரத்திற்குள் சிங்களம் மட்டும் சட்டத்தை தான் நிறைவேற்றுவதாக அறிவித்தார். இதனால் தனது மொழிக்கொள்கையைச் சிங்களம் மட்டும் அரசகரும மொழி மசோதாவை பண்டாரநாயக்கா நாடாளுமன்றிற்கு கொண்டு வந்தார். அதற்கு ஆதரவாக 66 வாக்குகளையும் எதிராக 29 வாக்குகளையும் பெற்று நிறைவேறியது.

இதனால் சிங்களம் மட்டும் அரச கரும மொழிச்சட்டத்தினால் வடகிழக்கில் பெரும்பான்மையினராக வாழ்ந்த மக்கள் தங்களது தாய்மொழி தமிழ் புறக்கணிக்கப்படுவதாகவும் தமது சுயநிர்ணய உரிமை பாதிக்கப்படுவதாகவும் போராட்டங்களை மேற்கொண்டனர். இன்றும் இவ் தனிச்சிங்களச் சட்டத்தினுடைய பல தாக்கங்கள் காணப்படுகின்றன. அதன் பிரதிபலிப்பாக தமிழ்மொழி, சிங்கள மொழி அரச மொழிகள். ஆங்கிலம் இணைப்புமொழி (13th Amedment 14th November - 1987) ஆக்கப்பட்டது. நடைமுறையில் பல இடங்களில் தமிழர்கள் பொலிஸ், நீதித்துறைகளில் தமிழில் அரசகோவைகளைப் பெறுவது அரிதாகியது. கல்விப் புத்தகங்களில் தமிழ்மொழி சிதைப்பும் இடம்பெறுகின்றது. ஆகவே, அவ் தனிச்சிங்களச்சட்டத்திற்கு எதிராக சாத்வீகப் போராட்டம் செய்தவர்கள் சிங்கள காடையர்களால் தாக்கப்பட்டனர். எனவே, இனப்பிரச்சினைக்கு காரணமாக 1956ஆம் ஆண்டு தனிச்சிங்களச் சட்ட அமுலாக்கமும் ஒரு காரணமாகியது. அதன் தொடர்ந்தேர்ச்சியாகவே இனப்பிரச்சினை வளர்ச்சி கண்டது.

இனப்பிரச்சினைக்கான மற்றொரு காரணி தமிழ்ப் பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றங்கள் நிறுவப்பட்டமையாகும். அதாவது, குடியேற்றத் திட்டங்கள் வரவேற்கப்படல் வேண்டும். ஆனால், சிறுபான்மை மக்களாகிய தமிழ் மக்கள் எதிர்க்கின்ற வகையிலேயே குடியேற்றத் திட்டங்கள் நிறுவப்பட்டன. இவ் குடியேற்றத் திட்டத்தினால் தமிழ், முஸ்லிம் மக்களுடைய வளமான பகுதிகள் சிங்களவர் வசமாகியது. அத்துடன் தமிழரின் வடக்கு, கிழக்கு தாயகப்பகுதி துண்டாடப்பட்டது. அவர்களுக்கான பிரதிநிதித்துவ விகிதாசாரம் குறைந்தது. அத்துடன் வட, கிழக்குப் பகுதிகளில் இன விகிதாசாரத்தில் கூடத் தாக்கத்தை ஏற்படுத்தியது.

1940ஆம் ஆண்டுகளில் தமிழ்ப் பிரதேசங்களில் அரசானது குடியேற்றங்களை உருவாக்கி சிங்கள மக்களை குடியேற்றும் திட்டத்தை ஆரம்பித்து முக்கியமாக, மட்டக்களப்புக்கு தெற்கே கல்லோயா குடியேற்றத் திட்டம், அம்பாந்தோட்டைப் பகுதியிலிருந்த சிங்கள மக்கள் குடியமர்த்தப்பட்டனர். அதன் கீழ் உருவாக்கப்பட்ட 44 குடியேற்றக் கிராமங்களில் 36 கிராமங்கள் சிங்கள மக்களிற்கு ஒதுக்கப்பட்டன. மட்டக்களப்பு மாவட்டம் 7004 சதுரகிலோமீற்றர் பரப்பினைக் கொண்டதாக 1954இல் அம்பாறை மாவட்டம் உருவாக்கப்பட்டது. அம்பாறை மாவட்டத்தில் தொடர்ந்து உருவாக்கப்பட்ட சங்கமம், நாவல் ஆறு, அம்பலன் ஓயாத் திட்டங்கள் மூலம் அம்பாறை மாவட்டத்தில் இன்று 37.8வீததினர் சிங்கள மக்களாவர். அதே போல் மாதுறு ஓயாத் திட்டம் மட்டக்களப்பில் 10வீத நிலப்பரப்பினைத் துண்டித்தது. அவ் 10 வீதமும் மாத்தளை மாவட்டத்துடன் இணைக்கப்பட்டது.

சிங்களக் குடியேற்றங்களில் பெரிதும் பாதிக்கப்பட்ட மாவட்டம் திருகோணமலையாகும். கந்தளாய், மொறவெவ, பதவியா, வாகல்கடவெலத்திட்டம் என ஏராளமான கிராம விஸ்தரிப்புத் திட்டம் மூலம் திருகோணமலை மாவட்டத்தில் சிங்களக் குடியேற்றம் அதிகரித்தது. அம் மாவட்டத்தில் 1921ஆம் ஆண்டு 4.4வீதமாக காணப்பட்ட சிங்கள மக்களது தொகை 1981இல் 33.6வீதமாக அதிகரித்தது. மாறாக, தமிழ் மக்கள் தொகை 1921இல் 54.5 வீதமாக இருந்து 36.4வீதமாகவும், முஸ்லிம் மக்கள் தொகை 37.7இல் இருந்து 29வீதமாகவும் குறைவடைந்தது. 1955இல் கந்தளாய் தமிழ்ப் பேசும் மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட பிரதேசமாகக் காணப்பட்டது. அக் குடியேற்ற திட்டத்தின் பின்னர் அது சிங்கள மக்களைப் பெரும்பான்மையினராகக் கொண்ட பகுதியாக மாற்றமடைந்தது. அக் குடியேற்றத் திட்டங்கள் வடக்கு, கிழக்கு தமிழருடைய வாழ்வில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. இதனால் குடியேற்றத் திட்டங்கள் கடுமையாக அவர்களால் எதிர்பார்க்கப்பட்டது. இக் குடியேற்றத் திட்டங்கள் தமிழ்ப் பேசும் மக்களைக் கொண்ட பிரதேசங்களில் இன விகிதாசார முறைமையை மாற்றியமைக்கும் செயற்பாடாக விளங்கியது. தமிழர்களின் தொடர்ச்சியான நிலப்பரப்பை கூறுபோடுவதாக காணப்பட்டது. வவுனியா மாவட்டத்தில் பாவற்குளம், உலுக்குளம், மாமடுவ, மடுகந்த இவ்வாறான குடியேற்றங்களாகும். முல்லைத்தீவு மாவட்டத்தில் மணலாறு குடியேற்றத் திட்டத்தினால் வட, கிழக்கு பிணைப்பு பிரிக்கப்படுவதாக அது காணப்பட்டது.

இவ்வாறான குடியேற்றத் திட்டங்களால் தமிழ் மக்கள் கிளர்த்தெழ நேரிட்டது. இதனால் மக்கள் அரசின் இவ் குடியேற்றத் திட்டத்துக்கு எதிராக போராட வேண்டிய நிலையும் ஏற்பட்டது. இதனால் தமிழ் மக்கள் அஹிம்சை வழிப் போராட்டத்தில் வெற்றி கிட்டாதபோது ஆயுத வழியில் போராட்டத்தை மேற்கொண்டனர். எனவே, அரசினுடைய குடியேற்றத் திட்டங்களும் இனப்பிரச்சினை வலுவடைய காரணமாகியது.

இனப்பிரச்சினைக்கான மற்றொரு முக்கியமான காரணி உயர்கல்வியில் விகிதாசார முறைமை அறிமுகம் செய்யப்பட்டமை ஆகும். அதற்கு முன்னர் பல்கலைக்கழகத்திற்கு தேசிய ரீதியாக நடத்தப்பட்ட திறமைகாண் பரீட்சை மூலம் அனுமதிக்கப்பட்டனர். கூடிய புள்ளிகள் பெற்றவர்கள் சாதி, சமய, இன வேறுபாடின்றி தெரிவாகினர். இதில் பாகுபாடு இல்லாதிருந்தமையால் யாழ்ப்பாண கொழும்பு தமிழர்கள் நல்ல புள்ளிகளைப் பெற்றனர். 1966 – 1970ஆம் ஆண்டுகளில் விஞ்ஞான பௌதீகப் பிரிவுகளுக்கு 35வீத தமிழரும் வைத்தியத்துறைக்கு 45வீத தமிழரும் தெரிவாகினர். நாட்டிலுள்ள வேறு இனங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது, தமிழ் மக்கள் கல்வியை மதிக்கும் கலாசாரம் பிரபலமாகியிருந்தது. இதனால் கல்வியல் தரப்படுத்தல் அவசியம் என இனவாதிகள் கருதலாயினர்.

1971 முதல் பல்கலைக்கழக அனுமதியில் ஒரு புது தரப்படுத்தல் கொள்கையானது அறிமுகப்படுத்தப்பட்டது. இன அடிப்படையிலான இவ் முறைமையைக் கையாள்வதன் மூலம் முதன் முதலாக பல்கலைக்கழக அனுமதிக்கொள்கை பாழ்பட்டது. 1970ஆம் ஆண்டு 35வீதத்திலிருந்து 1975ஆம் ஆண்டு வரையில் 19வீதமாகக் குறைத்ததுடன் சிங்கள மாணவர்களின் தொகை அதிகரித்துள்ளது. சிங்கள இனவாதிகளால் கல்வி, தொழில் சம்பந்தமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தமிழ் மக்களிடையே தாம் ஓரம்கட்டப்படுவதாக உணர்த்தியது. விரக்தியடைந்த தமிழ் இளைஞர்கள் ஆயுதப் போராட்டத்தில் நம்பிக்கை வைக்க காரணமாகியது.

1972 மே மாதம் 14 தமிழர் கூட்டணி என்ற அமைப்பு உருவாக்கப்பட்டு தமிழர்களின் பிரச்சினைக்கு தீர்வாக அரசுக்கு தீர்மானங்கள் முன்வைக்கப்பட்டன. அவற்றில் ஒன்றாக "இலங்கை மதச்சார்பற்ற அரசாக பிரதிபலிக்கப்பட்டு எல்லா மதங்களையும் சமமாக பேணி வளர்த்தல் வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டது. இவ்வாறு முன்வைக்கப்பட்ட போதும் 1972ஆம் ஆண்டு முதலாம் குடியரசு அரசியல் யாப்பு இதற்கு எதிராக, பௌத்த மதத்திற்கு முன்னுரிமை அளித்து அரச மதமாக பௌத்த மதம் பிரகடனம் செய்யப்பட்டதுடன் பௌத்த மதத்தை பாதுகாப்பது அரசின் கடமை என்ற சட்டம் உருவாக்கப்பட்டது. இவ்வாறு இந்து, இஸ்லாம், பௌத்தம் போன்ற சமயங்களைப் பின்பற்றுகின்ற மக்கள் வாழ்கின்ற நாட்டில் பௌத்த மதத்திற்கு முன்னுரிமை வழங்கப்பட்டமையால் மற்றைய இனங்கள் வெகுவாகப் பாதிப்படைந்தன. இதனால் இனப்பிரச்சினைக்கான காரணிகளில் மொழி மற்றும் மதம் காரணியாக இருந்தது.

வேலைவாய்ப்பிலும் தமிழர்கள் பாரபட்சப்படுத்தப்பட்டனர். அதாவது பெரும்பான்மை இனமக்கள் மத்தியில் வாழ்கின்ற சிறுபான்மை இன விடயத்தில் பெரும்பான்மை இனத்தினரால் பாரபட்சப்படுத்தப்பட்டனர். 1921ஆம் ஆண்டு அரசசேவையில் 4.9வீதமான தமிழர்களே காணப்பட்டனர். வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொள்வதற்காக சிறுபான்மை இனங்கள் புறக்கணிக்கப்பட்டன. உதாரணமாக, கந்தளாய் தமிழரின் பூர்வீக நிலமாக காணப்பட்டபோதும் கரும்பு உற்பத்திக்கென கந்தளாய் சீனத்தொழிற்சாலைக்கு சிங்கள மக்கள் கொண்டுவரப்பட்டதுடன் அவர்கள் அங்கே குடியமர்த்தப்பட்டனர். ஆகவே, இனப்பிரச்சினை ஆரம்பமாவதற்கு இவ் வேலைவாய்ப்பில் பாரபட்சம் காட்டப்பட்டமையே காரணமாகும்.

இனப்பிரச்சினைக்கான மற்றொரு காரணியாக அமைவது 1918இல் யாழ். நூலக எரிப்பின் மூலமாக கலாசார முக்கியத்துவம் வாய்ந்ததும் தேடிபெற்றுக்கொள்ள அல்லது திரும்பி பெற்றுக் கொள்ள முடியாததுமான 97,000 நூல்களை எரித்தும் அழித்தும் சிங்கள இனத்துவேச ஆட்சியாளர்கள் நாடகமாடினார்கள். இதுவும் இனப்பிரச்சினைக்குரிய காரணமாகவும் இனப்பிரச்சினையை தூண்டுவதற்கான காரணமாகவும் அமைந்தது.

மேலும், இனப்பிரச்சினைக்கான காரணங்களில் மிகவும் முக்கியமானது, கடந்த காலங்களில் தமிழர்களின் வரலாற்றுப் பிரதேசமான திருகோணமலையின் மத்தியில் புத்தர் சிலைகளை நிறுவியும் இந்து மற்றும் கிறிஸ்தவ தமிழர்களின் வணக்கஸ்தலங்கள், வரலாற்று பெறுமதியான இடங்கள் என்பவற்றை குண்டு வீசி அழித்தும் திருகோணமலை மாவட்டத்தில் கன்னியா வெந்நீர் ஊற்று மற்றும் அகதீஸ்வர் ஆலயம் போன்ற தமிழ் இந்துக்களின் இடங்களை பௌத்த தலங்களாக மாற்றியமைத்தும் கலாசார ரீதியிலான இனப்படுகொலையை நிகழ்த்தின. இதுவும் இனப்பிரச்சினைக்கான காரணமாக அமைந்தது. 30 ஆண்டு கால உள்நாட்டு யுத்தம் ஏற்பட்டு உள்நாட்டு யுத்தம் முடிவுற்ற பின்னரும் கூட பௌத்த மத சிலைகள் நிறுவும் செயற்பாடுகள் வடகிழக்கில் நிகழ்கின்றன. அண்மையில் அமைச்சர் ஹக்கீம் குறிப்பிடும் போது, சிங்கள பேரினவாத அரசானது பௌத்த சிலைகளை எல்லைக்கற்களாக அமைத்து வருகின்றனர் என்று குறிப்பிட்டார். ஆகவே, பௌத்த மத விஸ்தரிப்பும், பௌத்தமத சிலைகள் தமிழருடைய தாயகப் பகுதிகளில் நிறுவப்பட்டமையால் அதனைத் தடுக்க தமிழ் இளைஞர்கள் முற்பட்டனர். இதனால் இன முரண்பாடு ஏற்பட்டதுடன் இலங்கையில் ஆயுதமோதலும் ஏற்பட்டது.

இலங்கை அரசாங்கத்தின் தமிழ் மக்களுக்கெதிராக பல்வேறு இனத்துவேச செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டாலும் பல சந்தர்ப்பங்களில் இப்பிரச்சினைக்குரிய தீர்வினைப் பெற்றுக் கொடுக்க சிங்கள அரசு முன்வந்தபோதும் தமிழ்த் தலைமைகள் அதனை கைநழுவ விட்டுள்ளனர். 1925ஆம் ஆண்டு சமஷ்டி கோரிக்கையானது, கண்டியச் சிங்களவரால் முன்வைக்கப்பட்டபோதும் அதனை வழங்க பண்டாரநாயக்க முன்வந்த போதும் தமிழ்த் தலைமைகள் அதனை ஏற்றுக்கொள்ள முன்வரவில்லை. இதனால் ஆரம்பத்தில் இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகள் ஏற்படுத்தப்படாமையே இனப்பிரச்சினை சுடர்விடக் காரணமாகியது.

சமஸ்டி கோரிக்கை ஆரம்பத்தில் தமிழர்களால் முன்வைக்கப்பட்டபோதும் அது பின்னர், தனிநாட்டுக் கோரிக்கையாக மாற்றமடைந்தது. தமிழீழ விடுதலைப் புலிகளால் கோரப்பட்ட தனிநாட்டுக் கோரிக்கையானது, அரசால் நிராகரிக்கப்பட்டது. இவ் தனிநாட்டுக் கோரிக்கையும் இனப்பிரச்சினைக்கான காரணமாக மாறி அது ஆயுதமோதலாக மாறியது. தனிநாட்டுக் கோரிக்கையின் விளைவாக, இனப்பிரச்சினை உக்கிரமடைந்து ஆயுதமோதல் வெடித்தது. இனப்பிரச்சினைக்கான தீர்வாக தனிநாட்டுக் கோரிக்கையானது முன்வைக்கப்பட்டது. ஆனால், இனப்பிரச்சினையானது தனிநாட்டுக் கோரிக்கையினை அடிப்படையாகக் கொண்டே உருவாக்கம் பெற்றது. ஆகவே இனப்பிரச்சினை உக்கிரத்தன்மை அடைவதற்கு தமிழர் விடுதலைப் புலிகளுடைய தனிநாட்டு கோரிக்கையும் காரணமாகியது.

இனப்பிரச்சினைக்கான மற்றொரு காரணமாக அமைவது தமிழர்களுக்கு எதிரான வன்முறைப் பிரயோகம் மற்றும் கலவரங்கள் ஏற்படுத்தப்பட்டமையாகும். 1956இல் அம்பாறையிலும் கொழும்பிலும் 1958இல் நாடு முழுவதிலும் அரச இணைப்படைகளின் துணையோடு தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட அரச அனுசரணையுடனான கொலைகள், பலவந்தமாக காணாமல்போதல், பாலியல் வன்முறை என்பவற்றை அனுமதித்தும், கட்டவிழ்த்து விடப்பட்டமை. 1961ஆம் ஆண்டில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இராணுவ ஆட்சியின் பயங்கரம் 1974இல் நடைபெற்ற உலக தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் பொலிஸாரின் வன்முறையில் அனுபவித்த தமிழர்கள் 9பேர் பலியானமை, 1983இல் இடம்பெற்ற இனக்கலவரத்தால் 3,000 தமிழர்கள் கொல்லப்படவும், 500 பெண்கள் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டும் 8,000 வீடுகள் மற்றும் 5,000 வியாபார ஸ்தாபகங்கள் இழக்கப்பட்டும் தமிழர்கள் நாட்டை விட்டு வெளியேறிச் செல்லவும் காரணமாக இருந்தமை. ஆகவே, இவ்வாறான தமிழர்களுக்கு எதிரான வன்முறைகள், கலவரங்கள் இனப்படுகொலைக்கு காரணமாக அமைந்துள்ளன. ஆகவே, ஆரம்ப கால வன்முறைகள் தமிழர்களுக்கு எதிராக அமைந்தன.

இலங்கையானது மூன்று பிரதான இனங்களைக் கொண்ட மக்கள் வாழ்கின்ற நாட்டினில் ஒற்றையாட்சிக் கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டமையும் இனப்பிரச்சினைக்கான காரணமாகியது. அதிகாரப் பன்முகப்படுத்தல் என்பது இல்லாமல் அதிகாரங்கள் குவிக்கப்பட்டமையால் ஆட்சியிலிருந்த பெரும்பான்மை இனங்களால் சிறுபான்மை இனமக்கள் ஒதுக்கப்பட்டார்கள். ஆகவே, இதனால் இனப்பிரச்சினை துளிர்விட ஆரம்பமாகியது. ஒற்றையாட்சி கட்டமைப்பானது இனப்பிரச்சினைக்கான காரணமாக அமைந்தது.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கான காரணங்களுள் ஒன்றாக அமைவது சிங்கள மக்களுடைய எழுச்சியும் காரணமாக அமைந்தது. அதாவது 1956ஆம் ஆண்டு காலத்தின்போதும் 1980ஆம் ஆண்டு காலப்பகுதியின் போதும் ஏற்பட்ட சிங்கள மக்களுடைய எழுச்சி அதாவது, தனிச்சிங்கள சட்டம் உருவாக்கத்திலும் சிங்கள மக்களுடைய எழுச்சி காணப்பட்டது. சிங்கள மக்களுடைய இவ் எழுச்சிக்கு காரணம் சிங்கள அரசியல் தலைவர்களுடைய உணர்ச்சி மிகு எழுச்சியும் காரணமாக அமைந்தது.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு காரணமாக மற்றொரு காரணியாக அமைந்து காணப்படுவது காலத்திற்கு காலம் ஏற்படுத்தப்பட்ட சட்டசீர்திருத்தங்கள் ஆகும். உதாரணமாக 1948ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட பிரஜாவுரிமைச்சட்டம், 1956 தனிச்சிங்களச்சட்டம், 1981ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட பயங்கரவாத தடைச்சட்டம், அவசரகாலச்சட்டம் என்பன தமிழருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட சட்டதிருத்தங்களால் வெகுவாகப் பாதிப்படைந்தனர். ஆகவே இனப்பிரச்சினைக்கான காரணங்களாக இவ் காரணங்களும் அமைந்துள்ளன.

பிரித்தானியருடைய பிரித்தாளும் தந்திரமும் இனப்பிரச்சினைக்கு காரணமாகியது. அதாவது இலங்கையானது 4 நூற்றாண்டுகளாக பிரித்தானியர், ஒல்லாந்தர், போத்துக்கேயரின் காலனித்துவத்தின் கீழ் காணப்பட்டது. 1948ஆம் ஆண்டு பிரித்தானியரிடமிருந்தே இலங்கையானது சுதந்திரம் பெற்றது. சுதந்திரம் வழங்கிய போது பிரித்தானியர் சுயமாக அரசியல் ரீதியான கொள்கைகளை கையாண்டு இனப்பிரச்சினைகளைத் தீர்த்திருக்கலாம். எனவே பிரித்தானியர் ஆரம்பகாலத்தில் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களுக்கான ஓர் தீர்வினை தாம் சுதந்திரம் வழங்கிய போது பெற்றுக் கொடுத்திருந்தால் இனப்பிரச்சினையானது இவ்வாறு விஸ்வரூபமாக மாறியிருக்காது.

இலங்கையினுடைய இனப்பிரச்சினைக்குக் காரணமாக அரசியல் யாப்புகளும் காரணமாக அமைந்தன. தமிழ் – சிங்கள மக்களிடையே இனரீதியான முரண்பாடுகள் தோன்றுவதற்கு காரணமாக அமைந்தன. ஆரம்பத்தில் 1833ஆம் ஆண்டு தமிழ் – சிங்களவரிடையே சம பிரதிநிதித்துவத்தை வழங்காமையே பிற்கால பிரதிநிதித்துவ முரண்பாடுகள் தோற்றம் பெறக் காரணமாகின. 1921ஆம் ஆண்டு தற்காலிக மனிங் அரசியல் சீர்திருத்தத்தின் மூலம் மேல்மாகாண தமிழருக்கு பிரதிநிதித்துவம் வழங்கப்படவில்லை. இதன் காரணமாக தமிழ்த் தலைமைகள் தேசிய காங்கிரஸில் இருந்து வெளியேறினர். இவ் தமிழ் – சிங்கள பிரதிநிதித்துவ முரண்பாடுகளுடன் இன முரண்பாடும் தோற்றம் பெற்றது. இவ்வாறாக சோல்பரி அரசியல் யாப்பினிலும் சிறுபான்மையோர் காப்பீடு என்று காப்பீட்டு விடயங்கள் பல அறிமுகப்படுத்தப்பட்டாலும் அது சிறுபான்மையோருக்கு காப்பீடாக அமையவில்லை. இவ்வாறு காணப்பட்ட காப்பீட்டு அம்சங்கள் கூட ஆரம்பத்தில் காணப்பட்டாலும் பின்னர் அவை இல்லாது ஒழிக்கப்பட்டன. அதேபோன்று 1972ஆம் ஆண்டு அரசியல் யாப்பானது சிறுபான்மை இனங்களை வெகுவாகப் பாதிப்படைய வைத்தது. 1972ஆம் ஆண்டு 1ஆம் குடியரசு யாப்பில் பௌத்தமதம் அரசகரும மதமாக பிரகடனம் செய்யப்பட்டமை மற்றும் இனப்பிரச்சினைக்கான அதிகாரப் பகிர்வு இன்மை போன்றனவும் இனப்பிரச்சினைக்கான காரணமாக அமைந்தன. அத்துடன் 1978ஆம் ஆண்டு அரசியல் யாப்பில் கொண்டுவரப்பட்ட தமிழருக்கு எதிரான நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமையும் இனப்பிரச்சினைக்கான காரணமாக அமைந்தது. இலங்கையின் இனப்பிரச்சினையானது, தலைதூக்குவதற்கு அரசின் சிறப்பான உள்நாட்டு கொள்கை வகுப்பின்மையும் அரசியல் பிரச்சினை அரசியல் ரீதியான பாகுபாடுகள் தான் இனப்பிரச்சினைக்கு பிரதானமான காரணமாக அமைந்து காணப்பட்டது. அதனை அரசானது, மிகவும் கவனமாக கையாண்டிருந்தால் இனப்பிரச்சினை ஏற்பட்டிருக்காது. நாடு பொருளாதாரத்தில் முன்னேற்றமடைந்திருக்கும்.

ஆகவே, இலங்கையின் இனப்பிரச்சினைக்கு இலங்கையின் அரச பயங்கரவாதம், இனத்துவேசம் போன்ற செயற்பாடுகள் பல காரணமாக அமைந்துள்ளன. இலங்கையில் இனப்பிரச்சினை 1921ஆம் ஆண்டு ஆரம்பமாகி இருந்தாலும் ஆயுதமோதலானது, இனப்பிரச்சினையின் ஒரு வடிவமாக மாறியது. இலங்கையில் இதுவரைக்கும் தமிழருக்கும் சிங்களவருக்கும் இடையிலான இனப்பிரச்சினையின் வெளிப்பாடாக நான்கு ஈழகட்டபோர்கள் நடைபெற்று முடிந்துள்ளன. இனப்பிரச்சினை என்பது ஆயுதமோதல் மௌனிப்புடன் முடிவுற்றது என சிலர் கருதுவதுண்டு. ஆயுதமோதல் முடிவடைந்துவிட்டது. ஆனால், இனப்பிரச்சினை முடிவடையவில்லை. இலங்கையில் 3 இனங்கள் இருந்தும் கூட ஒற்றுமையாக வாழ முடியவில்லை. ஆனால், இந்தியாவில் பல இனங்கள் ஒற்றுமையாக வாழ்கின்றார்கள். காரணம், அதிகாரப் பங்கீடே ஆகும். இலங்கையிலும் இனப்பிரச்சினைக்கு ஓரளவேனும் தீர்வினைப் பெற்றுக்கொள்ளாத விடத்து நாட்டில் மீண்டுமொரு ஆயுதமோதல் ஏற்படலாம்.

**சி.குகதாசன் – அரசறிவியல்துறை**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

LK Newspapers Viber Community

1 10

# ICC இன் மாதத்தின் சிறந்த வீரர்களாக தெரிவுசெய்யப்பட்டவர்களின் பட்டியல்

ஏ.அகீல் சிஹாப்

கிரிக்கெட் உலகை நிர்வகிக்கின்ற சர்வதேச கிரிக்கெட் பேரவையானது ஒவ்வொரு வருடமும் சர்வதேச கிரிக்கெட்டில் ஒவ்வொரு துறைகளில் (டெஸ்ட், ஒருநாள், இருபதுக்கு 20) சிறந்து விளங்கிய வீரர்களுக்கு விருது வழங்கி கௌரவித்து வருகிறது. இவ்வாறான நிலையில் கடந்த ஆண்டு ஜனவரி மாதத்திலிருந்து சர்வதேச கிரிக்கெட் பேரவையானது புதிதாக விருது ஒன்றை அறிமுகப்படுத்தியது.

அதாவது, மாதத்தின் சிறந்த வீரர் (ICC Player of the Month) என்ற பெயரில் இந்த விருதை அறிமுகப்படுத்தியது. குறித்த விருதானது ஒரு குறிப்பிட்ட மாதத்தில் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் சிறந்து விளங்கிய வீர, வீராங்கனைகளுக்கு ஆடவர் மற்றும் மகளிர் என இரு பிரிவுகளில் வழங்கப்படுகிறது.

ஒரு மாதத்தில் சர்வதேச கிரிக்கெட்டில் சிறந்து விளங்கிய தலா மூன்று வீர, வீராங்கனைகள் இந்த விருதுக்காக பரிந்துரை செய்யப்படுவார்கள். இந்த வீரர்களுக்கான தெரிவு முறையானது, கிரிக்கெட் உலகின் முன்னாள் வீரர்கள், ஒளிபரப்பாளர்கள், ஊடகவியலாளர்களை உள்ளடக்கிய ஒரு சுயாதீனமான வாக்கெடுப்பு குழு மூலமும், ரசிகர்களின் வாக்கெடுப்பு மூலமாகவும் தெரிவுசெய்யப்படுகிறது.

ஒரு மாதத்திற்கான விருதுக்கு பரிந்துரைக்கப்படுகின்ற போது மாதத்தின் முதலாம் திகதியிலிருந்து 30ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் சர்வதேச கிரிக்கெட்டில் சிறந்து விளங்கிய வீர, வீராங்கனைகள் பரிந்துரை செய்யப்படுகிறார்கள். இதில் ஜனவரி 29ஆம் திகதி ஆரம்பமான டெஸ்ட் போட்டி ஒன்று பெப்ரவரி முதலாம் திகதிக்குப் பின்னர் நிறைவுக்குவருமாக இருந்தால், அந்தப் போட்டியில் ஜொலித்த வீரர் பெப்ரவரி மாதத்திற்கான பரிந்துரை பட்டியலிலேயே இடம்பிடிப்பார்.

அந்தவகையில் கடந்த 2021ஆம் ஆண்டில் ஒவ்வொரு மாதமும் சிறந்த ஆடவர் விருதுக்காக பரிந்துரை செய்யப்பட்ட, தெரிவான வீரர்கள் தொடர்பிலான விவரத்தை நாம் தற்போது பார்க்கலாம்.


### ஜனவரி

முதல் முதலாக கடந்த 2021ஆம் ஆண்டு ஜனவரி மாதம்தான் இந்த விருது முதன்முதலில் வழங்கப்பட்டது. ஜனவரி மாதத்தின் சிறந்த வீரருக்கான பரிந்துரையில் இந்திய அணியின் இளம் விக்கெட் காப்பு துடுப்பாட்ட வீரர் ரிஷப் பண்ட், இங்கிலாந்து டெஸ்ட் அணியின் தலைவர் ஜோ ரூட் மற்றும் அயர்லாந்து அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரரான போல் ஸ்ரேட்லிங் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர். இதில் இந்திய அணியின் விக்கெட் காப்பாளர் ரிஷப் பண்ட் ஜனவரி மாதத்தின் சிறந்த வீரராக தெரிவு செய்யப்பட்டார்.



### பெப்ரவரி

பெப்ரவரி மாதத்தின் சிறந்த விருதுக்காக பரிந்துரை செய்யப்பட்ட பட்டியலில் இந்திய அணியின் சுழற்பந்துவீச்சு சகலதுறை வீரர் ரவிச்சந்திரன் அஸ்வின், மேற்கிந்திய தீவுகள் அணியின் துடுப்பாட்ட வீரர் கைல் மெயர்ஸ் மற்றும் இங்கிலாந்து டெஸ்ட் அணியின் தலைவர் ஜோ ரூட் ஆகியோர் இடம்பெற்றனர். இதில் இந்திய அணியின் சுழற்பந்துவீச்சு சகலதுறை வீரர் ரவிச்சந்திரன் அஸ்வின் பெப்ரவரி மாதத்தின் சிறந்த வீரராக தெரிவுசெய்யப்பட்டார்.



### மார்ச்

மார்ச் மாதத்திற்காக ஆப்கானிஸ்தான் அணியின் சகலதுறை வீரரான ரஷீட் கான், இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளர் புவனேஷ்வர் குமார் மற்றும் சிம்பாப்வே அணியின் சகலதுறை வீரர் ஷேன் வில்லியம்ஸ் ஆகியோர் பரிந்துரை பட்டியலில் இடம்பெற்றிருந்தனர். இதில் இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளர் புவனேஷ்வர் குமார் மார்ச் மாதத்தின் சிறந்த வீரராக தெரிவு செய்யப்பட்டார்.



### ஏப்ரல்

ஏப்ரல் மாதத்தின் சிறந்த வீரருக்கான பரிந்துரை பட்டியலில் பாகிஸ்தான் அணியின் தலைவர் பாபர் அஸாம், பாகிஸ்தான் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் பக்ஹர் ஷமான், நேபாள அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் குசால் புர்டெல் ஆகியோர் இடம்பெற்றனர். இதில் பாகிஸ்தான் அணியின் தலைவர் பாபர் அஸாம் ஏப்ரல் மாதத்தின் சிறந்த வீரராக தெரிவுசெய்யப்பட்டார். இதன் மூலம் தொடர்ச்சியாக முதல் மூன்று மாதங்களுக்கான இந்திய வீரர்களின் ஆதிக்கம் முடிவுக்கு வந்தது.



### மே

மே மாதத்தின் சிறந்த வீரருக்கான பரிந்துரையில் பாகிஸ்தான் அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஹசன் அலி, இலங்கை டெஸ்ட் அணியின் சுழற்பந்து வீச்சாளர் பிரவீன் ஜயவிக்ரம மற்றும் பங்களாதேஷ் அணியின் அனுபவ துடுப்பாட்ட வீரர் முஷ்பிகுர் ரஹீம் இடம்பெற்றனர். இதில் பங்களாதேஷின் முஷ்பிகுர் ரஹீம் சிறந்த வீரராக தெரிவு செய் யப்பட் டார்.



### ஜூன்

ஜூன் மாதத்தின் சிறந்த வீரருக்கான பரிந்துரையில் நியூசிலாந்து அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் டிவோன் கோன்வே, தென்னாபிரிக்க அணியின் விக்கெட் காப்பாளர் குயின்டன் டி கொக், நியூசிலாந்து அணியின் இளம் வேகப்பந்துவீச்சாளர் கைல் ஜெமிசன் ஆகியோர் இடம்பெற்றனர். இதில் நியூசிலாந்து அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் டிவோன் கோன்வே ஜூன் மாதத்தின் சிறந்த வீரராக தெரிவுசெய்யப்பட்டார்.



### ஜூலை

ஜூலை மாதத்தின் சிறந்த வீரருக்கான பரிந்துரையில் அவுஸ்திரேலிய அணியின் சகலதுறை வீரர் மிட்செல் மார்ஷ், பங்களாதேஷ் அணியின் சகலதுறை வீரர் ஷகீப் அல் ஹசன், மேற்கிந்திய தீவுகள் அணியின் சகலதுறை வீரர் ஹெய்டன் வோல்ஸ் ஜூனியர் ஆகியோர் பரிந்துரை செய்யப்பட்டனர். இதில் பங்களாதேஷ் அணியின் சகலதுறை வீரர் ஷகீப் அல் ஹசன் ஜூலை மாதத்தின் சிறந்த வீரராக தெரிவு செய்யப்பட்டார்.



### ஓகஸ்ட்



ஓகஸ்ட் மாதத்தின் சிறந்த வீரருக்கான பரிந்துரையில் இங்கிலாந்து டெஸ்ட் அணியின் தலைவர் ஜோ ரூட், பாகிஸ்தான் அணியின் இளம் வேகப்பந்துவீச்சாளர் ஷஹீன் ஷா அப்ரிடி, இந்திய அணியின் வேகப்பந்துவீச்சாளர் ஜஸ்பிரிட் பும்ரா ஆகியோர் இடம் பெற்றிருந்தனர். இதில் இங்கிலாந்து டெஸ்ட் அணியின் தலைவர் ஜோ ரூட் ஓகஸ்ட் மாதத்தின் சிறந்த வீரராக தெரிவு செய்யப்பட்டார்.

### செப்டெம்பர்



செப்டெம்பர் மாதத்தின் சிறந்த வீரருக்கான பரிந்துரையில் பங்களாதேஷ் அணி வீரர் நாஸூம் அஹமட், அமெரிக்க வீரர் ஜஸ்கரன் மல்ஹோட்ரா மற்றும் நேபாள அணியின் சுழற்பந்து வீச்சாளர் சந்தீப் லமிச்சேன் ஆகியோர் இடம்பிடித்திருந்தனர். இதில் நேபாள அணியின் சுழற்பந்துவீச்சாளர் சந்தீப் லமிச்சேன் செப்டெம்பர் மாதத்தின் சிறந்த வீரராக தெரிவு செய்யப்பட்டார்.



### ஒக்டோபர்

ஒக்டோபர் மாதத்திற்கான பரிந்துரையில் பாகிஸ்தான் அணியின் துடுப்பாட்ட வீரர் ஆஸிப் அலி, பங்களாதேஷ் அணியின் சகலதுறை வீரர் ஷகீப் அல் ஹசன், நமீபியா அணியின் சகலதுறை வீரர் டேவிட் வைஸி ஆகியோர் இடம்பெற்றிருந்தனர். இதில் பாகிஸ்தான் அணியின் துடுப்பாட்ட வீரர் ஆசிப் அலி ஒக்டோபர் மாதத்தின் சிறந்த வீரராக தெரிவுசெய்யப்பட்டார்.



### நவம்பர்

நவம்பர் மாதத்தின் சிறந்த வீரருக்கான பரிந்துரை பட்டியலில் பாகிஸ்தான் அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரரான ஆபித் அலி, நியூசிலாந்து அணியின் வேகப்பந்துவீச்சாளர் டிம் சவுத்தி மற்றும் அவுஸ்திரேலிய அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் டேவிட் வோர்னர் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர். இதில் அவுஸ்திரேலிய அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் டேவிட் வோர்னர் நவம்பர் மாதத்தின் சிறந்த வீரராக தெரிவு செய்யப்பட்டார்.

### டிசம்பர்

டிசம்பர் மாதத்தின் சிறந்த வீரருக்கான பரிந்துரையில் இந்திய அணியின் இளம் துடுப்பாட்ட வீரர் மயங்க் அகர்வால், அவுஸ்திரேலிய அணியின் வேகப்பந்து வீச்சாளர் மிட்செல் ஸ்டார்க் மற்றும் நியூசிலாந்து அணியின் சுழற்பந்து வீச்சாளர் அஜாஸ் பட்டேல் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர். இதில் நியூயுசிலாந்து அணியின் சுழற்பந்து வீச்சாளர் அஜாஸ் பட்டேல் டிசம்பர் மாதத்தின் சிறந்த வீரராக தெரிவுசெய்யப்பட்டார்.



# சவாட் கிக் குத்துச்சண்டை சம்பியன்ஷிப்பில் 12 பதக்கங்களுடன் இலங்கை சம்பியன்

(இக்பால் அலி)

சவாட் கிக் குத்துச்சண்டை சம்பியன்ஷிப் போட்டியில் இலங்கை 7 தங்கப் பதக்கங்களும், 5 வெள்ளிப் பதக்கங்களும் பெற்று சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.

பாகிஸ்தான் லாகூரில் கடந்த 13ஆம் திகதிமுதல் 19ஆம் திகதிவரையில் நடைபெற்ற சவாட் கிக் குத்துச்சண்டை விளையாட்டுப் போட்டியில் இலங்கையிலிருந்து பயிற்றுவிப்பாளரான பிரசாத் விக்கிரமசிங்க தலைமையில் வீர, வீராங்கனைகளான எம்.எம்.எம்.மிர்ஷாட், எஸ்.ஏ. அஹ்மட், எம்.எல்.ஹக்கீம், டி.கே.ஜி.கே.ஜி.ஜே.பண்டார, எஸ்.எச்.பஹ்மா, வை.சுஹைல் அக்தார், பி.சி.ரஷ்வி மன்சில், ஏ.எம்.எம்.எம்.சாதீர், எம்.எம்.எம்.மு.ஆவியா, கே.இந்து உள்ளிட்ட 11 வீர, வீராங்கனைகள் கலந்து கொண்டனர்.

இதன்போது 30 வயதுக்குக் கீழ் 60-65 கிலோகிராம் எடைப்பிரிவில் பி.சி.ரஸ்வி தங்கப் பதக்கத்தையும், 25 வயதுக்குக்கீழ் 56-60 கிலோகிராம் எடைப்பிரிவில் எம்.எம்.எம்.மிர்ஷாட் தங்கப் பதக்கத்தையும், 25 வயதுக்குக் கீழ் 70-75 கிலோகிராம் எடைப்பிரிவில் ஏ.எம்.எம்.எம். சாதிர் தங்கப் பதக்கத்தையும், 45 வயதுக்குக் கீழ் 75-80 கிலோகிராம் எடைப்பிரிவில் பயிற்றுவிப்பாளர் பிரசாத் விக்கிரமசிங்க தங்கப் பதக்கத்தையும், 10 வயதுக்குக் கீழ் 20-24 கிலோகிராம் எடைப்பிரிவில் எம்.எம்.எம்.மு.ஆவியா தங்கப் பதக்கத்தையும், 25 வயதுக்குக் கீழ் 48-52



கிலோகிராம் எடைப்பிரிவில் கே.இந்து தங்கப் பதக்கத்தையும் தமதாக்கிக்கொண்டனர்.

மேலும் 30 வயதுக்குக் கீழ் 70-75 கிலோகிராம் எடைப்பிரிவில் எல்.எல்.ஹக்கீம் வெள்ளிப் பதக்கத்தையும், 20 வயதுக்குக் கீழ் 70-75 கிலோகிராம் எடைப்பிரிவில் வை.சுஹைல் அக்தார் வெள்ளிப் பதக்கத்தையும், 30 வயதுக்குக் கீழ் 70-75 கிலோம்கிராம் எடைப்பிரிவில் மன்சில் நஷீர் வெள்ளிப் பதக்கத்தையும், 18 வயதுக்குக் கீழ் 48-52 கிலோகிராம் எடைப்பிரிவில் சுயான் பண்டார வெள்ளிப் பதக்கத்தையும், 20 வயதுக்குக் கீழ் 40-44 கிலோகிராம் எடைப்பிரிவில் எஸ்.எச்.பஹ்மா வெள்ளிப் பதக்கத்தையும் முறையே தமதாக்கிக்கொண்டனர்.

# அபார வெற்றியுடன் ஒருநாள் தொடர் இலங்கை வசம்

சிம்பாப்வே அணியுடனான தீர்மானமிக்க மூன்றாவதும், இறுதியுமான ஒருநாள் சர்வதேச போட்டியில் 184 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்ற இலங்கை அணி ஒருநாள் சர்வதேச தொடரை 2 - 1 என்ற அடிப்படையில் கைப்பற்றியது.

முதல் இரு போட்டிகளில் நிறைவில் தொடர் 1 - 1 என்ற அடிப்படையில் சமநிலை பெற்றிருந்த நிலையில் தொடர் வெற்றியாளரை தீர்மானிக்கின்ற மூன்றாவதும், இறுதியுமான போட்டி நேற்று முன்தினம் கண்டி, பல்லேகல சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்றது. போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 9 விக்கெட்கள் இழப்பிற்கு 254 ஓட்டங்கள் சேர்த்தது.

இலங்கை அணியின் துடுப்பாட்டத்தில் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் பெத்தும் நிசங்க 55 ஓட்டங்களையும், சரித் அசலங்க 52 ஓட்டங்களையும் அதிகபட்ச ஓட்டங்களாக பெற்றனர். 255 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய சிம்பாப்வே அணி 24.4 ஓவர்களில் வெறும் 70 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்து போட்டியில் படுதோல்வியை சந்தித்தது.

இதனை தொடர்ந்து இலங்கை அணி தொடரை 2 - 1 என்ற அடிப்படையில் கைப்பற்றியது. இலங்கை அணியின் பந்துவீச்சில் ஜெஃப்ரி வெண்டர்ஸே 10 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்களையும், துஸ்மந்த சமீர, ரமேஸ் மெண்டிஸ் ஆகியோர் தலா இரு விக்கெட்கள் வீதமும், மஹேஷ் தீக்ஷன மற்றும் சாமிக்க கருணாரத்ன ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட் வீதம் வீழ்த்தினர். போட்டியின் ஆட்டநாயகனாக சரித் அசலங்க தெரிவான அதேவேளை, தொடர் ஆட்டநாயகனாக ஆரம்ப துடுப்பாட்ட வீரராக 146 ஓட்டங்களை குவித்த பெத்தும் நிசங்க தெரிவானார்.





காரைக்கவி

# சீத்துவக்கேடு 171

ஆட்டுக்கு குழை கட்டிப்போட்டு வந்த ஆச்சி இடைக்கட்டை கொஞ்சம் மேல அசைச்சு அசைச்சு இழுத்து விட்டுக்கொண்டே நிலத்தில சப்பாணி கொட்டி இருந்தவ ஆடு ஒருமாதிரி நிக்குது எப்பிடியும் பறுவத்துக்கு இடையில குட்டி போடும் போல கிடக்கெண்டா.



பிறகு ஆ... எங்க விட்டனான் எண்டு கொஞ்சநேரம் முத்தத்து வேம்பைப் பாத்து யோசிச்சுக் கொண்டு இருந்தவ ஆ... அவள் மாதவியின்ரை ஆட்டத்தை பற்றி எல்லே சொல்ல வெளிக்கிட்டனான் எண்டவ அவள் உப்பிடி ஆடினவள் எண்டதை

> **"கடையமயி ராணிமரக் கால்விந்தை கந்தன் குடைகுடிமால் அல்லியமற்கும்பம்—சுடர்விழியாற் பட்டமதன் பேடுதிருப் பாவையரன் பாண்டரங்கம் கொட்டியிவை காண்பதினோர் கூத்து"**

எண்ட பாட்டில இளங்கோவடிகள் சொல்லுறார் எண்டா.

அல்லியம், கொடுகொட்டி, குடை, குடம், பாண்டரங்கம், மல், துடி, கடையம், பேடு, மரக்கால், பாவை எண்டு பதினோரு ஆட்டங்கள் அவள் ஆடி இருக்கிறாள் எண்ட ஆச்சி.

உதில முதல் ஆறும் நிண்டு ஆடுற ஆட்டங்கள் எண்டும் கடைசி அஞ்சும் நிலத்தில விழுந்து ஆடுற ஆட்டங்கள் எண்டும் விஷயம் தெரிஞ்ச ஆக்கள் சொல்லுகினம் எண்டா.

அல்லியம் எண்ட ஆட்டம் என்னவெண்டால் கண்ணன் ஆடுற ஆட்டங்களில இதுவும் ஒண்டு. கண்ணனை கம்சன் யானை உருவத்தில அழிக்க வரேக்கை அந்த யானையை கண்ணன் சாக்காட்டிப்போட்டு ஆடின ஆட்டத்தை அல்லியம் எண்டுகினம் எண்டா ஆச்சி.

உதமாதிரி கண்ணன் காமன்ரை மோன் அநிருத்தனை பாதுகாக்கவெண்டு போட்டு பாணாசுரன் எண்ட அசுரனை சாக்காட்டி அந்தப்பெடியை மீட்டுப் போட்டு குடத்துக்கு மேல நிண்டு ஆடின ஆட்டத்தை ஆக்கள் குடம் எண்டு சொல்லுறவை எண்டா.

உதமாதிரி கண்ணன் எண்ட கிருஷ்ணர் வாணாசுரன் எண்ட அசுரனை ஒரு மல்யுத்தக்காரன் மாதிரி வேஷம் போட்டுப் போய் மல்யுத்தம் போட்டு சாக்காட்டிப் போட்டு ஆடின ஆட்டத்தை மல் இல்லாட்டில் மல்லாடல் எண்டு சொல்லுகினம் எண்டா.

ஆச்சி உப்பிடிச் சொல்லவும் எங்கட சிவபெருமான் முப்புரங்களை எரிச்சுப் போட்டு ஆடின ஆட்டந்தான் கொடுகொட்டி எண்ட அப்பு.



பாவை

உப்பிடி சிவபெருமான் உந்த முப்புரங்களை எரிக்கப் போகேக்கை அவற்றை தேரை ஓட்டிக்கொண்டு போன பிரம்மாவுக்கு தேருக்கு முன்னால நிண்டு ஆடிக் காட்டின கூத்துதான் பாண்டரங்கம் கண்டியோ எண்டார்.

பிறகு உவர் சிவபெருமான் மட்டுமில்லை அவற்றை இளைய மோன் முருகனும் சூரனை சாக்காட்டிப் போட்டு ஒரு ஆட்டம் போட்டவர் அந்த ஆட்டத்தை துடி இல்லாட்டில் துடிக்கூத்து எண்டு சொல்லுறவை.

உதுமாதிரி உவர் முருகன் அவுணர்களை சாக்காட்டிப் போட்டு வெற்றிக் குடையை கையில பிடிச்சுக் கொண்டு ஆடின ஆட்டத்தை குடை இல்லாட்டில் குடையாடல் எண்டு சொல்லுகினம் எண்டார் அப்பு.

உத மாதிரி உவன் காமன்ரை மோன் அநிருத்தன் எண்டவனும் தேப்பனுக்கு தப்பாமப் பிறந்த ஒருத்தன். உவன் அப்ப இருந்த பாணாசுரன் எண்ட ஒரு அசுரனின்ரை பெட்டை உசா எண்டவளை பின்னும் முன்னும் திரிஞ்சு ஒருநாள் கடத்திக்கொண்டு போட்டான். அவன் அசுரன் உவன் அநிருத்தனை தேடித் பிடிச்சு கொண்டே சிறையில போட்டிட்டான்.

பிறகு உதென்னடா கரைச்சலாக் கிடக்கு நான் எட்டடி பாஞ்சா உவன் என்ரை பெடி பதினாறு அடி பாயிறான் கடத்த ஆளில்லாமல் அசுரன்ரை பெட்டையைப் போய் கடத்தி இருக்கிறானே எண்டு போட்டு அவன் தேப்பன் காமன் அவனுக்கு நேரில போகப் பயந்து ஒரு பேடி உருவம் எடுத்துப் போய் தன்ரை பெடியை விடச் சொல்லி ஆடின ஆட்டம்தான் பேடு இல்லாட்டில் பேடியாடல் எண்டு ஆக்கள் சொல்லுறவை எண்டார் அப்பு.

உவன் இந்திரன்ரை பெண்டில் இந்திராணியும் என்ன குறைஞ்சவளே உவளும் உவளுக்கு அயிராணி எண்டு இன்னும் ஒரு பெயர் இருக்கு வாணாசுரன்ரை கோட்டையின்ரை வடக்கு வாசலில் உழத்தி வடிவத்தில ஆடினவளாம். உந்த உவளின்ரை ஆட்டத்தை ஆக்கள் கடையம் எண்டு சொல்லுகினம் எண்டு அப்பு சொன்னார்.

உதமாதிரி உவ துர்க்கை எண்ட கொற்றவையை கொல்லுறதுக்கெண்டு உவங்கள் அசுரர்கள் தேள், பாம்பு எண்டு விஷப் பிராணிகளை அனுப்பினவங்கள் கண்டியோ.


உடன உவ துர்க்கை மரக்கால்களிலை நிண்டு ஒரு ஆட்டம் ஆடி உந்த பிராணியள் எல்லாத்தையும் கொண்டு போட்டாவாம். உவ உப்பிடி ஆடின ஆட்டத்தைதான் மரக்கால் எண்டு சொல்லுகினம் எண்டார் அப்பு.

உடன ஆச்சி உதுமாதிரி உவங்கள் அசுரர்கள் உவ திருமகள் எண்ட லச்சுமியோடையும் சேட்டை விட்டவங்கள் எல்லே. உடன அவ கோவத்தில அவங்கள் எல்லாரையும் கொண்டு போட்டு ஒரு ஆட்டம் போட்டவ.

உந்த ஆட்டத்தை பாவை இல்லாட்டில் பாவையாடல் எண்டு சொல்லக் கேள்வி எண்ட ஆச்சி அட பங்குனார் சூரியன் வட்டுக்கை வந்திட்டுது ஒருத்தருக்கும் பசிக்கேல்லையே எண்டு போட்டு அடுக்களைக்கு சாப்பாடு எடுக்கப் போனா.

(தொடரும்)

# இவ்வார இராசி பலன்கள்



**வித்வ கலாபூஷணம் ஜோதிட திலகம் சிவஸ்ரீ வெங்கட சுப்ரமணிய குருக்கள்**

**மேஷ ராசி அன்பர்களே!**

குடும்பத்தில் உற்சாகத்துக்குக் குறைவிருக்காது. உறவினர்கள் வருகை மகிழ்ச்சி தரும். பொருளாதார வசதிக்கு குறைவு எதுவும் இருக்காது. புதிய முயற்சிகளை தவிர்ப்பது நல்லது. உடல் ஆரோக்கியம் மேம்படும். கணவன் - மனைவிக்கிடையே மூன்றாவது நபர்களின் தலையீடு காரணமாக மனஸ்தாபம் ஏற்படக்கூடும். அனுசரித்துச் செல்வது நல்லது. பிள்ளைகள் பிடிவாதம் பிடித்தாலும் அவர்களைக் கண்டிக்காமல் விட்டுப்பிடித்துச் செல்வது நல்லது. அலுவலகத்தில் வேலைச்சுமை அதிகரிக்கும். சக ஊழியர்களிடம் அனுசரித்து நடந்துகொள்வது அவசியம். உங்கள் வேலைகளை மற்றவர்களிடம் ஒப்படைக்க வேண்டாம். வியாபாரத்தில் எதிர்பார்த்த அளவுக்கு இலாபம் கிடைக்காது. போட்டிகளைச் சமாளிக்க கடுமையாகப் பாடுபடவேண்டி வரும். பெண்களுக்கு மிகவும் மகிழ்ச்சியான வாரம். கணவரின் அன்பும் ஆதரவும் உற்சாகம் தரும்.

**ரிஷப ராசி அன்பர்களே!**

பொருளாதார வசதிக்குக் குறைவில்லை. செலவுகள் ஏற்பட்டாலும் சமாளித்துவிடுவீர்கள். நெருங்கிய உறவினர்கள் மூலம் குடும்பத்தில் ஏற்பட்ட குழப்பங்களை சாமர்த்தியமாக சரிசெய்துவிடுவீர்கள். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். திருமண வயதில் இருப்பவர்களுக்கு நல்ல இடத்தில் திருமணம் நிச்சயமாகும். நீண்டநாட்களாகச் சந்திக்காமல் இருந்த நண்பர்களைச் சந்தித்து மகிழ்வீர்கள். அலுவலகத்தில் எதிர்பார்த்த பதவி உயர்வு மற்றும் சம்பள உயர்வு கிடைக்கும். சிலருக்கு புதிய பொறுப்புகள் வந்து சேரும். பணியில் ஸ்திரத்தன்மை உண்டாகும். வியாபாரத்தில் புதிய முதலீடுகள் செய்வதைத் தவிர்க்கவும். கடையை வேறு இடத்துக்கு மாற்றம் செய்வதை சற்று ஒத்திப் போடவும். பங்குதாரர்களின் ஆதரவு மனதுக்கு ஆறுதலாக இருக்கும். பெண்களுக்கு அதிக பொறுப்புகளால் உடல் அசதி உண்டாகும். பணவசதி ஓரளவு திருப்தி தரும்.

**மிதுன ராசி அன்பர்களே!**

நீங்கள் நீண்டநாட்களாக எதிர்பார்த்திருந்த நல்ல தகவல் வந்து சேரும். உடல் ஆரோக்கியம் மேம்படும். பணவரவு அதிகரிக்கும். வாரத் தொடக்கத்தில் எதிர்பாராத செலவுகளும் ஏற்படும். குடும்ப விஷயத்தில் மற்றவர்கள் தலையிடுவதை அனுமதிக்காதீர்கள். சிலருக்கு நீண்டநாளாக நிறைவேற்றாமல் விடுபட்ட குலதெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும். தந்தைவழி உறவினர்களால் செலவுகள் ஏற்படும். அலுவலகத்தில் உங்களின் திறமை வெளிப்படும். உயர்ந்த பதவி தேடி வரும். சம்பள உயர்வும் கிடைக்கும். ஆனால், சக ஊழியர்களிடம் எச்சரிக்கையாக இருக்கவும். வியாபாரத்தை விரிவுபடுத்த நினைப்பவர்கள் அதற்கான முயற்சிகளைத் தொடங்கலாம். விற்பனையும் இலாபமும் அதிகரிக்கும். சக வியாபாரிகளுடன் இணக்கமான உறவு ஏற்படும். பெண்களுக்கு செலவுகள் கூடுவதால் சற்று சிரமப்பட்டே சமாளிக்க வேண்டி வரும். உறவினர்கள் அனுசரணையாக இருப்பார்கள்.

**கடக ராசி அன்பர்களே!**

ஓரளவு அனுகூலமான பலன்களை எதிர்பார்க்கலாம். பணவரவைப் பொறுத்தவரை திருப்திகரமான போக்கே காணப்படுகிறது. செலவுகளும் அவசியமான செலவுகளாகவே இருக்கும். சிலருக்கு வெளியூர்ப் பயணமும் அதனால் ஆதாயமும் ஏற்படும். திருமணம் தொடர்பான முயற்சிகளில் குடும்பப் பெரியவர்களின் ஆலோசனையைக் கேட்டுச் செய்யவும். வாழ்க்கைத் துணைவழி உறவினர்கள் வருகை செலவுகளை ஏற்படுத்துவதுடன் மகிழ்ச்சியும் தருவதாக இருக்கும். அலுவலகத்தில் உங்கள் பணிகளில் கூடுதல் கவனம் தேவை. இப்போதைக்கு சலுகைகள் எதையும் எதிர்பார்க்கமுடியாது. சிலருக்கு இட மாறுதல் கிடைப்பதற்கும் வாய்ப்பு உள்ளது. வியாபாரத்தை விரிவுபடுத்தவும், வாடகை இடத்தில் இருந்து சொந்த இடத்துக்கு கடையை மாற்றவும் வாய்ப்பு உண்டாகும். புதிய முதலீட்டுக்கான பண உதவி கிடைக்கும். பெண்கள் அக்கம்பக்கத்தில் உள்ளவர்களிடம் பக்குவமாக நடந்து கொள்ளவும். வீண் அலைச்சலைத் தவிர்ப்பது நல்லது.

**சிம்ம ராசி அன்பர்களே!**

வருமானம் திருப்திகரமாக இருக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். வீண் செலவுகள் இருக்காது. பிள்ளைகள் மூலம் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். தந்தையுடன் ஏற்பட்டிருந்த கருத்துவேறுபாடுகள் நீங்கும். தந்தைவழி உறவினர்களால் சுபநிகழ்ச்சிகள் ஏற்பாடாகும். நண்பர்களின் வருகை மகிழ்ச்சி தருவதாக இருக்கும். அலுவலகத்தில் இதுவரை இருந்த பணி நெருக்கடி இப்போது சற்று குறையும். அதனால் மனதில் உற்சாகம் ஏற்படும். வேலைக்கு முயற்சி செய்பவர்களுக்கு நல்ல பதில் கிடைக்கும். வியாபாரத்தில் இலாபம் எதிர்பார்த்த அளவுக்கு இருக்காது என்றாலும் ஓரளவு திருப்திகரமாக இருக்கும். கடையை புதிய இடத்துக்கு மாற்ற நினைப்பவர்கள் அதற்கான முயற்சிகளில் ஈடுபடலாம். பெண்களுக்கு மனதில் அவ்வப்போது லேசான சோர்வு ஏற்படும்.

**கன்னி ராசி அன்பர்களே!**

பொருளாதார நிலைமை திருப்திகரமாக இருக்கும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. தாயின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் அதனால் பாதிப்பு எதுவும் இருக்காது. வெளியூர்ப் பயணங்களைத் தவிர்ப்பது நல்லது. பழைய கடன்களைத் தந்து முடிப்பீர்கள். கொடுத்த கடனும் திரும்பக் கிடைக்கும். வாழ்க்கைத்துணையின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். வேலைக்குச் செல்லும் அன்பர்களுக்கு அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். அதற்கேற்ற ஆதாயமும் கிடைக்கும் என்பதால் உற்சாகமாகப் பணிகளில் ஈடுபடுவீர்கள். வியாபாரத்தில் முக்கிய முடிவுகள் எதையும் இப்போது எடுக்கவேண்டாம். அவசியம் முடிவு எடுக்கவேண்டிய நிலை ஏற்பட்டால், அனுபவம் மிக்கவர்களிடம் ஆலோசனை கேட்டுச் செய்யவும். பெண்களுக்கு சந்தோஷமும் நிம்மதியும் தரும் வாரம். பிறந்தவீட்டில் இருந்து சுபச்செய்தி ஒன்று கிடைக்கக்கூடும்.

**துலா ராசி அன்பர்களே!**

கணவன் - மனைவிக்கிடையே இருந்து வந்த கருத்து வேறுபாடு நீங்கி அந்நியோன்யம் ஏற்படும். எதிர்பாராத பயணங்கள் மேற்கொள்ள நேரிட்டு, அதனால் உடல் அசதி உண்டாகக் கூடும். உங்களைப் பற்றித் தவறாகப் புரிந்து கொண்ட நண்பர்கள், தங்கள் தவறை உணர்ந்து மன்னிப்புக் கேட்பார்கள். தந்தையின் உடல் ஆரோக்கியம் மேம்படும். அவருடன் சுமுகமான உறவு ஏற்படும். செலவுகள் ஏற்பட்டாலும் பணவரவு இருப்பதால் சிரமம் எதுவும் இல்லை. அலுவலகத்தில் சக ஊழியர்கள் உங்கள் பணிகளில் உதவி செய்வார்கள். மற்றபடி பதவி உயர்வோ சலுகை உயர்வோ எதிர்பார்க்கமுடியாது. வியாபாரத்தின் காரணமாக சிலர் தொலைதூர பயணங்களை மேற்கொள்ள நேரும். பணியாளர்கள் நல்லமுறையில் ஒத்துழைப்பு தருவார்கள். சக வியாபாரிகளிடையே இணக்கமான சூழ்நிலை உண்டாகும். பெண்களுக்கு உறவினர்கள் வருகையால் பொறுப்புகள் அதிகரிக்கும்.

**விருச்சிக ராசி அன்பர்களே!**

செலவுகள் அதிகரித்தாலும் கடன் வாங்காமல் சமாளித்துவிட முடியும். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். குடும்ப விஷயமாக குறுகிய தொலைவுப் பயணம் மேற்கொள்ள வேண்டி வரும். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். இதுவரை ஏற்பட்டு வந்த மருத்துவச் செலவுகள் குறையும். பிள்ளைகளால் பெருமை உண்டாகும். மகன் அல்லது மகளின் திருமண முயற்சிகளில் ஈடுபட சாதகமான வாரம். அலுவலகத்தில் நீண்டநாட்களாக எதிர்பார்த்த சலுகை இப்போது கிடைக்கும். சிலருக்கு அவர்கள் விரும்பிய இடத்துக்கு மாற்றல் கிடைக்கும். வியாபாரத்தில் எதிர்பார்க்கும் இலாபம் கிடைக்கும். வாடகை இடத்தில் இருந்து சொந்த இடத்துக்கு கடையை மாற்றி விரிவுபடுத்துவீர்கள். சக வியாபாரிகள் அனுசரணையாக இருப்பார்கள். பெண்களுக்கு மிகவும் மகிழ்ச்சியான வாரம் இது. கணவர்வழி உறவினர் வீட்டு சுபநிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்படும்.

**தனுசு ராசி அன்பர்களே!**

வருமானம் அதிகரிக்கும். எதிர்பாராத பணவரவுக்கும் இடமுண்டு. சிலருக்கு உடல் ஆரோக்கியம் பாதிக்கப்படக்கூடும் என்றாலும், உரிய சிகிச்சையின் மூலம் உடனே நிவாரணம் கிடைத்துவிடும். வீண்செலவுகள் எதுவும் ஏற்படுவதற்கில்லை. மற்றவர்களின் தலையீடு காரணமாகக் குடும்பத்தில் சில பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும். உறவினர்களுடன் பேசும்போது பொறுமை அவசியம். கணவன் - மனைவி இருவரும் ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்வது நல்லது. அலுவலகத்தில் உங்களுக்கு மறுக்கப்பட்டு வந்த சம்பளஉயர்வு, பதவிஉயர்வு போன்ற சலுகைகள் கிடைக்கும். சிலருக்கு வேறு ஊருக்கு இட மாறுதல் கிடைக்கும். வியாபாரத்தில் சற்று கூடுதலாக உழைக்கவேண்டி வரும். பற்று வரவு சுமுகமாக நடக்கும். பணியாளர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். பெண்களுக்கு பிரச்சினை இல்லாத வாரம். கணவருடன் ஏற்பட்டிருந்த பிணக்குகள் நீங்கும்.

**மகர ராசி அன்பர்களே!**

பணவரவுக்குக் குறைவிருக்காது. ஆனாலும், எதிர்பாராமல் ஏற்படும் செலவுகளால் கையிருப்பு குறைவதுடன் சிலருக்குக் கடன் வாங்கவும் நேரிடும். சிலருக்கு தெய்வப் பணிகளில் பங்கேற்கும் வாய்ப்பு ஏற்படும். தந்தையுடன் கருத்துவேறுபாடு ஏற்பட வாய்ப்புள்ளதால் சற்று பொறுமையுடன் இருப்பது நல்லது. பிள்ளைகள் பிடிவாதமாக இருப்பார்கள். கூடுமானவரை அவர்களைக் கண்டிக்காமல் அனுசரித்துச் செல்வது நல்லது. அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். அதிகாரிகளின் ஆதரவால் நீண்டநாட்களாக எதிர்பார்த்து காத்திருந்த பதவி உயர்வு கிடைக்கும். அலுவலகச் சூழ்நிலை மகிழ்ச்சி தரும். வியாபாரத்தில் எதிர்பார்த்ததைவிட இலாபம் கூடுதலாகக் கிடைக்கும். பணியாளர்கள் நல்ல முறையில் பணி செய்வார்கள். பெண்களுக்கு புகுந்தவீட்டு உறவினர்களிடையே ஏற்பட்டிருந்த அவப்பெயர் நீங்கும். மதிப்பும் மரியாதையும் அதிகரிக்கும்.

**கும்ப ராசி அன்பர்களே!**

பணப்புழக்கம் அதிகரிக்கும். செலவுகள் குறைவு என்பதால் சிறிது சேமிக்கவும் முடியும். பிள்ளைகள் மூலம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். தந்தைவழி உறவினர்கள் வருகையால் வீட்டில் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். குடும்பம் தொடர்பான முக்கிய முடிவு எடுப்பது சாதகமாக முடியும். நீண்டநாட்களாக செலுத்த முடியாமல் இருந்த குலதெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும். அலுவலகத்தில் உங்கள் பணிகளில் மட்டுமே கவனமாக இருக்கவும். உயர் அதிகாரிகளிடம் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். வியாபாரத்தில் இலாபம் அதிகரிக்கும். சக வியாபாரிகளுடன் சுமுகமான போக்கு ஏற்படும். விற்பனையைப் பெருக்குவதில் பணியாளர்கள் உற்சாகமாக ஈடுபடுவார்கள். பெண்களுக்கு உற்சாகமான வாரமாக இருக்கும். உறவினர்கள் வருகை மகிழ்ச்சி தரும். பிள்ளைகளால் பெருமை உண்டாகும்.

**மீன ராசி அன்பர்களே!**

எதிர்பார்த்ததைவிட வருமானம் கூடுதலாக இருக்கும். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். உங்கள் முயற்சிகளுக்கு வாழ்க்கைத்துணை ஆதரவாக இருப்பார். பிள்ளைகளால் பெருமை உண்டாகும். உறவினர்களால் சிலருக்கு சங்கடங்கள் ஏற்பட்டாலும் பாதிப்பு எதுவும் இருக்காது. சிலருக்கு பிள்ளைகள் வழியில் நீண்டநாட்களாக எதிர்பார்த்த சுபச்செய்தி கிடைக்கக்கூடும். தந்தையிடம் எதிர்பார்த்த காரியம் இழுபறியானாலும் முடிந்துவிடும். அலுவலகத்தில் வேலைச்சுமை அதிகரிக்கும். அதிகாரிகளிடம் பக்குவமாக நடந்துகொள்ளவும். வியாபாரத்தில் எதிர்பார்த்ததை விட இலாபம் அதிகமாக வரும் என்றாலும் அதற்காக கூடுதலாக உழைக்கவேண்டி வரும். வியாபாரத்தை விரிவுபடுத்துவதற்குத் தேவையான கடன் கிடைக்கும். பெண்களுக்கு மனதுக்கு நிம்மதி உண்டாகும். தடைப்பட்ட சுபநிகழ்ச்சி ஒன்று புகுந்தவீட்டு உறவினர்கள் உதவியுடன் நடைபெறக்கூடும்.

தமிழன் தொடர்கதை

# அன்பு வேட்டை



அத்தியாயம் 12

மதினி எடுத்து ஏதாவது கதைத்துவிட்டால் உங்களுக்கு மனம் கஷ்டமாயிடும்னு நெனைச்சிதான் நானே இவ்வளவு காலமாய் அவுங்ககிட்டே கதைக்கிறேன்.

நம்மளுடைய காதலை பற்றி சும்மா சரி ஒரு வார்த்தை கூட சொன்னதில்லை.

நம்மளோடு கதைக்கிறவங்கதானே...

நேரடியாகவே அவுங்க என்கிட்டே சொல்லாமல் இன்னொரு ஆல் வைச்சி சொல்றாங்கனு என்மேல அவுங்க கோவிப்பாங்களே...!

அதனாலதான் நான் தொலைபேசி இலக்கம் கொடுக்கவில்லை.

நீங்கள் என்னடானா கேட்டதுமே என்னை போட்டுக் கொடுத்திட்டீங்களே.... என்று அவள் சொல்லவும்தான் எனக்கும் உண்மையான சூழ்நிலை புரிந்தது.

நாம்தான் தவறு செஞ்சிட்டோம்னு... விளங்கிக் கொண்ட நான் அவளிடம்

சரி அதற்காக உங்களிடம் மன்னிப்புக் கேட்கிறேன்.

என்னை மன்னிச்சிக் கொள்ளுங்க....!

நானிருந்த அந்த சூழ்நிலையில் அதை யோசிக்கயில்லைத்தான் என்றேன்.

அதைக் கேட்டவள்,

ம்.... அதுல மட்டும் குறைவில்லை.

செய்யுறதெல்லாம் செய்யறது பிறகு உடனே மன்னிப்பு கேட்டிடுவாறு அப்பாவியாட்டும் ஆளப்பாறேன் என்றாள்.

அவளின் சோகத்தையும் மறந்து எப்படி இப்படியெல்லாம் அவள் பேசுகிறாள்?

இப்படியெல்லாம் பேசுவதால்தான் எனக்கு அவளை நிறையவே பிடித்திருந்தது.

என் தங்கைகளோடு இதற்கு முன்னர் ஏற்கனவே அவள் அதிகம் தடவை கதைத்திருக்கிறாள்.

சரி பரவாயில்லை..!

நான் மதினிக்கிட்டே சொல்லிவிட்டு நானே உங்களுடைய தங்கச்சிகளோட கதைக்கிறேன்.

வாரது வரட்டும்.

ஆனால், ஒன்னு சொல்கிறேன்.

உங்களை மணந்துக் கொள்ள முன்னாடி ஒரு வேளை என்னுடைய உம்மா இறந்துவிட்டால் நான் கல்யாணமே பன்னிக்க மாட்டேன்.

உங்களை என்னால் மறக்க முடியாதுதான்.

ஆனாலும், உங்களை நான் கல்யாணம் பன்னிக்க மாட்டேன்.

உங்களுடைய வீட்டார் மறுத்து விட்டால் நான் வேறு யாரையாவதும் கல்யாணம் பன்னிக்க மாட்டேன் என்று அவள் சொன்னதில் நிறையவே உறுதி இருந்தது.

ஆனாலும், அதற்கான பதிலாய் என்னால் எதையுமே சொல்ல முடியவில்லை.

எனக்கு ஒரே குழப்பமாகவே இருந்தது.

அவள் சொன்னதைப் போலவே அவளும் என்னுடைய தங்கைகளுடன் கதைத்தாள்.

அப்போது அவ்விடயம் வீட்டில் எல்லோருக்கும் பரவிவிட என்னுடைய வீட்டில் சிறிது சிறிதாக பூகம்பம் கிளம்பியது.

அதிலும் என் மீது முழு நம்பிக்கை வைத்திருந்த என்னுடைய தம்பிக்கு மிகவும் கோபம் வந்து விட்டது.

இவன் இப்படி நம்பிக்கை துரோகம் செய்து விட்டானே என்று கோபத்தில் என்னோடு,

இவனோடு நான் இனி கதைக்கவும் மாட்டேன் என்று சொல்லி விட்டான்.

அது மாத்திரமில்லை.

சே....! இவன் இப்படி செய்வானென்று நான் கனவிலும் கூட நினைக்கவேயில்லையே....! என்று வேறு என்னுடைய தம்பி கதைக்க,

என்னுடைய தாயும் தங்கைகளும் மூத்த சகோதரியும் நமது காதலைக் கேள்விபட்டு சந்தோஷப்பட்டனர்.

நாளை எனது வீட்டுக்கு அவர்கள் கதைக்க வருவதாகவும் என்னுடைய தங்கைகளிடம் அவர்கள் சொல்லி விட்டனர்.

அதுபோலவே மறுநாளும் அவர்கள் எனது வீட்டுக்கு வந்தும் விட்டனர்.

என்ன செய்வது என்று எனக்கு ஒன்றுமே புரியவில்லை.

எது நடந்து விடும் என்று நான் பயந்தேனோ அது இப்போது நடந்து விடும் போலவேயிருந்தது.

போதாக் குறைக்கென்று என்னுடைய பிறந்தநாள் வேறு...

அந்த அன்றே அவர்களும் வந்தனர்.

வந்தவர்களிடம் இரண்டு புறாக்களை வரைந்து பிரேம் பன்னி எனது பிறந்தநாள் பரிசாக எனக்காக அவள் அனுப்பி வைத்திருந்தாள்.

அந்தப் பரிசு இன்னும் நான் இப்போதிருக்கும் என் வீட்டின் சுவரில் தொங்கிக் கொண்டுதான் இருக்கின்றது.

ஆனால், துரதிர்ஷ்டவசமாக அந்த பேச்சு வார்த்தை தோல்வியில்தான் முடிந்தது.

அதற்கு காரணம் எனது தம்பிக்கு நமது திருமணத்தில் சற்றும் விருப்பமில்லை.

அதற்கு காரணம், நான் நமது காதலை அவனிடம் மறைத்து விட்டேன் என்கின்ற வருத்தம்தான்.

இப்போது நீயும் அவளும் சேர்ந்து என்ன முடிவு எடுத்திருக்கீங்க என்று கேட்டார் என்னுடைய மச்சான்.

அதற்கு நான்,

நாங்கள் எந்த முடிவும் எடுக்கவில்லை.

வீட்டாரின் முடிவுதான் அதிலும் என்னுடைய தம்பியின் முடிவில்தான் அது தங்கியிருக்கிறது என்றேன்.

அதனைக் கேட்ட மச்சான்,

தம்பியிடம் கேட்க அவன் மௌனமாகவேயிருந்தான்.

பிறகு தொலைபேசியில் அழைப்பினை எடுத்து அவளுடன் கதைத்து ஒரு முடிவினை எடுக்கச் சொன்னார்கள்.

வேறு வழியில்லாமல் உடனே அவளுக்கு அழைப்பினையெடுத்து தம்பியிடம் கொடுத்தேன்.

அவள் கதைக்கவும் அவன் சரியாக பதில் கொடுக்கவில்லை.

உங்கள் சம்மதம் என்ன என்று தம்பியிடம் அவள் கேட்டப்போது அதற்கவன்,

நீங்கள் என்னிடம் கேட்டு விட்டா காதலித்தீர்கள்?

நான் உங்களுக்கு முடிவு சொல்ல என்று சொல்லி விட்டு தொலைபேசியை என்னிடம் தந்து விட்டான்.

எனக்கு வேறு வழித் தெரியாமல் வெளியே கொண்டுபோய், நான் அவளுடன் கதைத்தேன்

ஒரு மணி நேரத்திற்கு மேல் கதைத்தும் ஒரு முடிவினை நம்மால் எடுத்துக் கொள்ள முடியவில்லை.

நான் எனது தம்பிமேல் உயிரையே வைத்திருந்ததால் அவனுக்கு எதிராகவும் என்னால் முடிவு ஏதும் எடுக்கவும் முடியவில்லை.

கடைசியில் வேறு வழியில்லாமல் முடிவெடுக்கும் பொறுப்பினை என்னுடைய தந்தையிடம் கொடுத்து விட்டேன்.

என்னுடைய தந்தை

இன்னும் ஒரு மாதக்காலத்துக்குள் பதில் சொல்லி அனுப்புகிறேன் என்று சொல்லி அவர்களை அனுப்பி விட்டார்.

ஒன்றிரண்டு மாதங்கள் நம்மை விட்டு சென்றிருக்கும்.

தம்பிக்கு எப்படியோ அவனின் மனசு மாறி விட்டது.

அதனால் ஒருநாள் நான் அவளிடம் போய் பேசுகிறேன்.

உங்களை ஒன்று சேர்த்து வைக்கிறேன் என்று சொல்லி விட்டு அவளுக்கு அழைப்பு எடுத்தான்.

உடனே மறு முனையில்

நீங்கள் யாரு...?

எனக்கு உங்களைத் தெரியாது.

தயவு செய்து இந்த தொலைபேசி இலக்கத்திற்கு இனிமேல் அழைப்பு எதனையும் எடுத்து என்னை தொல்லை படுத்த வேண்டாம் என்ற பதிலோடு அவ்வழைப்பு துண்டிக்கப்பட்டது.

அவள் கதைத்ததற்கான காரணம் எனக்கு இன்று வரை சத்தியமாய் தெரியாது.

ஒருவேளை அவளின் தாயார் இறந்திருப்பாளோ...?

அல்லது அவள் ஏற்கனவே சொன்னதைப் போல உங்கள் வீட்டார் மறுத்தால் பின்னாடி அவர்கள் சம்மதித்தாலும் நான் ஏற்கமாட்டேன் என்றாளே அதுவாக இருக்குமோ...?

அல்லது இந்த கோழையோடு வாழ முடியாது என்று முடிவெடுத்தாளோ தெரியாது.

எது எப்படியோ நான் அதிகம் நேசித்த பாசம் வைத்த என்னுடைய இதய ராகம் என்னை விட்டு பிரிந்து விட்டது.

அதற்கு பின்னாடி சுமார் பத்து பன்னிரெண்டு வருடங்களுக்கு பின்னர் இன்றுதான் அவள் என் தம்பிக்கு கடைசியாக எழுதிய அந்தக் கடிதம் என் கைகளில் கிடைத்தது.

அதை பார்த்துதான் தம்பி மனசு மாறியிருப்பானோ என்பது எனக்குத் தெரியாது.

எது எப்படியோ ஒரு அன்பு வேட்டை காலத் துப்பாக்கியால் சுடப்பட்டு கல்லறைக்குள் சங்கமமாயிற்று.

ஒரு பாச நிலா கரு மேகத்திற்குள் காணாமல் போய் விட்டது என்பது மட்டும் உண்மை.

அந்த கடிதத்தை பார்த்த எனக்கு தேன்கூடு கவிதை தொகுதியை தேடியெடுக்கும் எண்ணம் இல்லாமல் போய்விட்டது. இப்போ இழந்துப்போன எனது அன்பு வேட்டையை நாவலாய் எழுதி போட்டிக்கு அனுப்பும் எண்ணத்தில் சோகத்தோடு கணினி முன் உட்கார்ந்தேன் நாவலை தட்டச்சு செய்வதற்காக.

(கற்பனையல்ல)

**முற்றும்**

ஸாலிஹ் அஸீம்

## சொல்ல மறந்த கதை - 28

(1823-1897)

(மலைநாட்டில் எங்கள் சனம்)

வானத்து
நெலவப்போல...
வடிவான வண்ண முகம்...
நட்சத்திர பூவப்போல..
அழகான பிள்ளை முகம்..

சுருட்ட முடி சுருண்டு
நிக்க....
மூக்குசலி வடிஞ்சி வர...
நாக்கால உறிஞ்சி அத...
வாயிக்குள்ள விட்டுக்கிறா...

வந்த கூட்டமெல்லாம்
கலைஞ்சிருச்சி
மாத்தளை அம்பளத்தில்
அத்தனையும் காலியாச்சி...
மாரியம்மன் செல தவிர
காண்பார்கள்
யாருமில்ல.....

யாருமத்த சந்தியில
யாரோ பெத்த சின்ன புள்ள
ஒரியா நிக்கிறானே...
ஒங்காத்தா
பேரச்சொல்லு....

ஆத்தால காணாமின்னு...
அப்பனயும் காணாமின்னு
ஊழ சத்தம் இட்டு அவே
சத்தமா கத்துகிறான்....

முனியாண்டி கொடங்கயில
கெடந்து வளந்த பய...
மூக்காயி வயித்துக்குள்ள..
மூத்தவனா பொறந்த பய....

ராசனு பேரு வச்சி
ராசனப்போல் வளத்தாங்க
கண்டிச்சீம ஊரு வந்து
இப்ப நடுரோட்டில்
நிக்குரானே...

கத்தி கதருனாலும்
சின்னப்பய கண்ணுலயும்
கருகளவு தண்ணிவல்ல
கண்ணு தண்ணி வத்திருச்சி
பாலைவனம் ஆகிருச்சி....

ஐயோ.......
பாவப்பட்ட செம்மம் இது....
சிரழிஞ்சி நிக்கிறது...
அப்பனாயி
புள்ளயெல்லாம்...
அக்க்கா பிரிஞ்சிருச்சே.....

தூரத்துல ஓடையில
ஓடுகிற தண்ணியில...
ஒன்னுக்கு அடிச்சிப்புட்டு...
தாகத்துக்கு தண்ணியயும்...
சின்னப்பய
குடிச்சிக்கிறா.......

பூர்வ ஜென்ம
பாவமேதும்
இப்போ வந்து
சூழ்ந்துருச்சோ
சுத்தி சுத்தி அடிக்கிறதே....
காக்கா குருவி எல்லாம்
சிறகடிச்சி பறந்து வர...

சின்னஞ்சிருசு ஒன்னு
இங்க சிறகொடிஞ்சி
நிக்கிறதே...

மாத்தள சந்தியில...
மரம் வெட்டும் ஆள்
வருது.....
ஆறு பேரு ஆம்பளைங்க
அதிலொருத்தி
பொம்முணாட்டி....

முதுகு தண்டு வளைஞ்ச
மாதி..
கூன் விழுந்த
கெழவி ஒன்னு
ஓடி வெரகு பொருக்கி வர
இந்த பக்கம் வந்துருக்கா
"ஆராயி" அவ பேரு....

ஆத்து தண்ணியள்ளி
குடிக்கிற சின்னவன...
கெழவி பூனக்கண்ணில்
பாத்துப்புட்டா...

யாருடா இந்தப்பய...???

வா ராசா என்று சொல்லி...
கைபுடிச்சி அணைச்சிக்கிட்டு
யாரு பெத்த புள்ள நிய்யி...
எங்கிருந்து வந்துருக்க...

என்று அவ கேக்கயில...
சினுங்குகிறா சின்னப்பய...

அநாத பயலாக்கும்
என்று அவ எண்ணிக்கிட்டு...
கூடவே கூட்டிப்போறா...

நடப்பதென்னானு...
புரியாத வயசுனாலும்..
இனி ஆத்தாளின்
அடிமடியில் தல சாய்க்கும்
அந்த வரம் அடியோடு
சாஞ்சதுன்னு
அவன் அடிமனசு
அலறியது.....

கெழவியோட கைபுடிச்சி
கௌம்புகிறா சின்னப்பய...

தொடரும்...

எம். ராமதாஸ்
இறம்பொடை.

தமிழன் சிறுகதை

# கூலி



அரிசி, சீனி, பருப்பு, நெத்தலி கருவாடு என்று கொஞ்சம் பலசரக்கு சாமான்களை வாங்கி முடிப்பதற்குள் அவனுக்கு வேண்டாம் என்றாகி விட்டது. அந்தப் பொருட்களை கடைக்கு சென்று வாங்குவது ஒன்னும் சிரமமான காரியமல்ல. ஆனால், அந்தப் பொருட்களை வாங்குவதற்கு தேவையான பணத்தினை தேடிக் கொள்வதுதான் இன்றைய காலக்கட்டத்தில் மிகவும் சிரமமான காரியமாகி விட்டது.

அன்றாட கூலி வேலை செய்து பொழப்பு நடத்தும் அவனால் அவனுடைய அப்பா, மனைவி, பிள்ளை, இன்னும் இரண்டு உறவினர்கள் என்று ஆறு பேரினை கொண்டது அவனுடைய குடும்பம். முன்பெல்லாம் அவனைத் தேடி அடிக்கடி வேலைகள் வரும். எல்லா வேலைகளையும் செய்து முடிக்க முடியாமல் வேலை கொடுத்தவர்கள் வாயால் ஏச்சு வாங்கித் திரிவான். ஆனால், இப்போதெல்லாம் அப்படியல்ல. நாட்டில் டொலரில்லயாம் எண்ணெய் இல்லயாம். இறக்குமதியில்லயாம். போரையில்லையாம். வருமானமில்லையாம். அப்பப்பா... எத்தனை இல்லையாம். நினைத்தாலே தலை சுத்தும். விலை வேறு மலை மாதிரி கூடிக்கொண்டே போகிறது.

இதனால் நிறையபேர் சாப்பாட்டு செலவுகளையே சமாளிக்க முடியாமல் தவிப்பதால் எங்கே வேலைகள் செய்கிறார்கள். அப்படி செய்தாலும் வழமைப்போலவே கூலி தருகிறார்கள். ஆனால், அந்தக் கூலியை எடுத்து அன்றாட உணவுக்கு தேவையான பொருட்கள் வாங்கவே போதுமானதாக இருப்பதில்லை. அதனால் அவன் மிகவும் திண்டாட்டத்துடன் நாட்களை கடத்த வேண்டியிருந்தது. தோட்டத் துறவுகள் உள்ளவர்களுக்கு அப்படியல்ல. தேங்காயின் விலை கூடும்போது அவர்களின் வருமானமும் கூடும். ஆனால், ஏழைகளுக்கு அப்படியல்ல. தேங்காய்க்கு ஐம்பது ரூபா கூடும் போது அவர்கள் மேலதிகமாய் அப்பணத்தை தேடவேண்டிவரும்.

இரண்டு நாள் வேலையுமில்லை. கையில் சதக் காசியுமில்லை. பிள்ளைகள் வேறு பசியில் கிடக்கிறார்கள். யோசித்து யோசித்து என்ன செய்வதென்றே அவனுக்கு தெரியவில்லை. கடைசியில் அவன் வழமையாக வேலை செய்யும் தோட்ட முதலாளியிடம் சென்று கடனுக்கு ஐநூறு ரூபாவை வாங்கிவந்து பொருட்களை எடுத்து விட்டு பிறகு வேலை செய்யும்போது கழித்துக் கொள்ளலாம் என்று நினைத்தபடியே அவரிடம் சென்று அப்படியே செய்தும் முடித்து விட்டுதான் அவன் பொருட்களோடு வீட்டுக்கு வந்தான்.

கணவனின் கையில் பொருட்கள் இருப்பதை கண்டும் அவன் மனைவி முகத்தில் சந்தோஷமில்லை. அதனை கண்டவன் என்னயிவள் இப்படியிருக்கா என்று நினைத்தப்படியே...

"என்ன முகத்தில சந்தோஷத்தையே காணோம் என்னாச்சுது" என்றான். அதனைக் கேட்டவள்,

"அது வந்துங்க... தண்ணி மீற்றரை காசி கட்டயில்லனு வெட்டிக்கிட்டு போயிட்டாங்க" என்றதும் அதனைக் கேட்டவன்,

"ஐயய்யோ.... கிணறுமில்லை எப்படியும் தண்ணி கனச்சனை எடுத்தாகனுமே" என்று சொல்லிவிட்டு கையிலிருந்த பொருட்களை மனைவியிடம் கொடுத்து விட்டு வந்த வேகத்திலேயே திரும்ப மிதி வண்டியை மிதித்துக் கொண்டு தெரிந்தவர்களிடமெல்லாம் போய் விடயத்தினை சொல்லி கெஞ்சு கூத்தாடி நாய் படாத பாடுபட்டு கொஞ்சம் கொஞ்சமாய் பணத்தினை சேர்த்துக் கொண்டு வீட்டுக்கு ஓடி வந்து செலுத்த வேண்டிய நீர் பட்டியலை எடுத்துக் கொண்டு வங்கியில் போய் வரிசையில் நின்று பணத்தை செலுத்தி விட்டு, சிட்டையை எடுத்துக் கொண்டு நீர் நிலையத்திற்கு சென்று பணம் செலுத்திய பட்டியலை காட்டி விட்டு ஒரு வகை திருப்தியோடு வீட்டுக்கு திரும்பி வர இரண்டு மணித்தியாலங்கள் கடந்து போயி விட்டன.

பசி வயிற்றை கிள்ள வேகத்துடன் வீட்டுக்கு சென்றவன் மனைவியிடம்,

"ஒரு மாதிரி பணம் செலுத்திட்டேன் இரண்டு மூனு மணித்தியாலத்தில் இணைப்பினை தந்திடுவாங்களாம்" என்று அவன் சொல்ல, அப்போதும் மனைவியின் முகத்தில் புன்னகை பூக்கவில்லை. அதனைக் கண்டவன் என்ன என்பதைபோல் அவளைப்பார்க்க அதனை விளங்கிக் கொண்ட அவன் மனைவி...

"இல்லைங்க நீங்க போய் கொஞ்ச நேரத்தில் மின் கட்டணம் செலுத்தயில்லேனு அதை துண்டிச்சிட்டுப் போயிட்டாங்க" என்று அவன் மனைவி சொல்ல தலை வெடிப்பதைப்போலிருந்தது அவனுக்கு.

**முற்றும்**

# பதற்றம் - மன அழுத்தத்தை குறைத்து நிம்மதி தரும் டீ



பெரும்பாலானவர்களுக்கு பலபல காரணங்களால் மன உளைச்சல் மற்றும் மன அழுத்தம் ஏற்படலாம். அதிலிருந்து வெளியே வர நாம் பல முயற்சிகளை செய்திருப்போம். பொதுவாக தியானம் மேற்கொள்வது மன அழுத்தத்திலிருந்து நம்மை விடுவிக்கும். இது பொதுவாக அனைவருக்கும் தெரிந்த விடயமே.

ஆனால், தேநீர் அருந்தினாலும் மன அழுத்தம் குறையும் என்பது உங்களில் எத்தனைபேருக்கு தெரியும்?

ஆம். பல நூற்றாண்டுகளாக, தேநீர் மிகவும் பயனுள்ள மன அழுத்தத்தை குறைக்கும் ஒரு பானமாக கருதப்படுகிறது. வீடு மற்றும் அலுவலகத்தில் ஏதாவது பிரச்சினை காரணமாக மன அழுத்தத்தில் இருந்தால், அமைதியான இருந்து ஒரு டீ சாப்பிடுவது அந்த பிரச்சினையிலிருந்து சற்று விடுவிக்க ஆறுதலாக இருக்கும்.

மன அழுத்தத்தை குறைக்கும் பண்புகள் தேநீரில் உள்ளன. குறிப்பாக தினமும் காலை, மாலை இரு வேளைகளிலும் ஒரு கப் மூலிகை தேநீர் பருகுவது அனைவருக்கும் நிம்மதியை அளிக்கும். குறிப்பாக, கவலை மற்றும் மன அழுத்தத்தால் பாதிக்கப்படுபவர்களுக்கு இது நல்ல பலன்களை தருகின்றன. அன்றாட மன அழுத்தத்தை நிர்வகிக்க உதவும் சில டீக்கள் பற்றி தெரிந்துகொள்ளுங்கள். இதோ...

### அஸ்வகந்தா தேநீர்

பல நூற்றாண்டுகளாக பாரம்பரிய மருத்துவத்தில் அஸ்வகந்தா பயன்படுத்தப்படுகிறது. இந்த மூலிகை ஒரு அடாப்டோஜென் ஆகும். இது உடல் மன அழுத்தத்திற்கு ஏற்ப உதவும் ஒரு இயற்கையான பொருளாகும்.

காதா அல்லது தேநீர் வடிவில் அவற்றை எளிதாக உட்கொள்ளலாம். அஸ்வகந்தா உடலில் உள்ள ஹோர்மோன்களை சமநிலைப்படுத்துகிறது. ஏனெனில் ஹோர்மோன் சமநிலையின்மை, அடிக்கடி மனநிலையில் ஏற்ற இறக்கம், எடை அதிகரிப்பு மற்றும் மன அழுத்தத்திற்கு வழிவகுக்கிறது.

அஸ்வகந்தா மனச்சோர்வு, பதற்றம் மற்றும் அறிவாற்றல் செயல்பாட்டை மேம்படுத்துவதற்கான மன அழுத்தத்தை குறைக்கும் பண்புகளைக் கொண்டுள்ளது.

### இலவங்கப்பட்டை பிளாக் டீ

இலவங்கப்பட்டையின் ஆசுவாசப்படுத்தும் நறுமணம் உடலை ரிலாக்ஸ் செய்து, மன அழுத்தத்தை குறைக்கும் என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

சூடான ஒரு கப் தேநீரில் இலவங்கப்பட்டையைச் சேர்ப்பது தேநீரின் சுவையை அதிகரிப்பது மட்டுமல்லாமல், மன அழுத்தத்தைப் போக்குவது உட்பட பல ஆரோக்கிய நன்மைகளையும் வழங்குகிறது.

இதயத் தடுப்பு, உடல் பருமன் மற்றும் உயர் இரத்த அழுத்தம் உள்ளிட்ட பல உடல்நலப் பிரச்சினைகளுக்கு மன அழுத்தம் முக்கிய காரணங்களில் ஒன்றாகும். இலவங்கப்பட்டையில் உள்ள ஆன்டி-ஆக்ஸிடன்ட்கள் மன அழுத்தத்தைப் போக்கும்.

### கிரீன் டீ

கிரீன் டீயின் ஆரோக்கிய நன்மைகள் உலகிற்கு இரகசியமல்ல. வளர்ச்சிதை மாற்றம், எடை இழப்பு மற்றும் நோய் எதிர்ப்பு சக்தியை மேம்படுத்துதல் போன்ற ஆரோக்கிய நன்மைகளை நமக்கு வழங்குகின்றன. தேயிலைச் செடியில் காணப்படும் தியானைன் என்ற அமினோ அமிலம், பதற்றத்திற்கு சிகிச்சையளிக்க அடிக்கடி பயன்படுத்தப்படுகிறது.

இது மன அழுத்தத்தை போக்க உதவுகிறது. ஜப்பானில் உள்ள ஒரு பல்கலைக்கழகத்தில் நடத்தப்பட்ட ஆய்வில்கூட, கிரீன் டீயை உட்கொள்ளும் மாணவர்கள் குறைந்த அளவிலான மன அழுத்தத்தை அனுபவிப்பதாகக் கண்டறிந்துள்ளனர்.

### துளசி தேநீர்

துளசியின் வழக்கமான நுகர்வு உடலின் செல்கள் மற்றும் உறுப்புகளை நச்சுத்தன்மையாக்க உதவுகிறது. துளசி மனதை அமைதிப்படுத்தவும் மன அழுத்தத்தை போக்கவும் உதவுகிறது.

அதுமட்டுமின்றி, இது மன அழுத்த எதிர்ப்பு செயல்பாடு மற்றும் நினைவாற்றல் மற்றும் அறிவாற்றல் செயல்பாட்டில் நேர்மறையான விளைவுகள் உட்பட பல உளவியல் நன்மைகளை வழங்குகிறது. துளசியால் நமக்கு எந்த பக்க விளைவுகளும் ஏற்படுவதில்லை. பொதுவாக பெரும்பாலானவர்களுக்கு இது பாதுகாப்பானது.

### லாவெண்டர்

நம்மில் பலருக்கு லாவெண்டர் கவலை, தலைவலி மற்றும் மன அழுத்தத்தைத் தணிக்கும் வாசனையாக இருக்கிறது. இது ஒரு அமைதியான விளைவைக் கொண்டுள்ளது.

லாவெண்டர் செடியின் உலர்ந்த மொட்டுகளில் இருந்து தயாரிக்கப்படும் லாவெண்டர் தேநீர், தசைகளை அமைதிப்படுத்துகிறது மற்றும் நரம்புகளை தளர்த்துகிறது.

மேலும், இது மன அழுத்தத்தை குறைக்கிறது மற்றும் தசை வலியை குறைக்கிறது.





# சுடிதார் தெரிவுகளில் கடைப்பிடிக்க வேண்டியவை

பெண்கள் பெரும்பாலும் நிறத்திற்கு ஏற்றாற்போல் தேர்வு செய்வதை காட்டிலும், அவரவர் உடல் வாகுக்கு தகுந்தாற் போல் சுடிதார்களை தேர்ந்தெடுக்க வேண்டியது அவசியம்.

முதலில் கறுப்பு நிறமாக உள்ளவர்கள், 'லைட்' நிறத்தில் உள்ள ஸ்டோன் வேலைப்பாடுகள் கொண்ட சுடிதாரை தேர்ந்தெடுக்கலாம்.

லைட் கிரீன், எலுமிச்சை நிறத்தில் உள்ள மஞ்சள் கலர், லைட் வைலட், லைட் சாண்டில், வைட் அல்லது ஏதாவது காமினேஷன் கலர் இது போன்ற லைட் நிறத்தில் உள்ள சுடிதார்களை தெரிவு செய்யுங்கள்.

கொஞ்சம் கலராகவோ அல்லது மாநிறமாகவோ உள்ளவர்கள் மெரூன், இங்க் புளூ, பிங்க் கலர், ஆஷ் கலர், வைட் அல்லது ஏதாவது காமினேஷன் கலரை தெரிவு செய்யலாம். கலராக உள்ளவர்களுக்கு டார்க் கலரில் எந்த நிற வகையான சுடிதார்கள் போட்டாலும் அழகாக தெரியும்.

பெரும்பாலும் நிறத்திற்கு ஏற்றாற்போல் தெரிவு செய்வதை காட்டிலும், அவரவர் உடல் வாகுக்கு தகுந்தாற்போல் சுடிதார்களை எடுக்க வேண்டும். குண்டாக உள்ளவர்கள் கொட்டன் சுடிதார் அணிந்தால், அது மேலும் அவர்களை குண்டாகத் தான் காட்டும்.

அதற்கு பதில், அவர்கள் நிறைய ஆடம்பர வேலைப்பாடுகள் செய்யாத சிம்பிளாக உள்ள சல்வார்களை அணிந்தாலே அழகாக தெரியும். ஒல்லியாக உள்ளவர்கள் கொஞ்சம் அதிக வேலைப்பாடுகள் கொண்ட கொட்டன் அல்லது சில்க் கொட்டன் சுடிதாரை தெரிவு செய்யலாம்.

அது அவர்களை சற்று குண்டாக காட்டும். வெயில் காலத்தில், சிந்தடிக் வகை சுடிதார்களை உபயோகிக்க வேண்டாம். அது மட்டுமல்ல, என்னதான் சுடிதார்களை தெரிவு செய்தாலும், அவர்கள் தைக்கும் முறை அந்த துணியின் அழகை கெடுத்து விடுகிறது.

முடிந்த வரையில், சுடிதார்களை அம்பர்லா மொடலில் தைத்தால், பார்ப்பதற்கு பூக்கள் விரிந்திருப்பது போன்று அழகாக தெரியும். தெரிவு செய்யும் சுடிதாரை, நாம் அழகாக தெரிய தைக்கும் முறையும் மிக மிக அவசியம்.

காரிகைக் களம்



# குழந்தைகளுக்கு கட்டாயப்படுத்தி உணவு கொடுக்காதீர்கள்

சாப்பிடாமல் அடம் பிடிப்பது குழந்தைகளின் சுபாவம். அதை மாற்ற முடியாமல் திண்டாடுவது அம்மாக்களின் சுபாவம் என்றாகிவிட்டது. அடம் பிடிக்கும் குழந்தைகளை ஊட்டச்சத்து மிக்க உணவு வகைகளை சாப்பிட வைப்பது சுலபமானதல்ல.

குழந்தைகளை சாப்பிடு, சாப்பிடு என்று கட்டாயப்படுத்தினால் அவர்கள் வழக்கமாக உண்ணும் அளவை விட குறைவாகவே சாப்பிடுகிறார்கள் என்று ஆராய்ச்சி முடிவு தெரிவித்துள்ளது.

பெற்றோர் இப்படி செய்தால் குழந்தைகள் உணவை வெறுக்கும் அமெரிக்காவில் உள்ள பென்சில்வேனியா மற்றும் அப்பலாச்சியன் பல்கலைக்கழகங்களைச் சேர்ந்தவர்கள் குழந்தைகளின் உணவு பழக்க, வழக்கங்கள் குறித்து ஆய்வு மேற்கொண்டனர்.

இந்த ஆய்வில் கலந்துகொண்ட 4 வயது குழந்தைகள் தங்கள் பெற்றோர்கள் சாப்பிடச் சொல்லி நச்சரித்ததால் வழக்கமாக அவர்கள் சாப்பிடும் அளவை விட குறைவாகவே சாப்பிட்டுள்ளனர்.

குழந்தைகளை நச்சரிப்பதால் அவர்களுக்கு உணவு மீது வெறுப்பு வருகிறது. அதனால் அவர்கள் குறைவாக சாப்பிடுகின்றனர். அவ்வாறு



குறைவாக சாப்பிட்டால் அவர்களின் உடல் நலம் தான் கெடும்.

பெரியவர்களுக்கு ஏற்ற சுவையில் சமைத்து விட்டு, அதை சாப்பிடும்படி குழந்தைகளை மிரட்டாதீர். உங்கள் குழந்தைகள் எதை சாப்பிட விரும்புகிறார்கள் என்பதைக் கேட்டு சமைத்து கொடுத்தால், அவர்கள் வேண்டாம் என்று சொல்ல வாய்ப்பிருக்காது.

அவர்கள் கேட்பதெல்லாம் சமைக்க நேரமில்லை என்றால், அவற்றை விடுமுறை நாட்களில் சமைப்பதாக கூறலாம். பெற்றோர்கள் நச்சரிக்காமல் இருந்தால் அவர்களுக்கு சாப்பிட்டு பழக்கம் இல்லாத உணவைக் கொடுத்தாலும் அவர்கள் நன்றாக சாப்பிடுவார்கள் என்று அந்த ஆய்வு முடிவு கூறுகிறது.

குழந்தைகள் மனநல மருத்துவர் ரிச்சர்ட் உல்ப்சன் கருத்துப்படி, குழந்தைகளை சாப்பிடச் சொல்லி நச்சரிக்கவும் கூடாது. அதே சமயம் அவர்களாகவே சாப்பிடட்டும் என்று விட்டு விடவும் கூடாது. அன்பாகக் கூறினால் அவர்கள் கேட்டுக் கொள்வார்கள்.



# நகப்பூச்சு நல்லதல்ல

கை மற்றும் கால் விரல்களின் நகங்களை நகப்பூச்சு (நெயில் பொலிஷ்) கொண்டு அழகுபடுத்தி பார்ப்பது பெரும்பாலான பெண்களுக்கு பிடித்தமான பொழுதுபோக்காக இருக்கிறது. உடுத்தும் உடைகளுக்கு பொருத்தமாகவும் நெயில் பொலிஷ்களை பூசி அழகு பார்ப்பார்கள்.

அதிலிருந்து வெளிப்படும் வாசனையும் பலருக்கு பிடிக்கும். அதனை நுகர்ந்து பார்த்து ரசிக்கவும் செய்வார்கள். ஆனால், நெயில் பொலிஷ்கள் உடல் நலத்திற்கு தீங்கு விளைவிக்கும் தன்மை கொண்டவை என்பதை பலரும் அறிவதில்லை. அதன் வாசனை உடல் ஆரோக்கியத்திற்கு கேடு பயக்கும்.

கூடுமானவரை நெயில் பொலிஷை அடிக்கடி பயன்படுத்துவதை தவிர்க்க வேண்டும். சில வகை நெயில் பொலிஷ்களை பயன்படுத்தும்போது நகங்கள் உலர்ந்து மஞ்சள் நிறத்திற்கு மாறத்தொடங்கிவிடும். அதில் சேர்க்கப்படும் பார்மாலிடிகைடு, டிபூட்டல் பத்தாலேட், டோலுன் போன்ற இரசாயனங்கள் உடல் நலத்திற்கு பாதிப்புகளை ஏற்படுத்தக் கூடியவை.

மென்மை தன்மையை தக்கவைப்பதற்கும், நிறங்களின் பொலிவுக்கும் டோலுன் பயன்படுத்தப்படுகிறது. எனினும், இது நகத்தின் வழியே ஊடுருவி உடல்நல பாதிப்புகளை ஏற்படுத்திவிடும். தொடர்ந்து பயன்படுத்தும்போது நரம்பு மண்டலம், மூளை போன்றவை பாதிப்புக்குள்ளாகக்கூடும். தலைவலி, மயக்கம், தலைச்சுற்று, குமட்டல், உடல் பலவீனம் போன்ற பிரச்சினைகளையும் எதிர்கொள்ள நேரும்.

நெயில் பொலிஷ்களின் ஆயுட்காலத்தை நீடிப்பதற்கு பார்மாலிடிகைடு எனும் இரசாயனம் சேர்க்கப்படுகிறது. ஒவ்வாமை பிரச்சினை கொண்டவர்கள் பார்மாலிடிகைடு கலந்திருக்கும் நெயில் பொலிஷை தவிர்ப்பது நல்லது. தோல் நோய்கள், மன அழுத்தம், புற்றுநோய், இதயம் சார்ந்த நோய் பாதிப்புகளும் ஏற்பட காரணமாகிவிடும்.

டிபூட்டல் பத்தாலேட் என்ற இரசாயனம் சாயங்கள் மற்றும் பெயிண்டிங் போல செயல்பட்டு நெயில் பொலிஷுக்கு பொலிவு சேர்க்கும் தன்மை கொண்டது. இதுவும் நாளமில்லா சுரப்பிகள், சுவாச கோளாறுகள் சார்ந்த பிரச்சினைகளுக்கு வழிவகுக்கும். ஆதலால் இத்தகைய இரசாயனங்கள் கலந்த நெயில் பொலிஷ்களை தவிர்க்க வேண்டும்.

'5 பிரீ நெயில் பொலிஷ், 3 பிரீ நெயில் பொலிஷ்' போன்ற இரசாயன கலப்பு அதிகம் இல்லாத நெயில் பொலிஷ்களை தேர்ந்தெடுத்து பயன்படுத்தலாம். நெயில் பொலிஷ்களை அடிக்கடி உபயோகப்படுத்தாமல் விசேச நாட்களில் மட்டும் பயன்படுத்தலாம். அன்று இரவே நெயில் பொலிஷை அகற்றி நகங்களை சுத்தப்படுத்தி விடுவதும் நல்லது.

LK Newspapers Viber Community



# இணையத் தொடரில் நடிக்கும் பிரசன்னா

தமிழ் 5 ஸ்டார் படம் மூலம் நடிகராக அறிமுகமானவர் பிரசன்னா. இப்படத்தை தொடர்ந்து பல படங்களில் கதாநாயகனாக நடித்தார். மாபியா படத்தில் வில்லன் வேடத்திலும் நடித்திருந்தார்.

தற்போது இணையத் தொடரில் நடிக்கவிருக்கிறார் பிரசன்னா. கொமடி, டிராமா இணையத் தொடராக உருவாகும் இத்தொடரில் பிரசன்னாவுடன் SPB சரண், தன்யா பாலகிருஷ்ணா, கனிகா, சுரேஷ் சக்ரவர்த்தி மற்றும் பல பிரபல நட்சத்திரங்கள் இணைந்து நடிக்கின்றனர். சென்னையை சுற்றியுள்ள பகுதிகளில் இத்தொடரின் படப்பிடிப்பு நடைபெற்று வருகிறது. எதிர்வரும் பெப்ரவரி மாதம் இத்தொடரின் படப்பிடிப்பு முடிவடையவுள்ளது. இந்தப் புதிய தமிழ் இணையத் தொடரை இயக்குனர் பாலாஜி மோகனின் உதவி இயக்குனராக பணிபுரிந்த, அறிமுக இயக்குனர் விக்னேஷ் விஜயகுமார் எழுதியிருக்கிறார்.



# மீண்டும் களமிறங்கும் மீரா ஜாஸ்மின்

"காதல் பிசாசே காதல் பிசாசே..." என்று இளைஞர்களை முணுமுணுக்க வைத்த பாடலின் மூலம் அறியப்பட்டவர் நடிகை மீரா ஜாஸ்மின். இவர் அறிமுகமான ரன் படத்தை தொடர்ந்து புதிய கீதை, ஜி, சண்டகோழி, ஆயுத எழுத்து போன்ற பல மொழிப் படங்களில் நடித்து முன்னணி நடிகையாக வலம் வந்தார்.

இவர் தமிழில் கடைசியாக 2014 இல் வெளிவந்த விஞ்ஞானி என்ற படத்தில் நடித்தார். மலையாளத்தில் சில படங்கள் நடித்து வந்தாலும் தமிழில் இதுவே அவர் கடைசியாக நடித்த திரைப்படம். இந்நிலையில், அவர் நீண்ட இடைவேளைக்கு பிறகு மீண்டும் களமிறங்கப்போவதாக அறிவித்துள்ளார்.

மீரா ஜாஸ்மின் தற்போது பல தமிழ்ப் படங்களில் ஒப்பந்தம் ஆகியுள்ளதாகவும் விரைவில் அந்தப் படங்கள் குறித்து அதிகாரபூர்வ அறிவிப்பு வெளியாகும் எனவும் தகவல் வெளியாகவுள்ளது. மேலும், இயக்குனர் சத்யன் அந்திக்காட் இயக்கிய 'மகள்' படத்தில் நடித்துள்ளார். அவருடைய தற்போதைய புகைப்படம் சமூக வலைத்தளங்களில் வைரலாக பரவி வருகிறது.



# சம்பளத்தை உயர்த்திய அனுபமா!

சினிமா துறையில் கவர்ச்சிக்கும் முத்தக்காட்சிகளுக்கும் மறுத்த பல நடிகைகள் அவர்களுடைய வாய்ப்பை இழந்து பிறகு அது போன்ற காட்சிகளில் நடித்திருக்கின்றனர். இந்தப் பட்டியலில் நடிகை அனுபமா பரமேஸ்வரனும் தற்போது இணைந்துள்ளார்.

2015இல் வெளியான பிரேமம் படத்தின் மூலம் அறிமுகமாகி முன்னணி நடிகைகளில் ஒருவராக சேர்ந்தவர் அனுபமா. இவர் தனுஷ் நடித்த 'கொடி' படத்தில் அவருக்கு ஜோடியாக நடித்தார். பல மொழி படங்களில் நடித்து முன்னணி கதாநாயகியாக வலம் வந்து கொண்டிருக்கிறார்.

திரிவிக்ரம் இயக்கத்தில் வெளியான 'அ ஆ' தெலுங்கு படத்தில் சமந்தாவும் அனுபமா பரமேஸ்வரனும் கதாநாயகியாக நடித்தனர். நல்ல வரவேற்பைப் பெற்ற அந்த படம் அனுபமாவிற்கு முக்கிய படமாக அமைந்தது. அதன் பிறகு அவருக்கு வந்த பல படவாய்ப்புகளில் கதாநாயகனுடன் நெருக்கமாக நடிக்கும் காட்சிகள் மற்றும் முத்தக்காட்சிகள் இருந்ததால் அப்படங்களை அவர் நிராகரித்ததாக கூறப்படுகிறது.

தற்போது பிரபல தயாரிப்பாளர் தில் ராஜுவின் சகோதரர் மகன் கதாநாயகனாக நடித்து பொங்கலுக்கு வெளியான படம் ரவுடி பாய்ஸ். இப்படத்தில் அவருக்கு ஜோடியாக அனுபமா மருத்துவக்கல்லூரி மாணவியாக நடித்துள்ளார். இந்தப் படம் பொங்கலுக்கு திரையரங்கில் வெளியாகி இளம் ரசிகர்களின் மனதை கொள்ளையடித்து வருகிறது.

இந்தப் படத்தில் அனுபமா முத்தக்காட்சியில் நடித்திருக்கிறார். இந்த முத்தக் காட்சிக்காக பிரத்தியேகமாக அவர் ரூ.50 இலட்சம் வாங்கியதாக கூறப்படுகிறது. முதலில் இதில் நடிக்க மறுத்த அவர் ரூ.50 இலட்சம் தருவதாக சொன்னதும் ஒப்புக்கொண்டாராம்.

அரைகுறை ஆடையில் அதிக கவர்ச்சி காட்டுவது, முத்தக் காட்சி போன்றவற்றில் நடிக்க இதுவரை மறுத்துவந்த அனுபமா பரமேஸ்வரன் தற்போது முத்தக் காட்சியில் நடித்துள்ளார்.






# சாதனை படைக்க காத்திருக்கும் ரகுல் ப்ரீத் சிங்

இந்த ஆண்டு அதிக படங்களில் நடித்துள்ளார் ரகுல் ப்ரீத் சிங். அடுத்தடுத்து அவர் நடித்துள்ள 7 படங்கள் வரிசையாக வெளிவரவிருக்கின்றன. இதில் 6 பொலிவூட் படங்கள்.

ஆயுஷ்மானுடன் டாக்டர் ஜி, அமிதாப் பச்சன் மற்றும் அஜய் தேவ்கனுடன் ரன்வே 34, அஜய் தேவ்கன், சித்தார்த் மல்ஹோத்ராவுடன் தேங்க் காட், இது தவிர சத்ரிவாலி, அட்டாக் மற்றும் அக்ஷய் குமாருடன் பெயரிடப்படாத படம் என பொலிவூட் படங்கள் வரிசை கட்டுகின்றன. இது தவிர சிவகார்த்திகேயனுடன் நடித்திருக்கும் அயலான் இந்த ஆண்டு வெளிவருகிறது.

இந்தியன் 2 வில் நடித்தாலும் அந்தப் படம் இந்த ஆண்டு வெளிவருவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை. அப்படி வெளிவந்தால் இந்த ஆண்டு ரகுல் ப்ரீத் சிங் நடித்த 8 படங்கள் வெளிவரும்.

இதுகுறித்து அவர் கூறியிருப்பதாவது: 2022 எனது சிறந்த வருடங்களில் ஒன்றாக இருக்கும் என்று நம்புகிறேன். 7 படங்கள். இந்தியில் 6 படங்கள் ரிலீஸுக்கு வரிசையாக இருப்பதால் இவ் ஆண்டை ஆவலுடன் பார்க்கிறேன். படங்கள் வெளிவரத் தொடங்கியதும், ஒவ்வொரு கதாபாத்திரமும் ஒன்றுக்கொன்று மிகவும் வித்தியாசமாக இருப்பதையும், ஒவ்வொரு படமும் வெவ்வேறு வகைகளாக இருப்பதையும் காணலாம் என்று கூறியுள்ளார்.



# விஜய்யிடம் நான் கற்றுக்கொண்ட பாடம்
## பிரியங்கா சோப்ரா

தனது திரை வாழ்க்கையில் தாக்கத்தை ஏற்படுத்தியவர்களில் நடிகர் விஜய் மிகவும் முக்கியமானவர் என்று பிரியங்கா சோப்ரா நெகிழ்ச்சியுடன் நினைவுகூர்ந்துள்ளார்.

2000ஆம் ஆண்டு உலக அழகியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் பிரியங்கா சோப்ரா. அதன் பிறகு 2002ஆம் ஆண்டு மஜீத் இயக்கத்தில் விஜய் நடிப்பில் வெளியான 'தமிழன்' படத்தின் மூலம் நடிகையாக அறிமுகமானார். பின்பு பொலிவூட்டில் அறிமுகமாகி, ஹொலிவூட் படங்கள், வெப் தொடர்கள் என நடித்து தற்போது உலகளவில் மிகப் பிரபலமான நடிகையாக வலம் வருகிறார் பிரியங்கா சோப்ரா.

சமீபத்தில் அவர் அளித்த பேட்டி ஒன்றில் தன் வாழ்க்கை குறித்த பல்வேறு விஷயங்களை பகிர்ந்து கொண்டார். மேலும், அப்பேட்டியில் நடிகர் விஜய் குறித்து பிரியங்கா சோப்ரா பேசியுள்ளார். அதில் அவர்,

"முதன்முதலில் நான் நடித்த சில படங்களில் தமிழ்ப் படமான 'தமிழன்' மற்றும் 'அண்டாஸ்', 'தி ஹீரோ' ஆகிய இரு இந்திப் படங்களும் அடங்கும். அன்றைய காலகட்டத்தில் அவை பெரிய படங்கள். நடிப்பு என்பது நாம் அணியும் ஆடைகளும் மேக்கப்பும் மட்டுமே என்ற எண்ணத்தோடு படப்பிடிப்புத் தளத்துக்குள் நடந்து சென்றது எனக்கு நினைவிருக்கிறது.

எனக்கு தமிழ் மொழி தெரியாததால் 'தமிழன்' திரைப்படத்தில் நடித்தது எனக்கு மிகவும் கடினமான ஒன்றாக இருந்தது. நான் வசனங்களைக் கேட்டு, அவற்றை மனப்பாடம் செய்து, அதன் அர்த்தத்தை புரிந்துகொண்டு அதன் பிறகுதான் என்னுடைய வரிகளை பேசுவேன். ஆனால், என்னுடைய சக நடிகர் விஜய் நடிப்பதை பார்த்துக் கொண்டிருப்பது எனக்கு பிடிக்கும். என்னுடைய திரை வாழ்க்கையின் ஆரம்பத்தில் தாக்கத்தை ஏற்படுத்திய சிலரில் அவரும் ஒருவர்.

விஜய் படப்பிடிப்புத் தளத்தில் மிகவும் பணிவுடன் இருப்பார். ஒருமுறை படப்பிடிப்புத் தளத்துக்குள் வந்துவிட்டால் அதன் பிறகு வெளியே செல்லவே மாட்டார். அதை இப்போது நானும் கடைபிடித்து வருகிறேன். நீண்ட நேரம் காத்திருக்க வேண்டிய சூழல் என்றால் மட்டுமே தவிர மிகவும் அரிதாகத்தான் என்னுடைய கேரவனுக்குத் திரும்பிச் செல்வேன்" என்று பிரியங்கா சோப்ரா கூறியுள்ளார்.



# வெற்றியுடன் இணையும் ஷிவானி

'பகல் நிலவு' சீரியலில் அறிமுகமாகி பின்னர் பிக்பொஸ் நிகழ்ச்சியில் களமிறங்கி பிரபலமடைந்தவர் நடிகை ஷிவானி நாராயணன். அதன் பிறகு கமல்-விஜய் சேதுபதி நடிக்கும் 'விக்ரம்' படத்தில் ஒப்பந்தமாகியதாக தகவல் வெளியானது. இவர் தற்போது சில படங்களில் தொடர்ந்து நடித்து வருகிறார்.

இந்நிலையில் இவர் '8 தோட்டாக்கள்' படத்தின் மூலம் அறிமுகமாகி 'ஜீவி' போன்ற சில படங்களில் நடித்து பிரபலமடைந்த நடிகர் வெற்றியுடன் அடுத்த படத்தில் கைகோர்த்திருக்கிறார். அறிமுக இயக்குநர் செல்வக்குமார் இயக்கும் இப்படத்திற்கு 'பம்பர்' என பெயரிட்டுள்ளனர்.

கேரள மாநில லொட்டரியை மையமாகக் கொண்டு 'பம்பர்' திரைப்படம் உருவாகிவருவதாக கூறப்படுகிறது. வேதா பிக்சர்ஸ் தயாரிக்கும் இந்தப் படத்தின் முதல் கட்டப் படப்பிடிப்பு கேரள மாநிலத்தை சுற்றி படமாக்கியுள்ளதாகவும் அடுத்தக்கட்ட படப்பிடிப்பு விரைவில் தொடங்க இருப்பதாகவும் கூறியுள்ளனர். வெற்றி, ஷிவானியுடன் இணைந்து ஹரீஷ் பேரடி, தங்கதுரை போன்ற பலர் நடிக்கின்றனர்.

கோவிந்த் வசந்தா இசையமைக்கும் இந்தப் படத்திற்கு கார்த்திக் நேத்தா பாடல் வரிகள் எழுதுகிறார். ஒளிப்பதிவாளராக வினோத் ரத்தினசாமி இணைந்திருக்கிறார்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7